தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வலர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009


# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com


MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337

CHENNAI | Volume- 3 | Issue:250 | 26-03-2026 | வியாழக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

## இன்றைய பஞ்சாங்கம்

26.03.2026 பங்குனி 12
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.16

திதி:
இன்று பிற்பகல் 2.56 வரை அஷ்டமி பின்பு நவமி.

நட்சத்திரம்:
இன்று இரவு 7.05 வரை திருவாதிரை பின்பு புனர்பூசம்.

யோகம் :
இன்று அதிகாலை 3.16 வரை சௌபாக்யம் பின்பு சோபனம்.

கரணம்
இன்று அதிகாலை 4.03 வரை பத்திரை பின்பு பிற்பகல் 2.56 வரை பவம் பின்பு பாலவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.15 வரை சித்த யோகம் பின்பு இரவு 7.05 வரை யோகம் சரியில்லை பின்பு அமிர்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று மாலை 7.05 வரை அனுஷம் பின்பு கேட்டை

நல்ல நேரம்
காலை 10.30 – 11.30.
மாலை 12.30 – 1.30

இராகு காலம்
பிற்பகல் 1.30 – 3.00.

எமகண்டம்
காலை 6.00 – 7.30.

குளிகை
காலை 9.00 – 10.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# அதிமுக கூட்டணி கட்சிகள் போட்டியிடும் தொகுதிகள் வெளியீடு

**சென்னை, மாரச 26:**

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த மாதம் 23ம் தேதி நடைபெற உள்ளது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு முடிவுகள் அன்றே அறிவிக்கப்பட உள்ளன.

அதேவேளை, தமிழக சட்டசபை தேர்தலில் 4 முனைப்போட்டி நிலவுகிறது. பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இதுவரை பா.ஜ.க.வுக்கு 27, பா.ம.க.வுக்கு 18, அ.ம.மு.க.வுக்கு 11, த.மா.கா.வுக்கு 5, இந்திய ஜனநாயக கட்சிக்கு 2, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் 1, புரட்சி பாரதம் 1 தொகுதியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

கூட்டணிக்கு தலைமை தாங்கும் அ.தி.மு.க. எஞ்சிய 169 தொகுதிகளில் போட்டியிட உள்ளது. இந்த நிலையில், அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுக்கு எந்தெந்த தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற பட்டியலை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சென்னைராயப்பேட்டையில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் வெளியிட்டார்.



அதன் விவரம் வருமாறு:-

**பாஜக (27 தொகுதிகள்)**
* மயிலாப்பூர்
* தளி
* முடக்குறிச்சி
* உதகமண்டலம்
* அவிநாசி
* திருப்பூர் தெற்கு
* கோவை வடக்கு
* கந்தர்வக்கோட்டை
* புதுக்கோட்டை
* திருப்பத்தூர்
* மதுரை தெற்கு
* சாத்தூர்
* திருச்செந்தூர்
* வாசுதேவநல்லூர்
* ராதாபுரம்
* நாகர்கோவில்
* விளவங்கோடு
* ஆவடி
* திருவண்ணாமலை
* தஞ்சாவூர்
* திருவாரூர்
* அறந்தாங்கி
* மானாமதுரை
* ராமநாதபுரம்
* குளச்சல்
* பத்மநாபபுரம்
* ராசிபுரம் (தனி)

**பாமக (18 தொகுதிகள்)**
* சேலம் மேற்கு
* தர்மபுரி
* பென்னாகரம்
* விக்கிரவாண்டி
* சோளிங்கர்
* மயிலாடுதுறை
* திருப்போரூர்
* உத்திரமேரூர்
* ஜெயங்கொண்டம்
* போளூர்
* செஞ்சி
* விருதாச்சலம்
* ரிஷிவந்தியம்
* காட்டுமன்னார்கோவில்
* கீழ்வேளூர்
* பெரம்பலூர்
* சேலம் வடக்கு
* அம்பத்தூர்

**அமமுக (11 தொகுதிகள்)**
* பெரியகுளம்
* மன்னார்குடி
* திருவையாறு
* காரைக்குடி
* திருப்பத்தூர்
* நாங்குநேரி
* ஒட்டப்பிடாரம்
* திருச்சி மேற்கு
* சைதாப்பேட்டை
* பூந்தமல்லி
* மடத்துக்குளம்

**தமாகா (5 தொகுதிகள்)**
* ஒட்டன்சத்திரம்
* ஈரோடு மேற்கு
* ராணிப்பேட்டை
* கிள்ளியூர்
* கும்பகோணம்

**இந்திய ஜனநாயக கட்சி (2 தொகுதிகள்)**
* பல்லாவரம்
* குன்னம்

**தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் (1 தொகுதி)**
* ராஜபாளையம்

**புரட்சி பாரதம் (1 தொகுதி)**
* கே.வி.குப்பம்

# "திமுக 175 தொகுதிகளில் உதய சூரியன் சின்னத்தில் போட்டி": மு.க.ஸ்டாலின்

**சென்னை, மார்ச் 26:**



திமுகதொண்டர்களுக்கு மு.க.ஸ்டாலின் அவர் எழுதியுள்ள கடிதத்தில், "பத்தாண்டுகால படுமோசமான அதிமுக ஆட்சியினால் தமிழ்நாட்டின் அனைத்துத் துறைகளிலும் ஏற்பட்ட சீரழிவுகளைச் சரிசெய்து, கடந்த ஐந்தாண்டுகால திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டின் வளர்ச்சியை இந்திய அளவில் உயர்த்திக் காட்டியிருக்கிறோம். இந்தப் பெரும் முயற்சிக்கும் சாதனைக்கும் துணை நின்ற கொள்கைவழித் தோழமை இயக்கத்தினரின் பங்களிப்பு மிக மிக முக்கியமானது. அதனை மதித்து உணர்ந்தே இந்த முறையும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகள் ஜனநாயகப்பூர்வமாக நடைபெற்றன.

நமது கூட்டணியில் புதிய கட்சிகள் இணைந்துள்ள காரணத்தால், உரிய அளவில் தொகுதிகளைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டிய சூழலும் தேவையும் இருப்பதை நம்முடன் தொடர்ந்து பயணிக்கும் தோழமைக் கட்சிகளான விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மதிமுக, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உள்ளிட்ட அனைத்து இயக்கங்களின் தலைவர்களுடனும் ஆலோசித்தே தொகுதிப் பங்கீட்டுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று, ஒப்பந்தங்கள் நிறைவேறியுள்ளன.

நம்பிக்கையும் செல்வாக்கும் வெற்றியாக விளைவதற்கு நாம் அடுத்த 4 வாரங்களும் அயராமல் உழைத்திட வேண்டும். மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தொகுதிப் பங்கீட்டு நிறைவில், தங்கள் கட்சி சின்னத்தில் போட்டியிடும் தோழமைக் கட்சிகளின் தொகுதிகள் போக, தி.மு.க வேட்பாளர்கள் மற்றும் தி.மு.க. சின்னத்தில் போட்டியிடும் தோழமைக் கட்சி வேட்பாளர்களுமாக இணைந்து 2026 சட்டமன்றத் தேர்தல் களத்தில், 175 இடங்களில் உதயசூரியன் களம் காண்கிறது.

உதயசூரியனும் நமது சின்னம்தான். கை, முரசு, கதிர் அரிவாள், அரிவாள் சுத்தி நட்சத்திரம், பானை, ஏணி ஆகியவையும் நமது சின்னங்கள்தான். 234 தொகுதிகளும் நம்முடைய தொகுதிகள்தான். மதவாத அரசியலையும், தமிழ்நாட்டை வஞ்சிக்கும் துரோகத்தையும் எதிர்த்து நின்று, எல்லார்க்கும் எல்லாம் என்கிற ஆட்சி தொடர்ந்திடவும், இந்தியாவின் ஜனநாயகத்தைக் காத்திடவும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கான வெற்றிக் களத்தில் தோழமைக் கட்சிகளுடன் இணைந்து நின்று, விரைந்து பணியாற்றுவீர். கவனம் சிதறாது இலக்கை வெல்வோம்!" என்று அவர் தெரிவித்துள்ளார்.

# சோனியா காந்திக்கு உடல்நிலை பாதிப்பு - ராகுல் காந்தியின் கேரள பிரச்சார பயணம் ரத்து



**புதுடெல்லி, மார்ச் 26:**

காங்கிரஸ் மூத்த தலைவரும், அக்கட்சியின் நாடாளுமன்றக் குழு தலைவருமான சோனியா காந்தி, உடல்நிலை பாதிப்பு காரணமாக புதுடெல்லியில் உள்ள சர் கங்காராம் மருத்துவமனையில் நேற்று அனுமதிக்கப்பட்டார். அங்கு மருத்துவர்கள் குழு அவருக்கு சிகிச்சை அளித்து வருகிறது.

பருவநிலை மாற்றத்தின் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதை சோனியா காந்தி உணர்ந்ததாகவும், அதன் காரணமாக அவர் மருத்துவமனைக்குச் சென்றதாகவும் பிடிஐ செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

சோனியா காந்தியின் உடல்நிலையில் கவலைக்குரிய தீவிர பாதிப்புகள் ஏதும் இல்லை என்றும், அவரை மருத்துவர்கள் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதையொட்டி ராகுல் காந்தி தனது பயணத்தை ரத்து செய்துள்ள நிலையில், அவருக்குப் பதிலாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கோழிக்கோடு பொதுக்கூட்டத்தில் உரையாற்றுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் மாநில அளவிலான காங்கிரஸ் முக்கிய தலைவர்கள் பலரும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# திருநர் உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தைத் திணிக்கக் கூடாது

**சென்னை, மார்ச் 26:**

"திருநர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் என இயற்றப்பட்டுள்ள சட்டத்தைத் திருநர் சமுதாயத்தினரே எதிர்க்கிறார்கள் என்றால், அது ஏன் என்று ஆராய வேண்டுமே ஒழிய, அதனைத் திணிக்கக் கூடாது," என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "யாருடைய உரிமைகளை, வாழ்வைப் பாதிக்கிறதோ, அவர்களது கருத்துகளையே கேட்காமல் திருநர் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டத்தில் திருத்தங்களைத் திணிக்கக் கூடாது.

திருநர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் என இயற்றப்பட்டுள்ள சட்டத்தைத் திருநர் சமுதாயத்தினரே எதிர்க்கிறார்கள் என்றால், அது ஏன் என்று ஆராய வேண்டுமே ஒழிய, அதனைத் திணிக்கக் கூடாது.

ஒன்றிய பாஜக அரசு இம்முயற்சியை நிறுத்தி, திருநர்களுடன் கலந்தாலோசித்து, அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் திருநர்களின் உண்மையான இசைவைப் பெற முயல வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு கடந்த மார்ச் 13-ஆம் தேதி மக்களவையில் திருநர் உரிமைகள் திருத்தச் சட்ட மசோதாவை தாக்கல் செய்துள்ளது. இந்த மசோதாவில் உள்ள சில அம்சங்கள் திருநங்கைகளின் அடிப்படை உரிமைகளைப் பறிக்கும் வகையில் இருப்பதாகக் கூறி, எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. இந்நிலையில், மசோதாவுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலினும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அப்படி என்ன இருக்கிறது? இந்தச் சட்டத் திருத்தம் திருநர்களின் சுய அடையாள உரிமையை பறிப்பதாக இருப்பதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

அதாவது 2019 சட்டத்தில் இருந்த பாலினம் சார்ந்த 'self-identification' முறையை நீக்கி, மருத்துவ குழு சான்றிதழ் அவசியம் என மாற்றப்பட்டுள்ளது. ஒருவர் தனது பாலின அடையாளங்களை தேர்வு செய்வதென்பது இயற்கைக்கு அப்பாற்பட்டு, அவர்களின் பாலின மாற்றம் குறித்து மருத்துவர்களிடம் சோதித்து சான்றாக பெற வேண்டும் என வலியுறுத்துகிறது. மேலும், அதன் பிறகு மாவட்ட ஆட்சியரிடம் விண்ணப்பித்து தான் திருநர் அடையாள உரிமை பெற வேண்டும் எனக் கூறுகிறது இச்சட்டம்.

அதுமட்டுமல்லாது, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு வழங்கும் பிரிவு இந்த மசோதாவில் மறுத்துள்ளதாகவும் திருநர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்நிலையில், முதல்வர் ஸ்டாலின்தனதுகண்டனத்தைப் பதிவு செய்துள்ளார்.

# சிகிச்சைக்கு பணம் கொண்டு சென்றால் வாட்ஸ் அப் ஆதாரம் போதும்: அர்ச்சனா பட்நாயக் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 26:**

தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக ஏப்ரல் 23-ந் தேதி சட்டசபை தேர்தல் நடக்கிறது. வேட்புமனு தாக்கல் வருகிற 30-ந் தேதி தொடங்குகிறது. ஓட்டு எண்ணிக்கை மே 4-ந் தேதி நடக்கிறது. தேர்தல் நடத்தை விதிகள் அமலானதை தொடர்ந்து வாகன சோதனை கள் தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருக்கும்போது அரசு, அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோரின் அனைத்து நடவடிக்கைகளிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அதன்படி பொதுமக்கள் யாரும் தேர்தல் நடவடிக்கைகள் முடியும்வரை அதாவது வரும் மே 6-ந் தேதிவரை தனிநபராக ரூ.50 ஆயிரத்துக்கு மேல் தொகையை எடுத்துச் செல்ல முடியாது. அப்படி கொண்டு செல்வதாக இருந்தால், அதற்கான ஆதாரங்களை கையில் வைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் பறக்கும்படையினர் அந்தத் தொகையை பறிமுதல் செய்து வருகின்றனர்.

நேற்று காலை வரை உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.151.93 கோடி மதிப்பிலான ரொக்கம் மற்றும் தங்கம், வெள்ளி, இலவச பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டு உள்ளன. அவற்றில் தங்கம், வெள்ளி ஆகியவற்றின் மதிப்பு மட்டும் ரூ.92.02 கோடியாகும். ரூ.72 லட்சம் மதிப்புள்ள மதுபானங்களும் பிடிபட்டுள்ளன. தேர்தல் நடத்தை விதிகளால் பணம் கொண்டு செல்வதில் மக்கள் இன்னல்களை



சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில், மருத்துவ சிகிச்சைக்கு எடுத்துச்செல்லப்பட்ட பணம் பறிமுதல் செய்யப்பட்டது தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:-

மக்களை தொல்லை செய்யக்கூடாது என பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் அளிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் கொண்டு செல்லும் பணத்தை பறிமுதல் செய்யக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மருத்துவக் காரணத்திற்காக பொதுமக்கள் ரூ.50,000க்கு மேல் பணம் எடுத்துச் சென்றால் அதற்கான ஆதாரத்தை வாட்ஸ்-அப்பில் கூட காண்பிக்கலாம்; அவ்வாறு காண்பித்தால் பணம் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவர்.

ரூ.50,000க்கு மேல் அனுமதிக்கவேண்டும் என்ற வணிகர்களின் கோரிக்கையை தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளோம். நகர்ப்புற பகுதிகளில் வாக்குப்பதிவை அதிகரிக்க தேர்தல் ஆணையம் பல்வேறு முயற்சிகளை எடுக்கிறது; தமிழகத்தில் எப்போதும் நகர்ப்புறங்களில் வாக்குப்பதிவும் மிகக் குறைவாகவே இருக்கிறது. வெறுப்பு பிரசாரங்களை கண்காணிக்க பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Legal Notice
- Tender Notice
- Society Notice
- Loss of Share
- Merger
- Acquisition
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர் 9337501889, 7789941004
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

## திருக்குறள் குறள்-570

**கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல் அதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை**



கடுங்கோலாகிய ஆட்சிமுறை கல்லாதவரைத் தனக்கு அரணாகச் சேர்த்துக் கொள்ளும், அது தவிர நிலத்திற்கு சுமை வேறு இல்லை.

## சிந்திக்க ஒரு நொடி



சிலையை வடிப்பது தான் உன் வெற்றி என்றால்.... கல்லை காயப்படுத்து கிறோமே என்று மனம் வருந்தாதே

**உஷா முத்துராமன்**

## பங்குனி பிரமோற்சவம்



ஸ்ரீ பரிமள ரங்கநாத சுவாமி தேவஸ்தானம் திருஇந்தலூர் பங்குனி பிரமோற்சவம் 2026

## ஆதிக்கர நந்தினி புறப்பாடு.



இரண்டாம் நாள் காலை மயிலாப்பூர் கபாலீஸ்வர் கோவில் ஆதிக்கர நந்தினி புறப்பாடு.

## ஈரோடு தேர்தல் விழிப்புணர்வு முகாம்



ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி இ.ஆ.ப ஓய்வூதியர் சங்க அலுவலகம் வருகை புரிந்து வருகை பதிவேட்டில் கையப்பமிட்டார். பின்னர் தேர்தல் விழிப்புணர்வு மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் ஓய்வூதியர்கள் அரசு அலுவலர்கள் பொதுமக்கள்100மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள்.

# காட்பாடியில் வேலூர் வடக்கு மாவட்ட திமுக தேர்தல் அலுவலகம் திறப்பு: அமைச்சர் துரைமுருகன் பங்கேற்பு!

**வேலூர் மார்ச் 26:**



வேலூர் மாவட்டம், காட்பாடியில் சித்தூர்-கடலூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் வேலூர் வடக்கு மாவட்ட திமுக தேர்தல் அலுவலகம் திறப்பு விழா நடந்தது. இந்த திமுக தேர்தல் அலுவலகத்தை அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்தார். இந்த திறப்பு விழாவில் வேலூர் வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும், வேலூர் தொகுதி எம்.பி.யுமான கதிர் ஆனந்த், வேலூர் தொகுதி எம்எல்ஏ கார்த்திகேயன், மாவட்ட பொருளாளர் நரசிம்மன், வேலூர் மாநகராட்சி துணை மேயரும், தெற்கு பகுதி செயலாளருமான சுனில் குமார், வடக்கு பகுதி செயலாளர் வன்னியராஜா ,வேலூர் மாநகராட்சி 1வது வார்டு கவுன்சிலர் அன்பு, வட்டச் செயலாளர் லோகநாதன், காட்பாடி ஊராட்சி ஒன்றிய துணை தலைவர் திருவலம் சரவணன், முன்னாள் எம்எல்ஏ லதா மற்றும் முன்னாள் கவுன்சிலர் ஜெய்சங்கர் மற்றும் திமுக நிர்வாகிகள், தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V. சியாமளா தேவி நேரில் ஆய்வு



திருப்பத்தூர் மாவட்டம், வாணியம்பாடி பகுதியில் பதற்றமான வாக்குச்சாவடிகளாக கண்டறியப்பட்ட பகுதிகளில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் V. சியாமளா தேவி நேரில் ஆய்வு செய்தார். வாணியம்பாடி நகர காவல் நிலைய எல்லைக்குட்பட்ட புதூர், பெருமாள் பேட்டை, கோணாமேடு பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளையும், வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கலந்தரா, சின்ன வேப்பம்பட்டு, நெக்குந்தி, செட்டியப்பனூர் ஆகிய பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளையும் ஆய்வு செய்தார்.

# சீர்காழி கருப்படி மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம்

**சீர்காழி , மார்ச் , 26:**


மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாடாளன் வடக்கு வீதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ கருப்படி மாரியம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் நடைப்பெற்றது.

நான்கு கால யாக பூஜை நடந்து கடங்கள் புறப்பட்டு அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் நடந்தது. விழாவில் திரளாக பக்தர்கள் கலந்து கொண்டார்கள்.

பக்தர்களுக்கு அன்ன தானம் வழங்கப்பட்டது. மஹா கும்பாபிஷேக நேரடி வர்ணனையை சீர்காழி டாக்டர் கே.ஆர்.சரவணன் வழங்கினார்.



## ஸ்ரீராமநவமி உத்ஸவம்



ஸ்ரீராமநவமி உத்ஸவம் நாள்-7 ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகன் ஸ்ரீராமர் ) ஹம்ஸவாஹனம் பெரிய மாட வீதி புறப்பாடு @ Triplicane partha sarathi perumal Kovil Chennai

## சக்ர ஸ்நானம்



திருப்பதி ஸ்ரீ கோதண்டராமர் சன்னதி பிரம்மோற்சவம் சக்ர ஸ்நானம்.

## பங்குனி பிரம்மோற்சவம்



திருஇந்தளூர் ஸ்ரீபரிமள ரங்கன் பங்குனி பிரம்மோற்சவம் நேற்று காலை பல்லக்கு புறப்பாடு திவ்ய சேவை.

## ஸ்ரீராமநவமி உற்சவம்



ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீராமநவமி உற்சவம் நாள் - 5

## புது மல்லவாடி ஊராட்சியில் பணிக்குழு தேர்தல் அலுவலகம் திறப்பு விழா



**திருவண்ணாமலை, மார்ச் 26 :**

திருவண்ணாமலை மாவட்டம் மார்ச் -25 கீழ்பென்னாத்தூர் தொகுதி துரிஞ்சாபுரம் ஒன்றியம் புதுமல்லவாடி ஊராட்சியில் தேர்தல் பணி குழு 1,2,3,களுக்காக தேர்தல் அலுவலகத்தை சட்டமன்ற துணை சபாநாயகர் கு. பிச்சாண்டி அவர்கள் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். மற்றும் கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

# 3 கோடி போலி கணக்குகள் நீக்கம்



ரயில் டிக்கெட்டுகளை அதிக விலைக்கு விற்பனை செய்வதைத் தடுக்க நடவடிக்ககைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும், ஐஆர்சிடிசி வலைதளத்தில் இருந்து 3 கோடி போலி கணக்குகள் நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்திய ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் நாடாளுமன்றத்தில் நேற்று (மார்ச் 25) கூறுகையில், மக்களின் சவுகரியம், போதிய வசதிகளை உறுதி செய்வதில் அரசு அதிக கவனம் செலுத்தி வருகிறது என கூறினார்.

## நம் வாசவி அம்மன் வசந்த நவராத்திரி விழா 6-ஆம் நாள் உற்சவம்



**சென்னை, மார்ச்26:**

திருவள்ளூர் ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் பராபவ வருஷ வசந்த நவராத்திரியை முன்னிட்டு நவராத்திரி 6-ஆம் நாள் மூலவர் தங்கத்தாமரையில் நம் வாசவி அம்மன் தங்க கவசத்துடன், ரோஜா பூ மாலையுடன் அலங்காரமும், உற்சவர் கௌமாரி அலங்காரமும் உற்சவருக்கும், மூலவருக்கும், வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகா தீபாராதனையும் நடைபெற்றது. ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் அனைவரும் பூஜையில் கலந்து கொண்டு வாசவி அம்மனை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்களும் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## திருப்புல்லாணி வாகனம்



நேற்று இரவு திருப்புல்லாணி வாகனம்



# 2026 தேர்தல் கொண்டாட்டம்

## இவர்கள் கூறுவதென்ன?

### "பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு" - பழ.நெடுமாறன் தகவல்

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாக தமிழர் தேசிய முன்னணி நிறுவனத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்தார்.

தஞ்சாவூரில் தமிழர் தேசிய முன்னணியின் மாநில செயற்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. நிறுவனத் தலைவர் பழ.நெடுமாறன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து பழ.நெடுமாறன் பின்னர் செய்தியாளர்களிடம் கூறியது: இக்கூட்டத்தில் தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தல் குறித்து விவாதிக்கப்பட்டது. இதில் தமிழ் மற்றும் தமிழ்நாட்டின் நலனுக்கு எதிராக செயல்படுவது, இந்தி மற்றும் சமஸ்கிருத மொழியை தமிழகத்தில் திணிப்பது, இந்து மதவாதத்தை தூக்கி பிடிப்பது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் பாஜக, தமிழகத்தில் பல கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ளது. இந்த பேரபாயத்தை முறியடிக்க வேண்டியது தமிழர்களின் முதன்மையான கடமையாகும். எனவே, பாஜக கூட்டணியை முறியடிக்கும் வகையில், வரும் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு அளிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பழ.நெடுமாறன் தெரிவித்தார்

### தனியார் தொலைக்காட்சி சார்பில் தேர்தல் விவாத நிகழ்ச்சி மோதல்: 137 பேர் மீது வழக்கு பதிவு

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மகர்நோன்பு திடலில் நேற்றுமுன்தினம் இரவு தனியார் தொலைக்காட்சி சார்பில் தேர்தல் விவாத நிகழ்ச்சி நடைபெற்றது.

அப்போது அதிமுக, திமுக தரப்பினர் தங்களது ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற வளர்ச்சித் திட்டங்களை எடுத்துரைத்தனர். தொடர்ந்து இடும்பாவனம் கார்த்திக் பேசியபோது தெரிவித்த சில கருத்துகளுக்கு திமுக கூட்டணிக் கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.இதில், திமுக மாவட்ட துணைச் செயலாளரும் திருப்புவனம் பேரூராட்சித் தலைவருமான சேங்கைமாறன், அதிமுக முன்னாள் எம்எல்ஏ உமாதேவன், நாம் தமிழர் கட்சி மாநில நிர்வாகி இடும்பாவனம் கார்த்திக் ஆகியோர் பங்கேற்றனர். அப்போது அதிமுக, திமுக தரப்பினர் தங்களது ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற வளர்ச்சித் திட்டங்களை எடுத்துரைத்தனர். தொடர்ந்து இடும்பாவனம் கார்த்திக் பேசியபோது தெரிவித்த சில கருத்துகளுக்கு திமுக கூட்டணிக் கட்சியினர் எதிர்ப்புத் தெரிவித்தனர். அப்போது அதிமுக முன்னாள் எம்எல்ஏ கே.கே.உமாதேவன் நாம் தமிழர் கட்சிக்கு ஆதரவாக பேசியதால் மோதல் ஏற்பட்டது. இதில் மூவர் காயமடைந்தனர்.

இதுகுறித்து நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த இளங்கோ அளித்த புகாரின்பேரில், திமுக மாவட்டத் துணைச் செயலாளர் சேங்கைமாறன், துணை மேயர் குணசேகரன், மதிமுக மாவட்டச் செயலாளர் பசும்பொன் மனோகரன் மற்றும் திமுக மாநகராட்சி கவுன்சிலர்கள், நிர்வாகிகள், காங்கிரஸ் நிர்வாகிகள் உட்பட 16 பேர் மீது காரைக்குடி தெற்கு போலீஸார் வழக்குப் பதிந்தனர். அதேபோல் திமுக துணை மேயர் குணசேகரன் அளித்த புகாரின்பேரில், அதிமுக முன்னாள் எம்எல்ஏ கே.கே.உமா தேவன், நகரச் செயலாளர் மெய்யப்பன் மற்றும் அதிமுக, பாஜக, நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் உட்பட 121 பேர் மீது வழக்குப் பதிந்தனர்.

### "தொகுதி எண்ணிக்கையில் மனநிறைவே" - திருமாவளவன்

திமுக கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 8 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் 2 பொதுத் தொகுதிகள், 6 தனித் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "200-க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்போடு பணியாற்றுவோம். வெறும் தேர்தல் லாபத்துக்காக வலதுசாரிகளை வலுப்பெறவிட முடியாது. வலதுசாரி, திரிபுவாத சக்திகளையும் வீழ்த்த வேண்டிய பொறுப்பு விசிகவுக்கு கூடுதலாக உள்ளது. மாநிலங்களவை சீட் தொடர்பாக தற்போது முடிவெடுக்க முடியாது என திமுக தலைமை கூறியுள்ளது. 23 கட்சிகள் உள்ள மெகா கூட்டணி இது.

கம்யூனிஸ்டுகளையும் சேர்த்து 18 தொகுதிகளை இடதுசாரிகளுக்கு திமுக வழங்கியுள்ளது. ஒன்று இரண்டு தொகுதிகளுக்காக கூட்டணி வெற்றி வாய்ப்பை கெடுக்க விரும்பவில்லை. தமிழக மக்களின் பேராதரவுடன் திமுக கூட்டணி அமோகமாக வெற்றி பெறும். விசிக, கம்யூனிஸ்ட், இஸ்லாமிய கட்சிகளுக்கு வழங்கப்பட்ட தொகுதிகள் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். ஆனால், இடதுசாரி அரசியலை திமுக பாதுகாப்பதாகவே நான் கருதுகிறேன்.

விசிக அங்கீகரிக்கப்பட்ட கட்சி என்பதால் 8 தொகுதிகளிலும் பானை சின்னத்தில் போட்டியிடும். ஒன்றிரண்டு தொகுதிகளுக்காக முரண்டுபட்டு கூட்டணிக்குள் சலசலப்பை உருவாக்கி, வெற்றிக்கான வாய்ப்பை சேதப்படுத்திவிடக் கூடாது என்ற பொறுப்புணர்வுடன் இந்த நிலைப்பாட்டை எடுத்திருக்கிறோம். இதில் எங்களுக்கு மனநிறைவு இருக்கிறது. கட்சி நலன் எவ்வளவு முக்கியமோ, அதே அளவுக்கு கூட்டணி நலனும் முக்கியமானது. இடதுசாரி ஜனநாயக அரசியல் பாதுகாக்கப்பட வேண்டும். தமிழகத்தில் வலதுசாரி பிற்போக்கு சக்திகள் காலூன்றக் கூடாது."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தேர்தலில் மநீம போட்டியில்லை: கமல்ஹாசன் அறிவிப்பு

உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற பரிந்துரை ஏற்புடையதாக இல்லாததால் சட்டப்பேரவை தேர்தலில் போட்டியிடவில்லை மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் அறிவித்துள்ளார்.



திமுக கூட்டணியில் அங்கம் வகித்து வரும் மநீம தொகுதி பங்கீடு தொடர்பாக திமுக தொகுதி பங்கீட்டு குழுவிடம் 2 கட்டங்களாக பேச்சுவார்த்தை நடத்தியது. இது தொடர்பாக கட்சி நிர்வாகிகளுடன் கமல்ஹாசன் ஏற்கெனவே ஆலோசனை நடத்தினார். இந்நிலையில் கமல்ஹாசன் மநீம கட்சியின் மாநில நிர்வாகிகளுடன் நேற்று இரவு 8 மணி அளவில் அண்ணா அறிவாலயத்தில் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினை சந்தித்துப் பேசினார். அப்போது தேர்தலில் போட்டியிடாமல் திமுகவுக்கு ஆதரவு அளிப்பது என்ற கட்சியின் முடிவை ஸ்டாலினிடம் கமல்ஹாசன் தெரிவித்தார். பின்னர், கமல்ஹாசன் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: நமக்கு தருவதாக சொல்லியிருக்கும் தொகுதிகளின் எண்ணிக்கையும், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற பரிந்துரையும் கட்சி உறுப்பினர்களுக்கும் எனக்கும் ஏற்புடையதாக இல்லை. டார்ச் லைட் சின்னத்துடனான கட்சி தொண்டர்களின் பிணைப்பு உணர்வுபூர்வமானது. இந்த சின்னம் வெறும் சின்னம் அல்ல. அது எங்களின் அடையாளம். ஆகவே, இந்த தேர்தலில் நாங்கள் போட்டியிடவில்லை. திமுக கூட்டணிக்கு நிபந்தனை இன்றி ஆதரவு அளிப்போம்" என்று கூறியுள்ளார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கமல்ஹாசன் கூறுகையில், "தேர்தலில் போட்டியிடவில்லை என்பதை எங்கள் கட்சி நிர்வாகிகளுடன் கலந்து ஆலோசித்து முடிவு எடுத்துள்ளோம். திமுக ஆட்சி தொடர வேண்டும். திமுகவுடன் நிற்பதை கடமையாக கருதுகிறேன். இது தியாகம் இல்லை, கடமை. திமுகவுக்கு முழுமையான அழுத்தமான ஆதரவு அளிப்போம்" என்றார்.

ஸ்டாலின் நெகிழ்ச்சி: இதற்கிடையே, முதல்வர் ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'தேர்தலில் போட்டியிடாமல் திமுகவுக்கு ஆதரவு அளிப்பது தியாகம் அல்ல, கடமை என்று கமல் கூறினார். உண்மையில் அவர் செய்திருப்பது தியாகம் தான். கமலுக்கு எப்படி நன்றி சொல்வது என்று தெரியவில்லை. அவரது முடிவு என்னை நெகிழ வைத்துவிட்டது. தமிழகம் முழுவதும் கமல் வலம் வரவேண்டும். அமையும் திராவிட மாடல் 2.0 அரசு அவரது அன்பினால் ஆனது" என்று தெரிவித்துள்ளார்.

## 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என மதிமுக மாவட்டச் செயலாளர் ஆதங்கம்

திமுக கூட்டணியில் மதிமுகவுக்கு விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகளை விட குறைவான தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதற்கு, 'நெஞ்சு பொறுக்குதில்லையே' என மதிமுக மாவட்டச் செயலாளர் ஒருவர் முகநூலில் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

திமுக கூட்டணியில் விசிகவுக்கு 8, இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கட்சிகளுக்கு தலா 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில், மதிமுகவுக்கு 4 தொகுதிகள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. அதிலும், 3 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்திலும், ஒரு தொகுதியில் சொந்த சின்னத்திலும் போட்டியிட உள்ளது.

கடந்த முறையை விட 2 தொகுதிகள் குறைக்கப்பட்டுள்ளதால் அக்கட்சியினர் கடும் அதிர்ச்சியடைந்தனர்.

இது தொடர்பாக மதிமுக திருச்சி புறநகர் தெற்கு மாவட்ட செயலாளர் மணவை தமிழ் மாணிக்கம் தனது முகநூல் பக்கத்தில், திமுக கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை பட்டியலிட்டு, 'நெஞ்சு பொறுக்குதில்லையே...' எனக் குறிப்பிட்டு தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் கூறும்போது, "தொகுதிப் பங்கீடு பட்டியல் வரிசையில் மதிமுக பின்தங்கியிருப்பதை பார்த்து ஏற்பட்ட உணர்ச்சி குமுறல் பதிவு. இதற்காக நாங்கள் தேர்தல் பணியில் பின்தங்க மாட்டோம். கட்சித் தலைமையின் உத்தரவுக்கு கட்டுப்பட்டு, தோழமைக் கட்சிகளின் வெற்றிக்கு பாடுபடுவோம்" என்றார்.

அவரது முகநூல் பதிவுக்கு, "இதற்கு தேர்தல் புறக்கணிப்பே மேல்; நம்மை அழிக்கும் ஒரே இயக்கம் திமுக; பதவி ஆசை பிடித்த இரண்டாம் கட்ட தலைகள் மட்டுமே இந்த நிலைக்கு காரணம்; கூட்டணியிலிருந்து வெளியேற வேண்டும்" என பலரும் பின்னூட்டத்தில் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

## 2026 சட்டசபை தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை - நாராயணசாமி பேட்டி

புதுவை சட்டசபை தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நேற்றுடன் முடிவடைந்தது. இதில் காங்கிரஸ், தி.மு.க. இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டது. காங்கிரஸ் 16 தொகுதியிலும், திமுக 14 தொகுதிகளிலும் போட்டியிட முடிவு செய்யப்பட்டது. இதில் திமுகவுக்கு ஒதுக்கப்பட்ட தொகுதியில் உழவர்கரை தொகுதியை விடுதலை சிறுத்தை கட்சிக்கு அளிக்க உடன்பாடு ஏற்பட்டது.



இந்தநிலையில் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஏ. பி. விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு மனு தாக்கல் செய்ய அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி மாநில தலைவர் வைத்திலிங்கம் எம்.பி.யும், தனது இல்லத்தில் காங்கிரஸ் சார்பில் விண்ணப்பங்களை வழங்கினார். இதற்கிடையே முன்னாள் முதல்-அமைச்சர் நாராயணசாமி நெல்லித்தோப்பு தொகுதியில் போட்டியிட திட்டமிட்டிருந்தார். ஆனால் அவருக்கு கட்சியில் விண்ணப்பம் வழங்கப்படவில்லை.

இதையறிந்த நாராயணசாமி ஆதரவாளர்கள் நேற்று காலை 11 மணியளவில் கந்தப்ப முதலியார் வீதியில் உள்ள வைத்திலிங்கம் எம்.பி. வீட்டின் முன்பு திரண்டனர். அங்கு அவர்கள் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டம் நடத்தினர். அப்போது அவர்கள் வைத்திலிங்கம் எம்.பி.க்கு எதிராக கோஷம் எழுப்பினர். காங்கிரஸ் கட்சியை தி.மு.க.விடம் அடகு வைத்து விட்டதாகவும், தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டும் எனவும் கோஷம் எழுப்பினர். தொடர்ந்து வைத்திலிங்கம் எம்.பி. அங்கிருந்து காரில் புறப்பட்டார். அப்போது நாராயணசாமியின் ஆதரவாளர்கள் அவரை காருடன் வழிமறித்து போராட்டம் நடத்தினர். இதனால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்தநிலையில், என்னால் திமுக-காங்கரஸ் கூட்டணி உடைய வேண்டாம்; தனி நபர்கள் முக்கியமில்லை, கட்சியே முக்கியம். 2026 தேர்தலில் போட்டியிட விரும்பவில்லை என புதுச்சேரி முன்னாள் முதல்-மந்திரி நாராயணசாமி கூறியுள்ளார்.

## அதிமுக கூட்டணியை ஆதரித்து பழனிசாமி பிரச்சாரம்



அதிமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு ஆதரவாக அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தேர்தல் பிரச்சாரத்தை மயிலாப்பூரில் தொடங்குகிறார்.

அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றுள்ள பாஜக-வுக்கு 27 தொகுதிகள், பாமகவுக்கு 18 தொகுதிகள், அமமுக-வுக்கு 11 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மற்ற கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. இந்நிலையில், அதிமுக மற்றும் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து, அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி மார்ச் 25-ம் தேதி (இன்று) முதல் வரும் ஏப்ரல் 1-ம் தேதி வரை சூறாவளி தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அதன்படி, நேற்று மாலை 3.30 மணி மயிலாப்பூர், 27-ம் தேதி மாலை 4 மணி ஆலந்தூர் மற்றும் மாலை 6 மணி தாம்பரம், 28-ம் தேதி மாலை 4 மணி ஆர்.கே.நகர் மற்றும் மாலை 6 மணி திருவொற்றியூர் தொகுதிகளில் அதிமுக கூட்டணியை ஆதரித்து பழனிசாமி பிரச்சாரம் மேற்கொள்கிறார். 29-ம் தேதி மாலை 4.30 மணி நாகர்கோவில் மற்றும் 5.30 மணி ராதாபுரம், 30-ம் தேதி மாலை 4 மணி கடையநல்லூர் மற்றும் மாலை 6 மணி கோவில்பட்டி, 31-ம் தேதி மாலை 4 மணி சிவகாசி மற்றும் மாலை 6 மணி பரமக்குடி, ஏப்ரல் 1-ம் தேதி மாலை 4 மணி சிவகங்கை மற்றும் மாலை 6 மணி புதுக்கோட்டை தொகுதிகளில் அதிமுக மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்காக பழனிசாமி பிரச்சாரம் செய்கிறார்.

## கனிமொழிக்கு சீட் கொடுக்காதவர்கள் எப்படி கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொடுப்பார்கள்? - சீமான்

"கருணாநிதியின் மகள் கனிமொழிக்கு சீட் கொடுக்காதவர்கள் எப்படி கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொடுப்பார்கள்?" என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேள்வி எழுப்பினார்.




வேலூர் மாவட்டத்தில் போட்டியிடும் நாதக வேட்பாளர்களுக்கு ஆதரவாக அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று வேன் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். பின்னர் அவர், செய்தியாளர்களிடம் கூறும்போது, "கனிமொழி மாநில அரசியலில் வருவதற்கும் அவர்கள் வெற்றிபெறுவதையும் யார் எதிர்ப்பார்கள் என்று உங்களுக்குத் தெரியும். கருணாநிதியின் மகள் கனிமொழிக்கு சீட் கொடுக்காதவர்கள் எப்படி கம்யூனிஸ்ட் கட்சிக்கு கொடுப்பார்கள்? அவர்களும் ஒரு சீட் அதிகமாக கொடுங்க. கொடுங்க என்று கேட்டார்கள். கனிமொழி ஆளுமையுள்ள பெண். மாநில அரசியலுக்கு வரும்போது உதயநிதியை முன்னிறுத்த இடையூறாக இருக்கும் என்று நினைப்பார்கள். எனவே, அவரை வரவிட மாட்டார்கள். என்னதான் இருந்தாலும் அவர் உடன்பிறந்த குடும்பத்து பெண் இல்லை என்று நினைப்பார்கள்.

தவாக தலைவர் வேல்முருகன் ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளார். அதற்கு கருத்துச் சொல்ல விரும்பவில்லை. அவர் இப்போதாவது சொல்கிறாரே என்று பாராட்ட வேண்டும். ஒரு சீட்டுக்காக சரணடைந்து சகித்துப் போகாமல் பேசியுள்ளாரே என்று பாராட்டுங்கள். அய்யா ராமதாஸை மக்கள் கைவிடுவார்கள் என்று யாரும் நினைக்கவில்லை. நானெல்லாம் அவரது பிள்ளை. 85 வயதில் தமிழை தேடி யாராவது நடப்பார்களா? தமிழகத்தில், சமூக நீதியை அவரைத்தாண்டி யாராவது பேசி இருக்கிறார்களா? இந்த நாட்டில் ஈ.வெ.ரா என்ன செய்தார்?

இந்த நாட்டில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் பேசுவது ராமதாஸ் மட்டும்தான். அவரது கனவை பிள்ளையாக நான் செய்கிறேன். இந்த வயதிலும் இந்த நாட்டுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற அவரது எண்ணத்தை பாராட்ட வேண்டும். இன்றும் அவர் உட்கார்ந்து பேசி இயங்குகிறார் இல்லையா? தமிழ்நாட்டில் மொத்த கட்சி கூட்டணியை இந்த ஒத்த கட்சி மோதி வெல்லும். மொத்தத்தில் வீரம் வேண்டும் சுடலைமாடா.

மத்திய அரசின் தனியார்மயம், தாராளமயம் உலகமயத்தில் ஒவ்வொரு நாட்டையும் சார்ந்திருந்ததால் இன்று காஸ் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. காஸ் உற்பத்தியில் தன்னிறைவு ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லும் என்னை நீங்கள் தேர்ந்தெடுக்கவில்லை. பேரிடர் காலத்தில் சிலிண்டர் இல்லை, எரிபொருள் தட்டுப்பாடு. பெட்ரோல், டீசல் இல்லாவிட்டால் வண்டியை விட்டுவிட்டுப் போக வேண்டியதுதான். நான் கூட மிதிவண்டியில் ஓட்டு கேட்க போகலாம் என்று இருக்கிறேன். நாங்கள் ரொம்பவே தயாராக இருக்கிறோம்" என்றார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

# ராணிப்பேட்டை அருகே ஏரியில் மூழ்கி பள்ளிமாணவர்கள் 3 பேர் உயிரிழப்பு

**ராணிப்பேட்டை, மார்ச் 26:**

ராணிப்பேட்டை மாவட்டம் அருகே திருவிக நகரை சேர்ந்த தனியார் பள்ளி மாணவர்களான பார்த்திபன்(12), நித்திஸ்(14), மற்றொரு சிறுவன் என 3 பேரும் சிப்காட் அருகே உள்ள மணியம்பட்டு ஏரியில் குளிக்கச் சென்றனர்.

மூன்று மாணவர்கள் ஏரியில் குளித்து கொண்டிருந்தபோது ஒரு மாணவன் மட்டும் ஆழமான பகுதியில் சிக்கினர். இதனைகண்ட இரண்டு மாணவர்களும் அவனை காப்பாற்ற முயன்றனர். ஆனால் அவர்களும் நீரில் முழ்கினர். அவர்களின் அலறல் சத்தம் கேட்டு அருகில் இருந்த அக்கம் பக்கத்தினர் அவர்களை ஒவ்வொருத்தராக மீட்டு அருகில் இருந்த தனியார் மருத்துவமணைக்கு கொண்டு சென்றனர்.

மாணவர்களின் உடலை பரிசோதனை செய்த மருத்துவர்கள் மருத்துவமனைக்கு வரும் வழியிலே அவர்கள் இறந்துவிட்டதாக தெரிவித்தனர். தகவல் அறிந்து வந்த சிப்காட்போலீசார் மாணவர்களின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வாலாஜாபேட்டை அரசு மருத்துவமணைக்கு அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், விசாரணை நடத்தி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ஸ்டிக்கர் ஒட்டி தேர்தல் விழிப்புணர்வு




**கள்ளக்குறிச்சி, மார்ச் 26:**

தமிழக சட்டமன்றப் பொதுத்தேர்தல் வரும் ஏப்ரல் 23-ம் தேதி நடைபெற உள்ளது. அந்த தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அந்தந்த மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரான கலெக்டர் மூலம் நடத்தப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக கள்ளக்குறிச்சி புதிய பேருந்து நிலையத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட கலெக்டருமான பிரசாந்த் பேருந்துகளில் வாக்காளர் விழிப்புணர்வு ஒட்டு வில்லைகளை (ஸ்டிக்கர்) ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அப்போது அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் கருட கொடியேற்றத்துடன் தொடங்கிய திருக்கல்யாண திருவிழா





**ஸ்ரீவில்லிபுத்தூர் மார்ச் 26:**

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் திருக்கல்யாண திருவிழா செவ்வாய்க் கிழமை காலை கருட கொடியேற்றத்துடன் தொடங்கியது. ஏப்ரல் 1-ம் தேதி பங்குனி உத்திரம் அன்று ஆண்டாள் ரெங்கமன்னார் திருக்கல்யாணம் நடைபெறு கிறது.

108 வைணவ திருத்தலங்களில் சிறப்புமிக்க ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில் மூலவர் வடபத்ரசாயி, பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் அவதரித்ததால் முப்புரி ஊட்டிய ஸ்தலம் என அழைக்கப்படுகிறது. ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் மகளாக அவதரித்த ஆண்டாள், மார்கழி மாதத்தில் கண்ணனை நினைத்து திருப்பாவை பாடி, பாவை நோன்பிருந்தார். அதன் பலனாக பங்குனி உத்திர நாளில் ஸ்ரீஆண்டாள் ரெங்கமன்னாரை கரம் பிடித்தார் என்பது கோயில் வரலாறு. மார்கழி மாதத்தில் அனைத்து பெருமாள் கோயில்களிலும் திருப்பாவை பாடல் பாடப்படுகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டு தோறும் பங்குனி உத்திரம் நாளில் ஆண்டாள் ரெங்கமான்னார் திருக்கல்யாண திருவிழா கோலகலமாக நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு திருக்கல்யாண திருவிழா நேற்று காலை 9 மணிக்கு கருட கொடியேற்றத்துடன் தொடங்கியது. முன்னதாக கொடிப்பட்டம் மேளதாளம் முழங்க மாட வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. ஆண்டாள் ரெங்கமன்னார் திவ்ய தம்பதியினர் சர்வ அலங்காரத்தில் எழுந்தருள கருட கொடியேற்றம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

13 நாட்கள் நடைபெறும் திருக்கல்யாண திருவிழாவில் தினசரி இரவு பல்வேறு வாகனங்களில் ஆண்டாள் ரெங்கமன்னார் எழுந்தருளி வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றனர். இதில் 5-ம் நாள் விழாவான மார்ச் 28-ம் தேதி கருட சேவை நடைபெறுகிறது. 9-ம் நாள் விழாவான ஏப்ரல் 1-ம் தேதி பங்குனி உத்திரத்தை முன்னிட்டு காலை 7.05 மணிக்கு செப்புத் தெரோட்டமும், இரவு 7 முதல் 8 மணிக்குள் ஆண்டாள் ரெங்கமன்னார் திருக்கல்யாணமும் நடைபெறுகிறது. திருக்கல்யாண திருவிழா ஏற்பாடுகளை கோயில் நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

# மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சித்திரை திருவிழா ஏப்.19-ம் தேதி தொடக்கம்



**மதுரை, மார்ச் 26:**

உலகப் புகழ்பெற்ற மீனாட்சி அம்மன் கோயில் சித்திரைத் திருவிழா ஏப்ரல் 19-ம் தேதி தொடங்கி ஏப்ரல் 30-ம் தேதி வரை நடைபெறுகிறது. இதை முன்னிட்டு, சித்திரை வீதிகளில் பந்தல் அமைக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது.

சித்திரைத் திருவிழாவின் முதல் நாளான ஏப்ரல் 19-ம் தேதி காலை 10.30 மணியளவில் கொடியேற்றம் நடைபெறுகிறது. தினமும் காலை, மாலையில் சுவாமி-அம்மன் புறப்பாடு நடைபெறுகிறது.

முக்கிய விழாவான மீனாட்சி அம்மனுக்கு பட்டாபிஷேகம் ஏப்.26-ம் தேதி இரவு 7.05 மணியளவில் நடைபெறவுள்ளது. ஏப்.27-ல் திக்கு விஜயம் நடைபெறுகிறது. முக்கிய விழாவான மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணம் ஏப்.28-ம் தேதி காலை 8.35 மணியளவில் நடைபெறுகிறது.

29-ம் தேதி காலை 6 மணியளவில் தேரோட்டம் நடைபெறுகிறது. ஏப்.30-ம் தேதி தீர்த்தவாரியுடன் திருவிழா நிறைவு பெறுகிறது. இத்திருவிழாவை முன்னிட்டு, மீனாட்சி அம்மன் கோயிலைச்சுற்றி பக்தர்கள் நின்று தரிசிக்கும் வகையில், சித்திரை வீதிகளில் பந்தல் அமைக்கும் பணி நேற்று முன்தினம் தொடங்கி மும்முரமாக நடைபெற்று வருகிறது. விழா ஏற்பாடுகளை, அறங்காவலர் குழு தலைவர் ருக்மணி பழனிவேல்ராஜன், கோயில் இணை ஆணையர் நா.சுரேஷ் தலைமையில் அறங்காவலர்கள், கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர். இதேபோல், அழகர்கோவில் கள்ளழகர் கோயிலில் சித்திரைத் திருவிழா ஏப்.29-ம் தேதி தொடங்குகிறது. ஏப்.30-ல் மதுரை மூன்றுமாவடியில் கள்ளழகரை வரவேற்கும் எதிர்சேவை நடைபெறும்.

தொடர்ந்து, மே 1-ம் தேதி சித்ரா பவுர்ணமி தினத்தில் கள்ளழகர் வைகை ஆற்றில் தங்கக் குதிரை வாகனத்தில் எழுந்தருள்கிறார். இதில் லட்சக் கணக்கான பக்தர்கள் வைகை ஆற்றில் திரண்டு கள்ளழகரை தரிசனம் செய்வார்கள்.

விழா ஏற்பாடுகளை, கோயில் இணை ஆணையர் ஆர் .ஹரிஹரன் தலைமையில் கோயில் பணியாளர்கள் செய்து வருகின்றனர்.

# ஸ்ரீரங்கம் அரங்கநாதர் கோயிலில் பங்குனி தேர்த் திருவிழா கொடியேற்றம்!

**ஸ்ரீரங்கம், மார்ச் 26:**

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோயில் பங்குனி தேர்த் திருவிழா கொடியேற்றம் விமர்சையாக நடைபெற்றது. முக்கிய நிகழ்ச்சியான உறையூர் கமலவல்லி நாச்சியார் நம்பெருமாள் சேர்த்தி சேவை மார்ச் 29ஆம் தேதி அன்றும், நம்பெருமாள் ரெங்கநாயகி தாயார் சேர்த்தி சேவை ஏப்ரல் 01ஆம் தேதியும் கோரதம் எனப்படும் பங்குனி தேரோட்டம் வருகிற ஏப்ரல் 2ம் தேதியும் நடைபெறுகிறது.

திருச்சி ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதர் சுவாமி திருக்கோயில் பங்குனி தேர்த் திருவிழா ஆண்டுதோறும் நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டிற்கான பங்குனி தேர் உற்சவம் இன்று அதிகாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. நம்பெருமாள் மூலஸ்தானத்தில் இருந்து புறப்பட்டு கொடியேற்றம் மண்டபம் வந்தடைந்தார். அர்ச்சகர்கள் கொடிக்குப் பூஜைகள் செய்யப்பட்டு கொடியேற்றம் மீன லக்னத்தில் நடைபெற்றது.

11 நாள்கள் நடைபெறும் பங்குனி உற்சவ நாள்களில் தினமும் காலை மற்றும் மாலை வேளைகளில் நம்பெருமாள் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதி உலா நடைபெற இருக்கின்றது.






## நலம் தரும் மருத்துவம்

# வறுத்த வேர்க்கடலை vs பச்சை வேர்க்கடலை.. ஆரோக்கியத்திற்கு எது சிறந்தது?

பச்சை வேர்க்கடலை எண்ணற்ற ஊட்டச்சத்துக்களைக் கொண்டுள்ளது. இது தாவர அடிப்படையிலான புரதச்சத்துகள் நிறைந்ததாகும். வறுத்த வேர்க்கடலையை விட, பச்சை வேர்க்கடலையில் பல நன்மைகள் உள்ளன.

பச்சை வேர்க்கடலையில் வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் ஆரோக்கியமான கொழுப்புகள் உள்ளன. இதில் உள்ள மற்ற ஊட்டச்சத்துக்களின் விவரத்தை இந்த பதிவில் தெரிந்து கொள்ளலாம்.

பச்சை வேர்க்கடலை வைட்டமின் ஈ, வைட்டமின் பி (நியாசின் மற்றும் போலேட்), மெக்னீசியம், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் உள்ளிட்ட பல முக்கியமான வைட்டமின்கள் மற்றும் தாதுக்களின் நல்ல மூலமாக உள்ளது.

பச்சை வேர்க்கடலை மிகவும் மதிப்புமிக்கதாக இருப்பதற்குக் காரணம், அதில் அதிக புரதம் இருப்பதுதான். பச்சை வேர்க்கடலையில் உள்ள புரதம், அதன் மொத்த கலோரி மதிப்பில் 2230% ஆகும்.

வேர்க்கடலை நோய் எதிர்ப்புச் செயல்பாட்டிற்கு தேவையான அமினோ அமிலங்களையும் வழங்குகிறது. மேலும், இது நார்ச்சத்தின் நல்ல மூலமாக இருப்பதால், செரிமானத்திற்கு உதவுகிறது மற்றும் குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

பச்சை வேர்க்கடலையில் மோனோசாச்சுரேட்டட் கொழுப்புகள் உள்ளன. அவை உடலின் எல்டிஎல் அல்லது 'கெட்ட' கொழுப்பின் அளவைக் குறைக்க உதவுகின்றன. இதன் மூலம் இதய நோய் மற்றும் பக்கவாதம் ஏற்படும் அபாயம் குறைகிறது.

வேர்க்கடலை நீண்ட நேரம் பசியை கட்டுப்படுத்தி, உடல் எடையை சமநிலையில் வைத்திருக்க உதவுகிறது.

வேர்க்கடலையில் உள்ள ரெஸ்வெராட்ரோல் மற்றும் பிற ஆக்ஸிஜனேற்றிகள் உடலில் உள்ள ஃப்ரீ ரேடிக்கல்களை கட்டுப்படுத்த உதவுகின்றன. இது வீக்கத்தை குறைத்து, நீரிழிவு, புற்றுநோய் மற்றும் இதய நோய் போன்ற நாள்பட்ட நோய்களைத் தடுக்க உதவுகிறது.

வேர்க்கடலை குறைந்த கிளைசெமிக் குறியீட்டைக் கொண்டுள்ளது. எனவே, இது ரத்த சர்க்கரையை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது. மேலும், நாள் முழுவதும் நிலையான ஆற்றலை வழங்குகிறது.

பச்சை வேர்க்கடலையை உங்கள் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்: ஒரு கைப்பிடி வேர்க்கடலையை கடுகு, உளுந்து சேர்த்து தாளித்து சாப்பிடலாம். உங்கள் காலை ஸ்மூத்தியில் சிறிதளவு பச்சை வேர்க்கடலையை அரைத்து சேர்த்துக் கொள்ளலாம்.

# கடலின் நடுவே பிளாஸ்டிக் குப்பைகளால் உருவான வினோத உலகம்!

நியோ பெலாஜிக் (NEOPELAGIC) என்பது கடலில் மனிதர்கள் கொட்டிய பிளாஸ்டிக் குப்பைகளின் கழிவுகளின் மீது உருவாகும் புதிய வகை சுற்றுச்சூழல் அமைப்பைக் குறிக்கிறது. கடற்கரையோர உயிரினங்கள் நீண்ட கால நிலைத்திருக்கும் பிளாஸ்டிக் கழிவுகள் மூலம் கடலின் நடுப்பகுதிக்கு வந்து அங்கு நடுக்கடல் உயிரினங்களுடன் இணைந்து வாழும் சூழலை குறிக்கிறது.

பசிபிக் பெருங்கடலில் மிதக்கும் பிளாஸ்டிக் கழிவுகளில் கடற்கரை உயிரினங்கள் குடியேறி புதியதொரு சுற்றுச்சூழலை உருவாக்கியுள்ளது. இது உலக அளவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி முதல் அதிகரித்துள்ள பிளாஸ்டிக் மாசுபாட்டால், கடலோர உயிரினங்கள் (ANEMONES, HYDROIDS, AMPHIPODS) திறந்த கடலில் உயிர்வாழ இந்த 'புதிய திறந்த கடல்' (NEOPELAGIC) உதவுகிறது.

இது இயற்கையின் தகவமைப்புத் திறனைக் காட்டினாலும், பிளாஸ்டிக் குப்பைகள் மூலம் வேற்று உயிரினங்கள் புதிய இடங்களுக்குப் பரவி, கடல் சூழலைசீர்குலைக்கும்பெரிய ஆபத்தை ஏற்படுத்துகிறது. இது ஒரு சுற்றுச்சூழல் பொறியியல் மாற்றமாக பார்க்கப்பட்டாலும், கடலின் சமநிலையை பாதிக்கும் அச்சுறுத்தலாகவே உள்ளது.



கடலோர உயிரினங்கள் மற்றும் ஆழ்கடல் உயிரினங்கள் மிதக்கும் பிளாஸ்டிக் கழிவுகளை வீடாகப் பயன்படுத்தி, திறந்த கடலில் உயிர் வாழும் வினோதமான சூழல் இது. கடலோரப் பகுதி உயிரினங்கள் பிளாஸ்டிக் மூலம் நீண்ட தூரம் பயணித்து, நடுக்கடல் சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்கின்றன. இது கடல் சுற்றுச்சூழல் அமைப்பில் ஆபத்தான மற்றும் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

தூக்கி எறிந்த பிளாஸ்டிக் பாட்டிலோ அல்லது அறுந்த மீன்பிடி வலையோ கடலின் நடுவே ஒரு புதிய நகரத்தையே உருவாக்குகிறது. இயற்கையான மரக்கட்டைகளோ அல்லது கடல்பாசிகளோ, கடலில் விரைவில் அழுகிவிடும். ஆனால் பிளாஸ்டிக் அழியாமல் இருப்பதால் இது பல உயிரினங்களுக்கு சாதகமாகிவிட்டது. விஞ்ஞானிகள் இந்த வினோத சூழலுக்கு 'நியோ பெலாஜிக்' என்று பெயரிட்டுள்ளனர். அதாவது கடற்கரை உயிரினங்களும் நடுக்கடல் உயிரினங்களும் இணைந்து வாழும் ஒரு புதிய கலப்பு உலகம்.

கடலிருந்து எடுக்கப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை ஆய்வு செய்வதில் 98% பொருட்களில் உயிரினங்கள் ஒட்டிக்கொண்டு வாழ்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அவை அங்கே தங்கி வாழ்வதுடன் மட்டுமல்லாமல் முட்டையிட்டு இனப்பெருக்கமும் செய்கின்றன. பிளாஸ்டிக் கயிறுகளில் முட்டைகளுடன் பெண் உயிரினங்களையும், குஞ்சுகளையும் விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

2011 ஜப்பான் சுனாமியின் பொழுது கடலில் கலந்த அதே வகை உயிரினங்கள் இன்றும் அந்த பிளாஸ்டிக் கழிவுகளில் செழிப்பாக வளர்ந்து வருகிறது ஆச்சிரியத்தை உண்டாக்கியுள்ளது. பிளாஸ்டிக் கழிவுகளால் நடுக்கடலில் உருவான புதிய உயிரினக் கூட்டமே நியோ பெலாஜிக் எனப்படும்.

நாம் தூக்கி எறிந்த ஒரு சாதாரண பிளாஸ்டிக் பாட்டிலோ அல்லது அறுந்த மீன்பிடி வலையோ, இன்று கடலின் நடுவே ஒரு புதிய நகரத்தையே உருவாக்கியிருக்கிறது. இயற்கையின் தகவமைப்புத் திறன் வியக்க வைத்தாலும், பிளாஸ்டிக் இல்லாத கடலே உண்மையான அழகு என்பதை நாம் மறக்கக் கூடாது.

# "யார் புனிதன்?"




புதிதாய் வீடு கட்டி கிரஹப் பிரவேசம் செய்த சுந்தர், அந்த விஷேசத்திற்கு இடது பக்க வீட்டுக்காரன் ஆனந்தனுக்கும், வலது பக்க வீட்டுக்காரன் பாலுவுக்கு அழைப்பு வைத்தான்.

இதில் விஷேசத்தன்று ஆனந்தன் மட்டும் வந்தான். பாலு வரவில்லை.
காரணம்...?...பொறாமை.
பாலுவின் வீடு தரைத்தளம் மட்டுமே. சுந்தரின் புது வீடு முதல் மாடியுடன் உயர்ந்து நின்றது. போர்ட்டிக்கோவில் காரும் நின்றிருந்தது.
அன்றிலிருந்து பாலு, சுந்தரிடம் பேசுவதும் இல்லை. மதிப்பதும் இல்லை.

போதாக்குறைக்கு அவ்வப்போது வேண்டுமென்றே சண்டை இழுப்பான். கத்துவான். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் சுந்தர் மீது வெறுப்பைக் கொட்டுவான்.
பாலுவின் மனைவி ராதாவிற்கு அது பிடிக்கவில்லை. எதுவும் செய்ய இயலாதவளாய் அமைதி காத்தாள்.

ஒருநாள்...நள்ளிரவு.
பாலு திடீரென நெஞ்சை பிடித்துக் கொண்டு விழுந்தான்.

அவசரத்தில் யாரை அழைப்பது என்று தெரியாமல் அவன் மனைவி ராதா கதறினாள்.

சத்தம் கேட்டு ஓடிச் சென்றான் சுந்தர்.
சற்றும் யோசிக்காமல் தன் காரில் ஏற்றி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனான்.
சரியான நேரத்தில் சென்றதால் பாலு உயிர் பிழைத்தான்.
சில மணி நேரத்திற்குப் பிறகு... பாலுவின் மனைவி ராதா சுந்தரின் முன் நின்றாள். கண்களில் கண்ணீர்.
“அண்ணா... அவர் உங்கள் மீது அதிகப் பகை வைத்தார்... பதிலுக்கு நீங்க ஏன் இவ்வளவு அன்பா நடந்துக்கிட்டீங்க?” என்று கேட்டாள்.
சுந்தர் சிரித்தான்.
"அம்மா... தன்னிடம் அன்பு வைப்பவரை நேசிப்பவன் மனிதன்... தன்னிடம் பகை வைத்தவரையும் நேசிப்பவன்....”
ஒரு சிறிய இடைவெளி.
"புனிதன்...ன்னு சொல்லுவாங்க.”
“அப்படின்னா... நீங்க புனிதன்?” ராதா சொன்னாள்.

“இல்லயம்மா... நான் புனிதன் இல்லை... அப்படி ஆக முயற்சி பண்ணுற மனிதன்தான்.”
அறைக்குள் படுத்திருந்த பாலு அந்த உரையாடலைக் கேட்டு மெதுவாக கண்களை மூடினான் கூச்சத்தோடு.
(முற்றும்)



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# நல்லவன்

வேணுகோபால் சார் வங்கி மேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்று இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது.
முப்பது ஆண்டுகால வங்கிப் பணியில், அவர் சொல்லைத் தட்ட ஆளில்லை. "மேனேஜர் சார் வர்றார்" என்றாலே அலுவலகத்தில் ஒரு நிசப்தம் நிலவும். அந்த அதிகாரத் தோரணை அவர் ரத்தத்திலேயே ஊறிப்போயிருந்தது.
ஓய்வுக்குப் பின் அவருக்கு இருந்த ஒரே வருத்தம், "யாரும் நம்மை மதிப்பதே இல்லை" என்பதுதான்.
மனைவி சுமதி எவ்வளவோ சொல்லியும் கேட்காமல், தன் ஏரியாவில் ஒரு 'செல்வாக்குள்ள மனிதராக' தன்னை நிலைநிறுத்திக் கொள்ள அவர் துடித்தார்.
வழிகாட்டி என்ற வேடம் அதற்காக அவர் கையில் எடுத்த ஆயுதம்: "அறிவுரை".
யாரைப் பார்த்தாலும் ஏதோ ஒரு பாடம் நடத்த ஆரம்பித்து விடுவார்.
வாசலில் கோலம் போடும் பெண்ணிடம், "அரிசி மாவுல போடுமா, அப்பதான் எறும்பு திண்ணும். சிமெண்ட் பொடியைக் கலக்காதே" என்பார்.
வண்டி கழுவும் பையனிடம், "தண்ணிய வீணாக்காதே, சிக்கனமாப் பயன்படுத்து" என்று வகுப்பு எடுப்பார்.
பூங்காவில் இளைஞர்கள் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தால், "தம்பி, இது பொது இடம். மெதுவாப் பேசுங்க" என்று அதிகாரக் குரலில் சொல்வார்.
யாராவது லேசாக முகம் சுளித்தால் போதும், "நான் இத்தனை வருஷம் பேங்க் மேனேஜரா இருந்தவன். எனக்குத் தெரியாதா?" என்று தன் பழைய பதவியை ஒரு கேடயமாகப் பயன்படுத்திக் கொள்வார்.
ஒரு மாலை நேரப் பாடம்
ஒருநாள் மாலை, ஏரியாவில் இருந்த சிறிய பூங்காவில் வேணுகோபால் அமர்ந்திருந்தார். ஒரு இளைஞன் அங்கே அமர்ந்து தீவிரமாக மடிக்கணினியில் (LAPTOP) வேலை செய்து கொண்டிருந்தான்.
வேணுகோபால் மெதுவாக அவன் அருகில் சென்றார்.
"தம்பி, இது பூங்கா. இங்க வந்து வேலை செய்யக்கூடாது. கண்ணு கெட்டுப்போயிடும். இயற்கை காற்றை சுவாசிங்க," என்றார் வழக்கமான மேஸ்திரித்தனத்துடன்.
அந்த இளைஞன் நிமிர்ந்து பார்த்து, "சரிங்க சார்" என்று மட்டும் சொல்லிவிட்டு வேலையைத் தொடர்ந்தான்.
வேணுகோபாலுக்குக் கோபம் வந்தது. "நான் சொல்றது உன் நல்லதுக்குதான். நான் யாருன்னு தெரியுமா? முப்பது வருஷமா இந்த ஏரியால இருக்கேன்..." என்று ஆரம்பித்தார்.
சிரித்துக் கொண்டே அந்த இளைஞன் கேட்டான், "சார், உங்களுக்கு முன்னாடி இந்த இடத்துல ஒரு பெரிய வேப்பமரம் இருந்ததே, அது எப்போ வெட்டுனாங்கன்னு தெரியுமா?"
வேணுகோபால் தடுமாறினார். "அது... ஒரு அஞ்சு வருஷம் இருக்குமோ?"
"இல்லை சார், போன மாசம்தான் வெட்டுனாங்க. நீங்க முப்பது வருஷமா இங்க இருக்கீங்க, ஆனா போன மாசம் இங்கிருந்து போன மரம் உங்களுக்குத் தெரியல. ஆனா, நான் இங்க வந்து ரெண்டு மாசம்தான் ஆகுது, எனக்குத் தெரியுது. சார்... நீங்க இங்க 'இருக்கீங்க', ஆனா உங்களைச் சுத்தி நடக்குற எதையும் கவனிக்கல. மத்தவங்க உங்களைக் கவனிக்கணும்னு நினைக்கிறீங்க, ஆனா நீங்க இந்த உலகத்தை கவனிக்க மாட்டேங்குறீங்க."
புதிய தெளிவு
வேணுகோபாலுக்குச் சுருக்கென்று இருந்தது. தான் இத்தனை காலம் ஒரு மாயையான அதிகார உலகிற்குள்ளேயே வாழ்ந்து கொண்டிருப்பதை அவர் உணர்ந்தார்.
மற்றவர்களுக்குத் தெரிய வேண்டும் என்று ஆசைப்படுவதை விட, நம்மைச் சுற்றியுள்ள அழகான உலகத்தை நாம் எவ்வளவு நேசிக்கிறோம் என்பதே முக்கியம் என்று அவருக்குப் புரிந்தது.
வீட்டிற்குத் திரும்பிய வேணுகோபால், சுமதி தந்து நீட்டிய காபியை அமைதியாக வாங்கிக் கொண்டார்.
"சுமதி, நாளைலருந்து யாருக்கும் அட்வைஸ் பண்ணப் போறதில்ல. அமைதியா இந்த உலகத்தை வேடிக்கை பார்க்கப் போறேன். நான் நானாவே இருக்கப் பழகிக்கிறேன்," என்றார்.
சுமதி புன்னகையுடன் கேட்டாள், "அப்பாடா! இப்போவாவது அந்த மேனேஜர் நாற்காலியை விட்டு கீழ இறங்கி வந்தீங்களே, அது போதும்!"
நீதி: அங்கீகாரத்தைத் தேடி அலைவதை விட, அமைதியாக வாழ்வதில் அதிக நிம்மதி இருக்கிறது.



-லால்குடி
வெ.நாராயணன்




# Boomer to Gen Z

பாகம் 23



வி.பிரபாவதி
மடிப்பாக்கம்.

" மாலு, பையன் ஜாதகம் நன்னா பொருந்தியிருக்கு. ஆனா வெளிநாட்டு வரன் போல இருக்கு. நன்னா விசாரிக்கனும். வாத்தியாராத்து மாமி சொன்னா அமெரிக்கா வரன் இப்பெல்லாம் நறையா வருதாம். பொண்களே தனியா வெளிநாட்டுல போய் தனியா படிக்கிறாளாம். வேலை பார்க்கிறாளாம். பயம் இல்லைங்கறா. பாத்து விஜாரிச்சு முடிவெடுக்கணும்" கோமளம் நோக்கியா மொபைலில் பேசினாள்.
"சரிம்மா. இவர்கிட்ட சொல்றேன். பையனோட அப்பா நன்னாப் பேசினார். பார்ப்போம். பகவான் சித்தம்".

"நீயும் அப்பாவும் எப்படி இருக்கேள்? சுந்தரி எதுவும் வந்தாளா? ஒடம்பப் பாத்துக் கோங்கோ. சுவாமிநாத சுவாமிகிட்ட வேண்டிக்கோ. எல்லாம் நல்லபடியாக நடக்கணும்" மாலு போனை வைத்துவிட்டு துணி காயப்போடப் போனாள்.
கோவிலிலிருந்து வந்த வாசுவிடம் அம்மா சொன்னதை சொன்னாள். நன்றாக விசாரிக்க வேண்டும் என்று முடிவு செய்தனர்.
நிறைய நண்பர்கள், தெரிந்தவர்கள் மூலம் விசாரித்த பின்னர் திருமணம் நிச்சயம் செய்யப்பட்டது. சத்திரம் பிடித்து அமர்க்களமாக நடந்தது. மாலு தனக்கு வாசுவுடன் நடந்த சிம்பிளான நிச்சயதார்த்தத்தை நினைத்துப் பார்த்தாள். ஊரிலிருந்து கோமளமும், வரதனும் சுந்தரி, மாப்பிள்ளை, பேரன் பேத்தியுடன் காரில் வந்துவிட்டு போனார்கள். நிச்சயதார்த்த சிலவுகளே ஒரு திருமண சிலவு போல் இருந்தது.

ஒன்றரை மாதமே மாப்பிள்ளை இந்தியாவில் இருப்பதால் உடனேயே திருமணம் இருபது நாட்களில் வைத்துக் கொண்டார்கள்.
கேட்டரிங், பக்ஷணங்கள், எல்லாம் ஆர்டர் கொடுக்கப்பட்டது. நகரத்தில் ஒரு பெரிய திருமண மண்டபம் (உடனே கிடைக்க வேண்டி அதிகத் தொகை கொடுத்து புக் செய்தார்கள்) கிடைத்தது.

ஸ்ரீஹரி குடும்பம், சுந்தரி குடும்பம், கோமளம், வரதன் எல்லோரும் நான்கு நாட்கள் முன்னதாக வந்திருந்து திருமண வேலைகளில் பங்கேற்றனர். கல்யாணியும் சந்தோஷத்தில் கொஞ்சம் தெம்பாகக் காணப்பட்டாள்.
தனது கல்யாணத்தைப் போல் சம்பிரதாயங்கள் குறையாமல் பார்த்து பார்த்து செய்தார்கள் மாலுவும் வாசுவும்.

ஸ்ரவந்தி தன் தோழிகளுடன் சேர்ந்து ஒருசில சங்கீத், ரிசப்ஷனில் லைட் மியூசிக் என்றெல்லாம் ஏற்பாடு செய்திருந்தது புதுமையாக இருந்தது.
செலவுகள் கைமீறிப் போனாலும் எப்படியோ சமாளித்து திருமணத்தை மிகச் சிறப்பாக செய்தார்கள். இருந்தாலும் மாப்பிள்ளையின் நண்பர்களுக்கென ரூம் புக் செய்வதில் சில குழப்பங்கள் ஏற்பட்டது. மண்டபத்திற்கு அருகில் ரூம் கிடைக்காததால் போக்குவரத்து சிரமம் ஏற்பட்டதில் மாப்பிள்ளையின் சித்தப்பா கொஞ்சம் பிரச்சினை பண்ணிவிட்டார்.

வாக்குவாதம் முற்றிவிடாமல் ஸ்ரீஹரி பார்த்துக் கொண்டான். ஒரு சின்ன வருத்தமாக ஆகிவிட்டது. திருமண வைபவம் கட்டுசாதக் கூடையுடன் நல்லபடியாக நடந்தது. சுந்தரியும், அவள் கணவரும் பொண்ணு மாப்பிள்ளையை கொண்டுவிட விரும்பினார்கள். மாலுவும் வாசுவும் மிகவும் சந்தோஷத்தோடு ஒப்புக் கொண்டனர்.

கொண்டு விடப் போனதில் சுந்தரிக்கும் சந்தோஷம். போகும்போது காரில் மாலு வாசுவின் கல்யாணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே வந்தாள். மாப்பிள்ளை சுதாகரின் அக்காவும் ரசித்துக் கொண்டே வந்தாள். மதுரையில் புக்ககத்தில் விட்டு விட்டு மறுநாள் மீனாட்சியை தரிசனம் செய்துவிட்டு சென்னை திரும்பி விட்டார்கள். ஒருசில முக்கியமான வேண்டுதல்களையும் குலதெய்வ வழிபாட்டுக்களையும் முடித்துக் கொண்டு சுதாகர் கிளம்பியாயிற்று.
ஸ்ரவந்தி கிளம்ப சில பாஸ்போர்ட், விசா ப்ராசஸ் இருக்கிறது. ஓரிரு மாதங்களில் கிளம்பி விடுவாள். அபிஷேக் மிகவும் கஷ்டப்படுவான். அக்காதான் எல்லாம் அவனுக்கு. இருவரும் நல்ல நண்பர்களைப் போலவே இருப்பார்கள்.
ஸ்ரவந்திக்கு வெளிநாடு செல்வதில் மகிழ்ச்சி என்றாலும் இவ்வளவு குறுகிய நாட்களில் அனைவரையும் விட்டுச் செல்வதும் கவலையைத் தந்தது.

நல்லது பொல்லாததற்கு உடனே வரமுடியுமா என்ற கவலை. அங்கு தனக்கு நல்ல வேலை கிடைக்க வேண்டும். தனியாக இருக்கும் மாமனாரை கவனித்துக் கொள்ள வேண்டும் என்று நினைவுகளில் மூழ்கினாள்.



தொடரும்...

# ஸ்ரீ ராமநவமி தோன்றிய புராண வரலாறு

ராமநவமி

’கலியுகத்தில் கடுமையான விரதங்களோ பூஜைகளோ செய்துதான் புண்ணியபலன்களை அடையவேண்டும் என்பது அவசியமில்லை. அன்புடன் பகவானின் திருநாமத்தினைச் சிந்தித்தாலே போதும்’ என்பது எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவாக்கு. அத்தகு நாமஜெபத்தில் மிகவும் உயர்ந்தது ஸ்ரீராமநாம ஜெபம்.

ராமநவமி

ஸ்ரீராமபிரான் சித்திரை சுக்லபட்ச நவமியன்று புனர்பூச நட்சத்திரம் நான்காவது பாதத்தில் அவதரித்தவர். இதையொட்டி ஸ்ரீராமநவமி எனப்படும் ஸ்ரீராமஜென்மோத்சவமானது நமது தேசம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

ராமநவமி - தோன்றிய புராணவரலாறு..!

பொதுவாக ஒரு மாதத்திற்கு இரண்டு பட்சங்கள். ஒரு பட்சம் என்பது பதினைந்து திதிகளைக் கொண்டது என்பது அனைவரும் அறிந்ததே. இவற்றுள் ஒவ்வொரு திதியும் ஒவ்வொரு கடவுளுக்கு உகந்ததாகப் போற்றப்படுகின்றன அல்லவா..?! அதேபோல் இன்னின்ன காரியங்களுக்கு இன்னின்ன திதிகள் உரியவை என்ற சிறப்புடன் எல்லா திதிகளும் மகிழ்ந்திருந்தன. ஆனால் சுபகாரியங்களுக்கு ஆகாத திதிகள் என அஷ்டமி மற்றும் நவமி ஆகிய இரண்டையும் மக்கள் ஒதுக்குவதை நினைத்து கண்ணீர் விட்ட அத்திதி தேவதைகள் திருமாலிடம் சென்று தங்கள் மனக்கேதத்தினைச் சொல்லி முறையிட்டனவாம்.

அதற்கு பகவானும், "கவலைப்படாதீர்கள், உங்கள் இருவரையும் மக்கள் கொண்டாடுமாறு செய்கிறேன்" என்று சமாதானம் செய்தருளினாராம். அதன்படி, இராம அவதாரத்தினை நவமியிலும்; கிருஷ்ண அவதாரத்தினை அஷ்டமியிலும் நிகழ்த்தி தாம் சொன்ன வாக்கினை நிறைவேற்றினாராம். இதனாலேயே ஸ்ரீ ராமநவமி மற்றும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி ஆகிய இரண்டையும் மக்கள் சிறப்பாகப் பூஜிக்கின்றார்கள் என்கின்றன புராண நூல்கள்.

ராமபிரான் லீலைகள்



ராமபிரான் லீலைகள்
ராமநவமி - விரதமிருந்தால் இவ்வளவு பலன்களா..?

ஒரு சமயம் கேசவ பட்டர் என்கிற ஏழை அந்தணர் தேசயாத்திரை புறப்பட்டார். செல்கிற வழியில் வியாசர், பராசரர், சுகி ஆகிய மூன்று தவ முனிவர்களைக் கண்டு வணங்கியவர் தன் ஏழ்மை நிலையினைச் சொல்லி வருத்தத்துடன் முறையிட்டார்.

அவர்களோ ஸ்ரீ ராமநவமி விரதத்தினை முறையாக உபதேசித்ததுடன் ராமாயண உபன்யாசம் செய்வதாலும் கேட்பதாலும் கிடைக்கிற அளப்பரிய பலன்களையும் சொன்னார்கள். இப்படியாக இராம நவமி விரதத்தினை முறையாக மேற்கொண்டால் திருமகள் கடாட்சம் கிடைக்கும்; பகைவர்கள் கூட நண்பர்களாக மாறி விடுவர்; வியாதிகள் தொலையும்; இழந்தவற்றை மீண்டும் அடையலாம்; உத்தமமான குழந்தைகள் மூலம் சந்ததி விருத்தி உண்டாகும் என்கிற பலன்களை மூன்று முனிபுங்கவர்கள் மூலமாகவும் அறிந்த கேசவபட்டர் அவர்களை மகிழ்வுடன் வணங்கி சொந்த ஊர் திரும்பினார். இராமநவமி விரதமகிமையால் சகல ஐஸ்வர்யங்களையும் அடைந்த அவர் பலருக்கும் இவ்விரத மகிமையை உபதேசித்தார். இதன் பலனாக அவரின் மகனான நாராயணன் பட்டத்து யானை மாலையைப் போட்டதன் மூலம்




அந்நாட்டிற்கே அரசன் ஆனான். அந்நாடே சுபிட்சமாக விளங்கியது.

விரதங்களில் எளிமையானது இது மட்டும்தான்..!

நமது சமயவியல் வாழ்வில் ஏராளமான விரதபூஜைகள் நம்மால் கடைப்பிடிக்கப் படுகின்றன. ஆனால் மிக எளிமையானதும்; அதேசமயத்தில் உயர்ந்த பலன்களைத் தரவல்லதுமான விரதம் ஸ்ரீராமநவமி ஒன்றே..!

ஸ்ரீ ராமபிரான் அவதரித்தது நல்ல கோடைக் காலம். குருகுல வாசத்தின்போதும்; வனவாசத்தின் போதும் வெயிலில் பாதுகைகள் இன்றி நடந்தவர் அப்பெருமான். தவிர இராமர் பிறந்த அன்று அவரது தந்தையான தசரதச் சக்கரவர்த்தி அயோத்தி முழுவதும் பானகம் மற்றும் நீர்மோருடன் விசிறியும் அளித்து தமது மகிழ்ச்சியைக் கொண்டாடினாராம்.

இதனாலேயே ஸ்ரீராமநவமியன்று எலுமிச்சை மற்றும் வெல்லம் சேர்த்த பானகமும்; தாளித்த நீர்மோரும் நிவேதிக்கப்படுதல் மரபாக உள்ளது.

பெருமாள்

பெருமாள் ஸ்ரீராமநவமி விரதம் - நினைவில் கொள்ள வேண்டியவை..!
சித்திரை மாதத்தில் முதல் திதியான பிரதமை துவங்கி நவமி வரை ஒன்பது தினங்கள் விரதம் நோற்று ராமாயணத்தினை பாராயணம் செய்வது ஒரு முறை. இதில் பத்தாவது நாளாகிய தசமி திதியன்று இராமர் பட்டாபிஷேக படலத்தினைப் பக்தியுடன் வாசித்து பூர்த்தி செய்வது வழக்கம்.
ஸ்ரீஇராமநவமி அன்றைய ஒரு தினம் மட்டும் விரதமிருந்து பூஜை செய்வது பெரும்பாலானோர் வழக்கம்.

ஸ்ரீராமர் பட்டாபிஷேக படத்தினையோ அல்லது விக்கிரகங்களையோ அலங்கரித்து

அர்ச்சிக்கலாம். அல்லது ஸ்ரீராமாயணம் புத்தகத்தினை வைத்தும் பூஜிக்கலாம். மனைப்பலகையில் கோலமிட்டு ஸ்ரீ ராமஜெயம் என்று அரிசிமாவினால் எழுதி, அதற்கு சந்தன குங்கமத் திலகமிட்டு, பூக்கள் தூவி வழிபடுவது வழக்கம். ராமநாமத்தினைச் சொல்லி தாமரை மலர்களால் பூஜிப்பது அதிக விசேஷம். எளிமையான துளசிதளங்களைக் கொண்டு அர்ச்சிப்பதும் சிறப்பு.

இராமர் ஜனித்தது நடுப்பகலில் என்பதால் இப்பூஜையினை பகல்நேரத்தில் செய்வதுதான் சம்பிரதாயம்.

அன்னம், பாயசம், வடைபருப்பு, கனிவகைகள், தேங்காய், வெற்றிலை முதலியவற்றுடன் இயன்ற நிவேதனங்களை சமர்ப்பிப்பது வழக்கம்.

முக்கியமாக பானகமும்; நீர்மோரும் இடம்பெறுதல் அவசியம்.
பானகம் மற்றும் நீர்மோர் இவற்றை பூஜை முடிந்தபின் பிரசாதமாக அனைவருக்கும் விநியோகிக்க வேண்டும். குடை, விசிறி அல்லது செருப்பு போன்றவைகளில் இயன்றவற்றை தானம் செய்வது விசேஷம்.

ராம நாம மகிமை

ராம நாம மகிமை அன்றைய தினம் முழுமையும் ஸ்ரீராமநாமத்தினைச் சிந்தித்தபடியே இருத்தல் அவசியம்.

அரண்மனை சுகபோகத்தில் பிறந்தாலும் எளிவந்த பிரானாக அவதானித்துக் காட்டியவர் ராமபிரான். அப்பெருமானின் நாமத்தினை சிந்தித்து அதே எளிமையான நற்குணங்களுடன் வாழ நாமும் பிரார்த்திக்கலாமே..!

BALACHANDAR

தினம் ஒரு தலைவர்கள்

# சரத் சந்திர போஸ் வரலாறு

சரத் சந்திர போஸ் செப்டம்பர் 6, 1889 அன்று ஒடிசாவின் கட்டாக்கில் ஜானகிநாத் போஸ் (தந்தை) மற்றும் பிரபாபதி தேவிக்கு பிறந்தார்.

இந்தக் குடும்பம் முதலில் மேற்கு வங்காளத்தின் தெற்கு 24 பர்கானாஸ் பகுதியில் உள்ள கோடாலியாவை (இப்போது சுபாஷ்கிராம்) பூர்வீகமாகக் கொண்டது . அவர் குலின் கயஸ்தா குடும்பத்தைச் சேர்ந்தவர் . அவரது தந்தை மஹிநகர் ( தெற்கு 24 பர்கானாஸ் ) போஸ் வம்சாவளியைச் சேர்ந்தவர், அதே நேரத்தில் அவரது தாயார் பிரபாபதி தேவி வடக்கு கொல்கத்தாவில் உள்ள ஹட்கோலாவின் பிரபலமான தத்தா குடும்பத்தைச் சேர்ந்தவர். அவர் பதினான்கு குழந்தைகள், ஆறு மகள்கள் மற்றும் எட்டு மகன்களைப் பெற்றெடுத்தார், அவர்களில் இடதுசாரித் தலைவர் சரத் சந்திர போஸ், நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் மற்றும் புகழ்பெற்ற இருதயநோய் நிபுணர் டாக்டர் சுனில் சந்திர போஸ் ஆகியோர் அடங்குவர்.
சரத்துக்கு இரண்டு மூத்த சகோதரிகள் இருந்தனர். அவர்கள் பிரமிளாபாலா மித்ரா மற்றும் சரலாபாலா டே. அவருக்கு சதீஷ் சந்திர போஸ் (1887 - 1948) என்ற மூத்த சகோதரர் இருந்தார். அவருக்கு ஆறு இளைய சகோதரர்கள் இருந்தனர், அதாவது: சுரேஷ் சந்திர போஸ் (1891 -1972), சுதிர் சந்திர போஸ் (1892 - 10 பிப்ரவரி 1950), டாக்டர் சுனில் சந்திர போஸ் (1894 - 17 நவம்பர் 1953), சுபாஷ் சந்திர போஸ் (23 ஜனவரி 1897 -18 செப்டம்பர் 1985), சைலேஷ் சந்திர போஸ் (1904 -1984) மற்றும் சந்தோஷ் சந்திர போஸ். அவருக்கு நான்கு இளைய சகோதரிகள் இருந்தனர், அவர்கள் தருபாலா ராய், மாலினா தத்தா, பிரதிபா மித்ரா மற்றும் கனகலதா மித்ரா. அவர் 1909 இல் இருபது வயதில் பிவாபதி போஸை மணந்தார், மேலும் தம்பதியருக்கு எட்டு குழந்தைகள் இருந்தனர், அவர்கள் முதிர்வயது வரை உயிர் பிழைத்தனர்.

சரத் போஸ் , ஸ்காட்டிஷ் சர்ச் கல்லூரியின் பிரசிடென்சி கல்லூரியில் படித்தார் , பின்னர் கல்கத்தா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டார் , பின்னர் 1911 இல் இங்கிலாந்து சென்று ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றினார். லிங்கன்ஸ் இன்னில் வழக்கறிஞர் பணிக்கு அழைக்கப்பட்டார் . இந்தியா திரும்பியதும் அவர் ஒரு வெற்றிகரமான சட்டப் பயிற்சியைத் தொடங்கினார், ஆனால் பின்னர் அதைக் கைவிட்டு இந்திய சுதந்திர இயக்கத்தில் சேர்ந்தார் .

அரசியல் வாழ்க்கை

1936 ஆம் ஆண்டு, போஸ் வங்காளப் பிரதேச காங்கிரஸ் குழுவின் தலைவரானார், மேலும் 1936 முதல் 1947 வரை அகில இந்திய காங்கிரஸ் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றினார்.
ஃபஸ்லுல் ஹக் அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சராக சேரவிருந்ததற்கு முந்தைய நாள் சுபாஷ் தப்பிச் சென்ற பிறகு சரத் போஸ் கைது செய்யப்பட்டார். அவர் மெர்காராவில் உள்ள சிறைக்கும் பின்னர் குன்னூரில் உள்ள சிறைக்கும் மாற்றப்பட்டார், அங்கு அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டது. 4 ஆண்டு சிறைத்தண்டனைக்குப் பிறகு செப்டம்பர் 1945 இல் அவர் விடுவிக்கப்பட்டார். 1946 முதல் 1947 வரை, போஸ் மத்திய சட்டமன்றத்திற்கு காங்கிரஸ் குழுவை வழிநடத்தினார். சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்குவதை அவர் கடுமையாக ஆதரித்தார் மற்றும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாக பங்கேற்றார் . 1945 ஆம் ஆண்டு தனது சகோதரர் இறந்ததாகக் கூறப்பட்டதைத் தொடர்ந்து, ஐஎன்ஏ பாதுகாப்பு மற்றும் நிவாரணக் குழுவின் மூலம் ஐஎன்ஏ வீரர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் மற்றும் உதவி வழங்குவதற்கான முயற்சிகளுக்கு போஸ் தலைமை தாங்கினார் . 1946 ஆம் ஆண்டில், அவர் பணிகள், சுரங்கங்கள் மற்றும் அதிகாரங்களுக்கான இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார் - ஜவஹர்லால் நேரு மற்றும் சர்தார் வல்லபாய் படேல் தலைமையிலான தேசிய நிர்வாகக் குழுவில் அமைச்சர் பதவி , இந்திய வைஸ்ராயால் தலைமை தாங்கப்பட்டது.

வங்காளப் பிரிவினையும் பிற்கால வாழ்க்கையும்

இருப்பினும், வங்காளத்தை இந்துக்கள் பெரும்பான்மை மற்றும் முஸ்லிம்கள் பெரும்பான்மை பகுதிகளுக்கு இடையில் பிரிக்க வேண்டும் என்ற அமைச்சரவை மிஷன் திட்டத்தின் அழைப்பில் கருத்து வேறுபாடு காரணமாக போஸ் AICC-யில் இருந்து ராஜினாமா செய்தார் . வங்காள முஸ்லிம் லீக் தலைவர்களான ஹுசைன் ஷாஹீத் சுஹ்ரவர்தி மற்றும் அபுல் ஹாஷிம் ஆகியோருடன் ஒன்றுபட்ட ஆனால் சுதந்திரமான வங்காளம் மற்றும் வடகிழக்கு ஐக்கிய வங்கத்திற்கான முயற்சியை அவர் உருவாக்க முயன்றார் . முகமது அலி ஜின்னா ( பாகிஸ்தானின் ஸ்தாபக தந்தையான அகில இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவர் ) அதை ஆதரித்தார். மகாத்மா காந்தியும் அதை ஆதரித்தார். இந்திய தேசிய காங்கிரசும் வங்காளத்தைச் சேர்ந்த இந்திய சட்டமன்றத்தின் இந்து உறுப்பினர்களும் அதை எதிர்த்தனர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, போஸ் தனது சகோதரரின் ஃபார்வர்ட் பிளாக்கை வழிநடத்தி , வங்காளத்திற்கும் இந்தியாவிற்கும் ஒரு சோசலிச அமைப்பை ஆதரித்து சோசலிச குடியரசுக் கட்சியை உருவாக்கினார். அவர் பிப்ரவரி 20, 1950 அன்று கல்கத்தாவில் 60 வயதில் இறந்தார்.

குடும்பம்

சரத் போஸ் 1909 ஆம் ஆண்டு அக்ஷோய் குமார் டே மற்றும் சுபலா டே ஆகியோரின் மகள் பிவாபதி டேயை மணந்தார்.
இந்த தம்பதியருக்கு எட்டு குழந்தைகள் பிறந்தனர். இவர்களது குழந்தைகளில் ஜெர்மனியைச் சேர்ந்த வேதியியலில் முனைவர் பட்டம் பெற்ற அசோக் நாத் போஸ் ; வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் பங்கேற்று நாடாளுமன்ற உறுப்பினரான அமியா நாத் போஸ் , பர்மாவிற்கான இந்தியத் தூதராகவும் இருந்தார்; குழந்தை மருத்துவராகவும் சட்டமன்ற உறுப்பினராகவும் ஆன சிசிர் குமார் போஸ் , மின் பொறியியலாளராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்த சுப்ரதா போஸ் ஆகியோர் அடங்குவர். அவரது இளைய மகள் பேராசிரியர் சித்ரா கோஷ் , ஒரு புகழ்பெற்ற கல்வியாளர், சமூக விஞ்ஞானி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் உள்ளார். அவரது மூத்த பேரன் சுகதா போஸ் , ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் கடல்சார் வரலாறு மற்றும் விவகாரங்களில் கார்டினர் பேராசிரியராகவும் , மக்களவையின் முன்னாள் உறுப்பினராகவும் உள்ளார் . அவரது இளைய பேரன் சுமந்திர போஸ் , லண்டன் பொருளாதாரம் மற்றும் அரசியல் அறிவியல் பள்ளியில் ஒப்பீட்டு அரசியல் பேராசிரியராக உள்ளார்.
கொல்கத்தாவில் உள்ள சரத் சந்திர போஸின் சிலை கௌரவங்கள் கல்கத்தா உயர்நீதிமன்றத்திற்கு அருகில் சரத் சந்திர போஸின் சிலை அமைந்துள்ளது.
ஜனவரி 2014 இல், சரத் சந்திர போஸ் நினைவு சொற்பொழிவு நிறுவப்பட்டது, மேலும் முதல் சொற்பொழிவை சர்வதேச புகழ் பெற்ற வரலாற்றாசிரியர் லியோனார்ட் ஏ. கார்டன் நிகழ்த்தினார் - அவர் சரத் மற்றும் அவரது தம்பி சுபாஸின் கூட்டு வாழ்க்கை வரலாற்றை "பிரதர்ஸ் அகைன்ஸ்ட் தி ராஜ்" என்ற தலைப்பில் எழுதியுள்ளார் .





மணிகண்டன் நடித்த குடும்பஸ்தன் படத்தில் ஹீரோயினாக நடித்து பிரபலம் ஆனவர் சான்வே மேக்னா. அந்த படம் பெரிய அளவில் அவருக்கு புகழை பெற்று கொடுத்தது. தெலுங்கு நடிகை என்பதால் அவர் தெலுங்கில் தான் அதிகம் படங்கள் நடித்து வருகிறார். சமீபத்தில் அவர் Anaganaga Oka Raju என்ற படத்தில் ஒரு பாடலுக்கு மட்டும் கவர்ச்சியாக டான்ஸ் ஆடி இருந்தார். தற்போது சான்வே மேக்னா செம கிளாமர் ஆன உடையில் போஸ் கொடுத்திருக்கும் லேட்டஸ்ட் ஸ்டில்களை பாருங்க.

# லெஜண்ட் சரவணனின் லீடர் ரிலீஸ்



லெஜண்ட் சரவணன் மற்றும் இயக்குநர் துரை செந்தில்குமார் கூட்டணியில் உருவாகி இருக்கும் திரைப்படம் 'லீடர்.' தி லெஜெண்ட் நியூ சரவணா ஸ்டோர்ஸ் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் உருவாகி இருக்கும் இந்தப் படத்திற்கு எஸ். வெங்கடேஷ் ஒளிப்பதிவு செய்ய பிரதீப் படத்தொகுப்பை கவனிக்கிறார்.

கலை இயக்க பணிகளை துரைராஜ் மேற்கொண்டுள்ளார். இந்தப் படத்தின் சண்டை காட்சிகளை மேத்யூ மகேஷ் அமைத்துள்ளார். ஆக்ஷன் கதையம்சம் கொண்ட இந்தப் படத்தின் டீசர் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. லீடர் திரைப்படம் உலகளவில் ஏப்ரல் 03-ஆம் தேதி வெளியாக இருக்கிறது.

லீடர் திரைப்படத்திற்கு தணிக்கை குழு யு/ஏ சான்றளித்துள்ளது. லீடர் திரைப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். இந்த நிலையில், லீடர் திரைப்படம் திட்டமிட்டப்படி ஏப்ரல் 03-ஆம் தேதி வெளியாகும் என்பதை அறிவிக்கும் வகையில், படக்குழு புதிய போஸ்டரை வெளியிட்டுள்ளது.

# நூறு சாமி படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் வெளியானது!




தமிழ் திரையுலகில் பெரும் வெற்றி பெற்ற திரைப்படம் "பிச்சைக்காரன்." இயக்குநர் சசி மற்றும் விஜய் ஆண்டனி கூட்டணியில் இந்தப் படம் வெளியானது. இதைத் தொடர்ந்து விஜய் ஆண்டனி பல திரைப்படங்களில் நடித்த போதிலும், அவர் இயக்குநர் சசியுடன் மீண்டும் எப்போது இணைவார என்ற எதிர்பார்ப்பு நிலவி வந்தது.

இதனை பூர்த்தி செய்யும் வகையில், இயக்குநர் சசி மற்றும் விஜய் ஆண்டனி மீண்டும் இணைந்துள்ளனர். இருவரும் இணைந்துள்ள படத்திற்கு "நூறு சாமி" என தலைப்பிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தின் இறுதிக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

முன்னதாக இயக்குநர் வெற்றிமாறன் வெளியிட்ட 'நூறு சாமி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டருக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்தது. போஸ்டரில் விஜய் ஆண்டனியுடன், லம்பர் பந்து படத்தில் நடித்து புகழ் பெற்ற நடிகை ஸ்வாசிகா நடித்துள்ளது அறிவிக்கப்பட்டது.

மேலும் இந்தப் படத்தில் லிஜோமோல், கருணாஸ், காவ்யா அனில் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படத்தின் முதல் பாடலான 'மாய கனவோ' வெளியாகி இருக்கிறது. இந்தப் படம் வருகிற மே 1-ஆம் தேதி உழைப்பாளர் தினத்தன்று திரைக்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.



# Vijay - Trisha குறித்து அப்படி பேச இது தான் காரணம்





தமிழக வெற்றிக் கழக தலைவரும், நடிகருமான விஜயின் மனைவி சங்கீதா சமீபத்தில் செங்கல்பட்டு குடும்பநல நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அதில், தனது கணவர் விஜயுடன் தான் சேர்ந்துவாழ விரும்பவில்லை. எனவே தங்களுக்கு விவாகரத்து வழங்க வேண்டும். கடந்த 4 ஆண்டாக நடிகை ஒருவருடன் விஜய் தொடர்பில் இருப்பதாகவும், அதனை கண்டித்த பிறகும் மீண்டும் அந்த நடிகையுடன் தொடர்பில் இருந்து வருகிறார் என குற்றம்சாட்டி இருந்தார்.

இதற்கிடையே, திருவான்மியூரில் நடந்த திருமண நிகழ்ச்சி ஒன்றில் நடிகர் விஜயும், நடிகை திரிஷாவும் ஒரே மாதிரி உடைகளை அணிந்துகொண்டு பங்கேற்றது சமூக வலைதளத்தில் பேசுபொருளாக மாறியது.

அந்த சமயத்தில் இயக்குநரும் நடிகருமான சமுத்திரக்கனி பேசிய வீடியோ ஒன்று வைரலானது. அந்த வீடியோவில், "இதெல்லாம் விளையாட்டா? யாரை பழிவாங்க இதை செய்கிறார்? ஒரு பிரச்னை நடக்கும்போது நடிகையை கூட்டி வருகிறார். நான்கு சுவருக்குள் இதையெல்லாம் வைத்துக்கொள்ள வேண்டும். சொந்தக் கட்சிக்காரர்களே இதற்கு மேல் முட்டுக்கொடுக்க முடியாது என்று புலம்புகிறார்கள்" என்று சமுத்திரக்கனி பேசியிருந்தார். விஜயை குறிப்பிட்டு தான் சமுத்திரக்கனி பேசியுள்ளார் என்று இணையத்தில் இந்த வீடியோ வைரலானது.

இந்நிலையில், அந்த வீடியோ குறித்து சமுத்திரக்கனி விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து பேசிய அவர், "வீடியோ எடுக்கிறார்கள் என எனக்கு முன்பே தெரியும். முன்னுரையை அந்த தம்பி எடுக்கவில்லை, முடிவுரையை மட்டும் தான் எடுத்தான், சரி எடுக்கட்டும் என விட்டுவிட்டேன்; எனக்கு உள்ளே ஒன்று வைத்து வெளியே ஒன்று பேச தெரியாது. சந்தோஷமோ, வலியோ, வேதனையோ அதை அப்படியே பிரதிபலித்துவிட்டு நான் அடுத்த தளங்களுக்கு சென்றுவிடுவேன். அது வந்துவிட்டது, அதற்கு மேலே மானே தேனே எல்லாம் சேர்த்து தம்பிகள் வேலையை பார்த்துவிட்டார்கள். அதனை நான் ஒரு குற்றமாக எல்லாம் நினைக்கவில்லை; பேசிவிட்டு பின் வருத்தமாகவும் நினைக்கவில்லை. என் மனதிற்கு பட்டதை பேசினேன்" என்று தெரிவித்தார்.

# வாஸ் கே பிரசன்னா இசையமைக்கும் புதிய திரைப்படம்

தமிழ் திரையுலகில் ரசிக்கும்படியான ஹிட் பாடல்களை தொடர்ந்து கொடுத்து வருகிறார் இசையமைப்பாளர் நிவாஸ் கே. பிரசன்னா. தனது தனித்துவமான இசைக்காக கொண்டாடப்படும் அவர் தமிழ் திரையுலகின் இசையுலகில் புத்துயிர் ஊட்டியதாக பாராட்டப்படுகிறார். அவரது இசை ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெறுவதுடன், திரையரங்குகளுக்கு ரசிகர்களை ஈர்க்கும் முக்கிய அம்சமாகவும் உள்ளது.

சமீபத்தில் வெளியான 'தாய் கிழவி' உள்ளிட்டப் பல வெற்றிப் படங்களை தொடர்ந்து இன்னும் பல நம்பிக்கைக்குரிய படங்களுக்கு நிவாஸ் கே பிரசன்னா இசையமைக்கிறார். அந்த வரிசையில், தயாரிப்பாளர் அருண் விஸ்வா தலைமையிலான சாந்தி டாக்கீஸ் நிறுவனத்தின் அடுத்த தயாரிப்பான 'புரொடக்ன் நம்பர் 4' திரைப்படத்திற்கு அவர் இசையமைப்பாளராக இணைந்துள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தரமான படங்களை தயாரித்து வரும் சாந்தி டாக்கீஸ் நிறுவனம், ஹரிஹர சுதன் அழகிரி இயக்கத்தில் உருவாகும் இந்தப் படத்தை அறிவித்ததில் இருந்தே ரசிகர்கள் மத்தியில் எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. இந்தப் படத்தில் பாரத் கதாநாயகனாகவும், 'குடும்பஸ்தன்' படப்புகழ் சான்வே மேக்னா கதாநாயகியாகவும் நடிக்கின்றனர்.



இந்தப் படத்தின் படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. திட்டமிட்ட காலக்கட்டத்திற்குள் படப்பிடிப்பு நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்நுட்பக் குழுவில் ஒளிப்பதிவை தேனி ஈஸ்வர் மேற்கொள்கிறார். கலை இயக்கத்தை சி.எஸ். பாலச்சந்தர் கவனிக்க, ஆடை அலங்கார வடிவமைப்பை கிருத்திகா சேகர் மேற்கொள்கிறார்.

'மாவீரன்', '3BHK' போன்ற வெற்றிப்படங்கள் மூலம் பான்-இந்திய அளவில் கவனம் பெற்ற சாந்தி டாக்கீஸ் நிறுவனம், தனது வெற்றிப் பயணத்தை 'புரொடக்ஷன் நம்பர் 4' மூலம் தொடரும் என நம்பிக்கை தெரிவித்துள்ளது.

# கர திரைப்படத்தில் கருணாஸ் கதாபாத்திரம்

நடிகர் தனுஷ் நடிப்பில் கடைசியாக வெளியான படம் 'தேரே இஷ்க் மே'. இந்தியில் எடுக்கப்பட்ட இப்படம் தமிழில் வரவேற்பைப் பெறவில்லை என்றாலும், இந்தியில் ரூ.160 கோடிக்கும் அதிகமாக வசூலித்து வெற்றிப் படமானது. தற்போது, தனுஷ் போர் தொழில் இயக்குநர் விக்னேஷ் ராஜா இயக்கத்தில் நடித்து முடித்துள்ளார். இந்தப் படத்தில் நாயகியாக மமிதா பைஜுவும், முக்கிய கதாபாத்திரங்களில் நடிகர்கள் சுராஜ் வெஞ்சரமூடு, ஜெயராம் ஆகியோர் நடித்துள்ளனர். 'கர' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் படத்திற்கு ஜி.வி. பிரகாஷ் குமார் இசையமைக்க தேனி ஈஸ்வர் ஒளிப்பதிவு செய்துள்ளார். இந்தப் படத்தை வேல்ஸ் ஃபிலிம் இன்டர்நேஷனல் சார்பில் ஐசரி கணேஷ் தயாரித்துள்ளார்.கர படத்தின் கதாபாத்திரங்களை அறிமுகம் செய்யும் போஸ்டர்களை படக்குழு பகிர்ந்து வருகிறது. 'பரதன்' என்ற கதாபாத்திரத்தில் சுராஜ் வெஞ்சரமூடு நடித்துள்ளதாக படக்குழு இன்று காலை போஸ்டர் வெளியிட்டு அறிவித்து இருந்தது. இதேபோல் நேற்று மமிதா பைஜு, 'செல்லி' என்ற கதாபாத்திரத்தில் நடித்துள்ளதாக படக்குழு போஸ்டர் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில், கர திரைப்படத்தில் நடிகர் கருணாஸ் காசி மாயன் என்ற கதாபாத்திரத்தில் நடிப்பதை படக்குழு தற்போது புதிய போஸ்டர் வெளியிட்டு அறிவித்து இருக்கிறது. இந்தப் படம் வருகிற ஏப்ரல் 30-ஆம் தேதி வெளியாகவுள்ளது.



நடிகை ராசி கண்ணா தமிழ் மற்றும் தெலுங்கில் இளசுகளை அதிகமாக கவர்ந்த ஹீரோயின்களில் ஒருவர். அதற்கு காரணம் அவர் தாராள கவர்ச்சியாக படங்களில் நடித்து வருவது தான். ராசி கண்ணா பட விழாக்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்கு வந்தால் தாராள கவர்ச்சியான உடையில் வரும் ஸ்டில்களும் இணையத்தில் வைரல் ஆகின்றன. தற்போது ராசி கண்ணா சேலையில் தாராள கிளாமர் காட்டி இருக்கும் புகைப்படங்கள் இதோ.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்


அருள்தரும் தெய்வம்
விளம்பர முகவர்கள் &
விற்பனை பிரதிநிதிகள் தேவை
• அருள்தரும் தெய்வம் மாதம் இருமுறை பக்தி இதழுக்காக
• பகுதிநேர / முழு நேர வாய்ப்புகள்
• கமிஷன் அல்லது மாத ஊதிய அடிப்படையில்
• மாதம் Rs. 20000 முதல் Rs. 50000/- வரை ஈட்ட சிறந்த வாய்ப்பு
ஸ்ரீ அகத்தியர் சொன்ன ரகசிய மந்திரங்கள்
CALL / WHATSAPP: 7789941009
இன்றே இணையுங்கள்!


Sanjay
Cell: 90032 64920
Real Choice
Retail & Wholesale
Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection
#361, Mint Street, (Opp. New Jain Temple)
Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai Real Choice Chennai Real Choice Chennai


WANTED
Needed female staff
to look after
children, patients.
Contact
9150989424


START YOUR OWN
EPAPER
WEBSITE TODAY!
CALL 7789941009


WANTED
Retd, VRS, Home Makers,
NRIs, Business Person
Contact
8248951872


WANTED
Site Supervisor required
for construction work in Ambattur
Contact:
8428872887


keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology - Freshers
Internship:
Clinical Training
Counseling Practice
Case Work
Jobs:
Social Worker
Jr Psychologist
Rehab Counselor
Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com


WANTED
TELECALLERS
• Work at Home
• Fulltime or Parttime
Salary Rs. 20000 to 50000/-
Call / Whatsapp:
7789941009
9337501889


Wanted
REPORTERS
சட்டமன்ற தொகுதி வாரியாக
நிருபர்கள் தேவை
PRESS
பேப்பர்பாய்
8122664699


தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.
Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E
Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI
VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma
Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE


அனைத்து பிரிவினருக்கும்
என் துணை
திருமண தகவல் மையம்
உங்கள் மணமகனை / மணப்பெண்ணைப் பதிவு செய்யவும்.
www.enthunai.com
support@enthunai.com
7871617005
7789941009


அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை
ஸ்ரீ ஹரி
ஜோதிட மையம்
ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள், ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம், சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில்
ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.
ஜோதிட நிபுணர் இராஜபாளையம்
இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com






## பரவாயில்லை...

எல்லாம் முடியும் என்பவனே...
என்னினிய இளைஞனே!
குடும்ப வறுமையால்
குறுகிய செலவில்
காலந் தள்ளும்
கஷ்டத்தில் உள்ளாயா?
பரவாயில்லை...
பணம் மட்டுமே இங்கே
வாழ்க்கை இல்லை என்பதை
பூரணமாய் நம்பி உழை...
பணம் உன் பின்னால்
கை கட்டி வந்து நிற்கும்...

மனக்கோட்டை கட்டிய
விரும்பிய கல்லூரிக்கு
விண்ணப்பித்தும்,
வேறொரு கல்லூரி தான்
உனக்கு வாசல் திறந்ததா?
பரவாயில்லை...
ராமன் இருக்கும் இடந்தான்
சீதைக்கு அயோத்தி
என்று நினைத்து
வாய்ப்பு தந்த கல்லூரியை
வசை எதுவும் பாடாமல்
சிக்கென்று பிடித்தவாறே
சிகரம் ஏறி சிறப்பாகு!

உயிருக்கு உயிராய்
நேசித்த உன் உன்னதக்
காதல்ஒளிர்ந்து
ஜொலிக்காமல்முகாரியில்
முடிந்துபோனதா?
பரவாயில்லை... விரிந்து
பரந்த உலகில் வியந்து
போற்றும் அளவில்
இதயம் இழைந்து
இணையாகும்இன்னொரு
துணை நிச்சயமாய்
நாடி வரும் உன்னை.

உண்மை, நேர்மையாய்
உழைத்து உழைத்து சிந்திய
வீரிய வியர்வைக்கு உரிய
விளைச்சல் பொழிய
வில்லையா? பரவாயில்லை...
பிரபஞ்ச கம்ப்யூட்டர்
பரிசுத்தமான உன் உழைப்பை
பிழையேதும் இல்லாமல்
துல்லியமாய் பதிவுசெய்து
தேவையான ஒரு நாளில்
பாக்கி வைத்த பலனை
யெல்லாம் பெரும்பரிசாய் வாரி
வழங்கும்!

பலமுறை முயன்று முயன்று
பாடுபட்டு படைத்த இந்த
'பரவாயில்லை' கவிதைக்கு
பாராட்டு கிடைக்க
வில்லையா? பரவாயில்லை...
பட்டை தீட்டிய வைரமாய்
பாராட்டு மழையில்
நனையும் அளவுக்கு
பாப்புனையும்
புதுசக்தி உள்ளுக்குள்
பேரொளியாய்ப்
பொங்கிப்பிரவகித்ததே!!



**நெல்லை குரலோன்**
பொட்டல் புதூர்

---

இன்னும் கொஞ்ச தூரம்...

வாழ்க்கை ஒரு
சுவாரஸ்யமான புத்தகம்.

அதில் விடுகதை, மர்மம்
திகில், வியப்பு
மெய்யும், பொய்யும் என
நிறைந்து காணப்படும்.

விழியால்...மனதால் ரசித்து
மகிழ்ந்து மகிழ்விப்பதில்
பயணிக்கிறது...

இன்றைய பொழுதை
கணித்து விட முடியும்
நாளைய விடியலை
இத்தருணம் புரட்டிப் பார்க்க
இயலாது.

நில்லாது சுழலும் பூமியில்
நேற்றைய தவறுகளை
திருத்தி எழுதி விடமுடியாது.

பிடிக்கும் என்பார்கள்
பிடிக்காது கண்டிப்புடன்
பிடிக்காது என்பார்கள்
பிடித்துப் போய்விடும்...

வாழ்க்கைப் பாடத்தை
படிப்பது விருப்பமாக
வேண்டும் படிக்க பழகி
விட்டால் எளிதாகிவிடும்.



பிறருக்காக
கொஞ்ச நேரம்
செலவு
செய்யும்
போது
நமக்கான
வாழ்வின் நேரம்
நீட்டிக்கப்படுகிறது.
இன்னும் கொஞ்சம் தூரம்...

**எறும்பூர்**
**கை.செல்வகுமார்,செய்யாறு.**

---



## இதழ்கள்


படிக்கும் இதழ்களைப்
பார்த்தாலே பரவசமாகிக்
குதூகலத்தில் குதித்து
விடுகிறது உன் கண்கள்!
மாமா குட்டி என்று செல்லம்
கொஞ்சி உன் பூங்கரத்தால்
நீ என்னைத்தொடுகையில்
உன் அழகு அந்தப் பேரழகு
இந்தக் கோடையில்
என்னை
உதகமண்டலத்திற்(கு)கே
அழைத்துச் சென்று
அங்கேயே என்னை
விட்டு விட்டு வருகிறது!
உன்னைப் போல் எனக்கும்
வாசிப்பது சுவாசிப்பது போல்
தான் என்றாலும்(கூட)
உன் அருகாமை என்னை
விளையாட அல்லவா
அழைக்கிறது! கவிதையான
உன் சிரிப்பழகில் ரசித்து
மயங்கவே உன் இதழ்கள்
காதல் இதழ்களாக மாறாதா
என்று எனக்கோர் ஆசை!
நீ புத்தக இதழ்களைப்
பிரித்தாலும் சரி உன்
இதழ்களை விரித்துச்
சிரித்தாலும் சரி



அளவில்லாதோர்
ஆனந்தம்
என்
இதயத்திலிருந்து
உதயமாகிறது!

**முத்து**
**ஆனந்த்**
வேலூர்

---



லைப்ரரியில்
காற்று புரட்டி கொண்டு
இருக்கிறது எதை
புஸ்தகத்தை எதை படிக்க?

லைப்ரரியில்
புரட்டி கொண்டு



இருக்கிறது
காற்று எதை
படிக்க?

**ஜயந்தி**
**சிவக்குமார்**
திருச்சி.

---

பலருக்குக் கோபம் வருகிறது
ரோஷம் வரவில்லை..

கோபம் வேறு ரோஷம் வேறு..

கோபத்தை மட்டுமே
வெளிப்படுத்துகிறவன்
ஆதிக்கம் செலுத்தும்
மனோபாவம் கொண்டவன்..

ரோஷத்தைக் காட்டுகிறவன்
தன் மானத்தை
மதிக்கிறவன்..

தன்மானத்தோடு
வாழ்கிறவனை உலகம்
அறியாது...
ஆனால் வாழ்வான்..

கோபப்படுகிறவனைக்
கோபத்தைக் கொண்டே
குழிதோண்டிப் புதைத்து
விடுவார்கள்..



இரு
கண்களைப்
போல
இரண்டையும்
பழக
வேண்டும்..

**ஹரணி** தஞ்சாவூர்

---

## மறக்க மனம் துணியலியே

நான் வளர்ந்த இடம் வயல்
வெளி... ஒடி விளையாண்ட
இடம் திறந்த வெளி..என்னை
நனைத்தது மழை துளி...

மேனி காக்க ஆடை
அனிந்தோம் அதை
பேனிக்காக்க சலவை
செய்தோம்...

நிலவை பார்க்க
காத்திருந்தோம்
பாட்டி பல கதைகள் சொல்ல
காத்திருந்தோம்...

பட்டணத்திலே இன்று
படுத்திருக்கோம்
பழயதை எல்லாம் கனவா
நினைத்திருக்கோம்...

குளிர் அறைக்குள்ளே
வாழ்ந்தாலும் குடிசை சுகம்
கிடைக்கலியே...
பழசை மனம்
மறக்கலியே....!!



**பொன்.**
**கருணா**
நவி மும்பை

---



## சித்திரை வெயில்

கண்ணகியைக்
கதிரவன் தான்
நினைவுபடுத்துகிறான்
அவள் தூக்கி எறிந்த
காற் சிலம்பிலிருந்து
அக்னி பரல்கள்
சிதறுகின்றன!

துரியோதனன் கட்டிய அரக்கு
மாளிகையாய்த்தகிக்கிறது
சித்திரை! இங்கே
கௌரவர்களெல்லாம்
குளிர்சாதன அறைக்குள்
ஒளிந்து கொள்கிறார்கள்
பாமர
பாண்டவர்களெல்லாம்
வெந்து நோகிறார்கள்!

சோம்பலைப்பரிசாய்த்
தந்துவிட்டு சூரியன்
மட்டும் சுறுசுறுப்பாய்
இருப்பது சித்திரையில் தான்
உழைத்தவனுக்கும்
உழைக்காதவனுக்கும்
எப்படியோ வியர்வை
மட்டும் வந்துவிடுகிறது!
முற்றும் துறந்தவனும்
நிலா வெளிச்சம்
போதும் என்பான்
பொழுதெல்லாம்
இரவாகவே இருந்திடக்
கூடாதா என்று
தவமிருப்பான்!

மரங்கள் நெருக்கமாகிவிட்டால்
ஊராட்சிகளும் ஊட்டி
கொடைக்கானல்களாய்
உருவெடுக்கும்!


மாந்தரெல்லாம் வீட்டுக்கு இரு
மரங்கள் வளர்ப்பதாய்
உறுதி மொழிந்தால்
ஓசோன் கவசம்
வலிமை பெறும்!



பசுமைக்கொள்கையைப்
பறைசாற்றாவிட்டால்
பெருகி வரும் வாகனப்
புகையினால் வருங்காலச்
சித்திரைகளெல்லாம்
நித்திரையைக்கலைப்பதோடு
எரிமலையாய் எச்சரிக்கும்!

**கவிஞர் த.அனந்தராமன்**
துறையூர்

---



## அரிமா..

என் பெயர் சிங்கம்.
என் வனம் என் உலகம்!
ஆளி என்று அழைத்தார!
அரிமா என்று புகழ்ந்தார்!
பிடரி சிலிர்க்க எழுந்தால்..
பேரரசன் என வியந்தார்.!

காட்டுக்கு ராஜா.. சக்திக்கு
வாகனம்.. ஆடுகளாக
வாழ்வதோ
சிங்கங்களாய் மாறு.!
பசித்தால் வேட்டை..
நான் ராஜபாட்டை!
யானையே வந்தாலும்
போரிலே வெல்வேன்!

கூட்டமாய்
வாழ்வேன் பெண் நடத்தும்
வேட்டை. ஆண் ஆளும்
கோட்டை !புலவரகள் வாழ்த்திப்
பாடினர் பாட்டை..!

சிங்கத்தின் கால்கள்
பழுதுபட்டாலும்.. சீற்றம்
குறைவதில்லை..
வயதான போதும்
கானகப் போரில்.. சிங்கம்
தோற்பதில்லை.!

சிம்மம் ராசி என்பார்..
கம்பீரம் அழகென்பார்..
உறுமும் சத்தத்தில்..
ஊசியிலைக் காடதிரும்

பெருமை மிகு சிங்கம்!
போராற்றல் சிங்கம்.
சினிமா சிங்கமல்ல..
சிலிர்த்துயெழும் சிங்கம்!




ஆடுகளாய் பலியானாய்..
ஆயினும் இன்றுமுதல்
சிங்கமாய் புறப்படுக..!
சரித்திரத்தில் இடம்
பெறுக.!

**வே.கல்யாண்குமார்.**

---

# நூல் விமர்சனம்

## விடியலை வெளுக்கும் கிழக்கு – கவிதைகள் – முத்தையா மோகன் – ஒரு பார்வை – பொன். குமார்




கவிதைத் துறையில் காலடி பதித்தவர்கள் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருப்பர். இயங்காதவர்கள் அரிது. கால் நூற்றாண்டு காலமாக கவிதை உலகில் பயணப்பட்டுக் கொண்டிருப்பவர் கவிஞர் முத்தையா மோகன். முற்போக்கு இலக்கியத்தில் முன்னணியில் இருப்பவர். கவிஞர் நாகை ஆசைத்தம்பியுடன் இணைந்து கூட்டுத் தொகுப்புகளையும் தந்தவர். அவரின் தனித்தொகுப்பு விடியலை வெளுக்கும் கிழக்கு.

எரியூட்டப்படும் தகன மேடைகள் எத்தனையோ பிணங்கள் எரிக்கப்படுகின்றன. ஆணவக் கொலை செய்பவனும் எரிக்கப்படுகின்றன.சாதி வெறியன்களும் எரிக்கப்படுகின்றனர். மதவெறியன்களும் இறந்த பிறகு எரிக்கப்படுகின்றனர். எல்லாரும் எரிக்கப்பட்டாலும் சாதி, மதம் அழியவில்லை. ஆணவக்கொலைகள் நிறுத்தப்படவில்லை.

எரியூட்டி பின் சாம்பலாகும் ஏகபோக தகன மேடைகளில் எப்போதும் எரிந்துருவது மனிதங்கள் மட்டுமே என்று வருத்தப்பட்டுள்ளார். தொகுப்பின் முதல் கவிதையான இக்கவிதையின் தலைப்பு எரியூட்டப்படும் தகன மேடைகள். தாகம் என்பது எல்லோருக்குமானது. தாகத்திற்கு எதை பருகுவது, எப்படி பருகுவது, எதை பருகினால் தீரும் என்பது பருகுபவரை பொருத்தது. பருகுபவர் விருப்பம் சார்ந்தது. தாகம் என்பது எல்லோருக்குமான ஒன்று யார் எதைப் பருகுகிறோம் என்பதைப் பொருத்தே நிறைவு பெறும் மன வறட்சி என தாகங்கள் கவிதையில் தெரிவித்துள்ளார். மேலும் தாகம் என்பது தன்னலமற்றதாக இருக்க வேண்டும் என்றும் அறிவுரைத்துள்ளார்.

ஒவ்வொருவருக்கும் பால்ய காலம் மறவாததாக இருக்கும். கவிஞருக்கும் மறவாமல் இருக்கிறது என்பதைக் கூறுகிறது அறியா பருவமது கவிதை. ஆனால் இறுதியில் ஊரு அப்படியே தான் இருந்தது ஆனால் உறவுகளையும் கிராமத்தையும் தான் காணவில்லை என்கிறார். கிராமத்தை விட்டு மக்கள் நகரத்திற்கு குடிபெயர்ந்து விட்டனர் என்கிறார். மக்கள் மாறிக்கொண்டே இருப்பதைக் குறிப்பிட்டுள்ளார். சிறந்த மருத்துவம் ஒரு சிறந்த கவிதை. ஒற்றுமையை வலியுறுத்துகிறது. சிதறல்கள் பலவாறாய் பல திசைகளில் உள்ளது. சிதறல்களை ஒன்றிணைக்கும் முயற்சியும் ஆகச் சிறந்த மருத்துவமே என்கிறார். சிதறல்களாகியிருப்பது பலவீனமே. சிதறல்கள் ஒன்றிணைந்து இருந்தாலே பலம். ஒற்றுமையில் என்னும் கவிதையில் தாழ்த்தப்பட்ட தொழிலாளர்கள் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்று வலியுறுத்தியுள்ளார். இல்லையெனில் பண்ணையாளர்கள் ஆதிக்கம் அதிகமாகிவிடும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஒரு புறம் சாதி இல்லை என்கிறார்கள். மறு புறம் பள்ளியில் சாதியைக் கோருகிறது பள்ளி. இம் முரண்பாட்டை பேசியுள்ளது போராட்டங்கள் என்னும் கவிதை. இப்படித்தான் இப்படியாகத்தான் சூட்சுமங்களை உள்ளடக்கி தூர இருத்தப்பட்டிருக்கிறோம் துருப்பிடித்த சிந்தனையில் என்று விமர்சித்துள்ளார். முரண்பாடு கூடாது என்கிறார். புதுக்கவிதைகள் அடங்கிய இத்தொகுப்பில் ஹைக்கூ பொறிகள் என்னும் தலைப்பில் ஐந்து ஹைக்கூக்கள். அவையில் ஒன்று சாக்கடைகள் சூழ்ந்த சந்தனக் காடு இந்தியா சாக்கடைகள் என்பது அரசியல், ஊழல், மதம், வன்முறை என எல்லாவற்றையும் குறிக்கிறது. மேலும் ஹைக்கூக்கள் எழுதி தன் ஹைக்கூ அறிவையும் காட்டியுள்ளார்.

பொதுக் கழிப்பறையில் கெட்ட கெட்ட வாசகங்கள் சிந்தனைக் கழிவுகள் என்பது நல்ல சிந்தனை. ஹைக்கூ மட்டுமில்லாமல் சின்னக் கவிதைகளும் சில எழுதியுள்ளார். சிந்தையைக் கவர்ந்த சிறப்பான ஒன்று ஒற்றைக் கம்பியில் கழைக்கூத்தாடி கீழே வேடிக்கை பார்த்தபடி சில்லரைகள் சில்லரைகள் போடாதவரை, போட மனமில்லாதவரை சில்லரைகள் என சாடியுள்ளார்.

இப்படியாக என்றொரு கவிதை. பல வெட்கங்களைக் காட்டியுள்ளார். வெட்கங்களில் வெட்கப்படுதலைக் கேவலம் எனச்சொல்வி வெட்கமே இன்றி வாதிடும் ஆணினம் வெட்கப் படுதலைப் பண்பாடெனச் சொல்லி காலங்காலமாய் நெளியும் அடுப்பூதும் பெண்ணினம் என்பவை இரண்டு வெட்கங்கள். இரண்டிலும் ஆண்களை வெட்கப்படச் செய்துள்ளார். வெட்கப்படுதலும் வெட்கம் என்கிறார். பெண்களை வெட்கப்பட வைத்தலும் வெட்கம் என்கிறார். இப்படியாக என்னும் தலைப்பிலேயே இன்னொரு கவிதை.

அப்பாவின் பென்ஷன் பணம் தங்கை திருமணத்தில் கரைந்துபோனது அம்மாவின் மின்னும் தாலி - என் வேலை தேடலில் விலையாகிப் போனது தம்பியின் படிக்கும் ஆசை குடும்ப வறுமையில் உடைந்துபோனது என்னுடைய நெடுநாள் முயற்சி நாளை நான் வாங்கப்போகும் சம்பளத்திற்காய் காத்திருக்கிறது என்று தன் நிலையைத் தெரிவித்துள்ளார். குடும்பமே வறுமையில் நிற்கும் போது தன் சம்பளமே காக்கும் என்று நம்புவதாக கவிதை முடிகிறது. காற்றை மறி கவிதையில் தாழ்த்தப்பட்டவர்களுக்காகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்ககவும் குரல் கொடுத்துள்ளார்.

காலச் சுழற்சியை மாற்றி அமைத்திடு தோழா கொண்ட கோலம் வென்றிட எண்ணித் துணிந்திடு தோழா என்று அறிவுறுத்தியுள்ளார். காலங்காலமாக அடிமைப் பட்டிருந்தது போதும் மீறி எழுந்திட வேண்டும் என்கிறார். விண்ணில் ஏறுவோம் கவிதையில் உழவர்களுக்காக வக்காலத்து வாங்கியுள்ளார். மேலும் ஏரோட்டி கவிதையில் உழவர்கள் போதைக்கு அடிமையாவது உலக உயிர்களுக்கு ஆபத்து என்றும் அறிவுரைத்துள்ளார்.

மனிதர்களை ஆட்டுவிப்பது சுயநலம். மனிதர்களிடமிருந்து மனிதர்களை பிரிப்பது சுயநலம். மனிதன் அழிந்து போவதற்கும் அடிப்படையாயிருப்பது சுயநலம். மனிதகுலம் முன்னேறாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் சுயநலம். இதனால் கவிஞர் தொடரல் கவிதையில் மனிதனை ஆட்டிடும் பிணிகொண்ட சுயநலமே மிதித்துனை தள்ளுவேன் ஓடிப்போ சுயநலமே என சுயநலத்தை ஓடிப்போ என்று விரட்டுகிறார். சுயநலத்தை மனிதனை ஆட்டிடும் பிணி என்கிறார்.

ஊருக்குள் பெரிய மனிதரான அப்பா, உறவுக்குள் நல்லவரான அப்பா, அரசியல்வாதிகளுடன் தொடர்புடைய அப்பா, எல்லாருக்கும் நல்லது செய்யும் அப்பா என அப்பாவைப் பற்றி எழுதிய கவிதை என்னத்தச் சொல்ல. ஆனால் கவிதையின் முடிவில் எப்போதோ காதல் திருமணம் செய்து ஓடிப்போன அக்காவை இன்று வரையிலும் வீட்டிற்குள் சேர்க்காத அப்பாவைப் பற்றி என்னத்தச் சொல்ல என அப்பாவின் சுயமுகத்தைக் காட்டியுள்ளார். அப்பாக்கள் காதலுக்கு எதிரியாகவே உள்ளார் என்று குற்றம்சாட்டினார்.

தொய்யுள்கொடி அறுபட்டு தொலைதூரம் ஓடினாலும் தன்னகத்தே இருப்பதெலாம் தாய்மடி போல் வருமா.? என்று தாயைப் பற்றி போற்றி எழுதியுள்ள கவிதை தாய்மடி போல் வருமா?. எத்தனையோ முறை நாங்கள் அடிகொடுத்து பார்த்துவிட்டோம் இன்னமும் புரியவில்லையே ஆட்சியாளர்களுக்கு ஏழைகளின் பலம் என்றொரு கவிதையில் ஏழைகளின் நிலையை எடுத்துரைத்துள்ளார். ஏழைகளின் பிரச்சனையை எப்போதுமே தீர்ப்பதில்லை அரசு என்கிறார். தொடரும் நிலைகளை தொடர் கதைகள் என குற்றம் சாட்டியுள்ளார்.

முதலாளி பூனை வளர்த்தார் எலிகளைப் பிடிப்பதற்காக கூடவே எலிகளையும் வளர்த்தார் பூனை சும்மா இருக்கக்கூடாது என்பதற்காக என்னும் கவிதையின் தலைப்பு சும்மா வேலை. முதலாளிகள் சும்மாவே இருக்க மாட்டார்கள். வேலை கொடுத்து கொண்டே இருப்பார்கள். மேலும் தொழிலாளிகளை ஒற்றுமையாக இருக்கவிட மாட்டார்கள். சண்டை மூட்டிக்கொண்டே இருப்பார்கள். இக்கவிதை மூலம் முதலாளிகளைச் சாடியுள்ளார்.

வரதட்சனை பெண்களின் திருமணத்திற்கு ஒரு பெரும்தடை. தற்போது வரதட்சனை ஒரு பெரும்பிரச்சனையாக இல்லை என்றாலும் வரதட்சனை குறித்து கவிஞர் எழுதியுள்ள ஒரு கவிதை அஞ்சுகிறேன். வரதட்சனை வாங்கிய கொடுமையை எண்ணுகையில் அஞ்சுகிறேன் என வரதட்சனை வாங்கியவனின் வருத்தங்களை வெளிப்படுத்தியுள்ளார். பெண் குழந்தைகள் பிறந்ததால் வரதட்சனை வாங்கியவருக்குள் ஏற்பட்ட மனமாற்றம்.

ஊடகம் என்னும் கவிதையில் மனிதர்கள் நெருப்பு என்கிறார். பொறுப்பற்ற அரசியல்களை பொசுக்க வேண்டும் என்று கோபத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

விடியலை வெளுக்கும் கிழக்கு என்னும் தொகுப்பில் விடியலுக்கான கவிதைகள் ஏராளம் உள்ளன. காலம் காலமாக சமூகத்தில் புரையோடிக் கிடக்கும் பல பிரச்சனைகளை கவிதைகள் மூலம் பேசியுள்ளார். முற்போக்கு சிந்தனைகளையே கவிதைகளில் விதைத்துள்ள முத்தையா மோகன் முற்போக்கு மோகனாக அடையாளப்பட்டுள்ளார். ஒடுக்கப்பட்ட, ஓரங்கட்டப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக கவிஞர் குரல் கொடுத்துள்ளார். கவிதைகளில் நேர்மையும் உள்ளது. நேர்கோட்டு தன்மையும் உள்ளது. கவிதைகளில் ஒரு தளர்வு இருக்கிறது. இறுக்கம் வேண்டும். கவிஞர் முத்தையா மோகனின் அடுத்த தொகுப்புகளில் தொடர வாழ்த்துகள்.

**வெளியீடு அன்பு நிலா பதிப்பகம்,திருவண்ணாமலை 9444360421 கவிஞர் முத்தையா மோகன் 9659419429 பொன்.குமார் 9003344742**




## பாரதிதாசனின் பெண்மை



தமிழாக மட்டுமிங்கே வாழ்ந்திடாமல்
தமிழுக்காய் வாழ்ந்தவனே பாரதிதாசன்
தமிழெங்கும் முன்நிற்கப் பாட்டின் மூலம்
தலைநிமிரச் செய்தவனே பாரதிதாசன்
அமிழ்தென்று புகழ்ந்ததுடன் நின்றிடாமல்
அனைவருக்கும் உணர்த்தியவன் பாரதிதாசன்
உமியாகத் தமிழ்ப்பகையை ஊத நெஞ்சில்
உரந்தன்னை விதைத்தவனே பாரதிதாசன் !

சிங்கத்தின் முழக்கந்தான் தாசன்பாட்டு
சிறுத்தையதன் பாய்ச்சல்தான் தாசன் பாட்டு
பொங்குகடல் வேகந்தான் தாசன் பாட்டு
பொலிமின்ன ல் வீச்சுத்தான் தாசன் பாட்டு
வெங்கதிராய்ச் சுட்டெரிக்கும் பழம்மூடத்தை
வெண்ணிலவாய்க் குளிர்விக்கும் தமிழ்நெஞ்சத்தை
துங்கமணி போல்வந்த அவரின் பாட்டால்
தூக்கத்தை விட்டெழுந்தார் தமிழரெல்லாம் !

படிதாண்டா பத்தினியாய் முடங்கியுள்ள
பஞ்சாங்க சாத்திரத்துள் மூழ்கியுள்ள
அடிமையராய் அடங்கியுள்ள பெண்களெல்லாம்
அறிவுதனைப் பெற்றால்தான் துணிவுகொள்வர்
படிப்புதனை ப் பெற்றால்தான் தெளிவுகொள்வர்
பள்ளிக்கே அனுப்பென்றே புரட்சிப்பாட்டால்
விடியலினைத் தந்தவர்தாம் பாவின் வேந்தர்
விலங்கொடித்து மீட்டவர்தாம் பாவின் வேந்தர் !

மண்ணடிமை தீருதற்கு முதலிலிங்கே
மண்டியிடும் பெண்ணடிமை தீர்க்க வேண்டும்
விண்ணேறும் விஞ்ஞானப் புதுமை தன்னை
வீட்டைவிட்டுப் பெண்களிங்கே புரிய வேண்டும்
கண்ணெரிய அடுப்பூதும் பெண்கள் கையில்
கட்டியாளும் அரசாட்சி தருதல் வேண்டும்
எண்ணத்தில் சமுதாயம் மாறா விட்டால்
எடுசாட்டை என்றவர்தான் பாவின் வேந்தர் !

பொருந்தாத திருமணத்தை எதிர்த்து நின்றார்
பொறுப்பற்ற இளம்மணத்தைத் தடுத்து நின்றார்
மறுமணத்தைக் கைம்பெண்கள் செய்வதற்கு
மறுப்போரின் குரல்வளையை நெரித்து நின்றார்
அரும்பெண்ணைத் தட்சணையால் அலைகழிக்கும்
ஆண்களினைத் தீய்க்கின்ற நெருப்பாய் நின்றார்
பெரும்போகப் பொருளன்று பெண்கள் நம்மின்
பெருமைக்குத் தாயென்று வணங்கி நின்றார் !

இசையமுதாய்ப் பெண்களினை மீட்டும்போதே
இருண்டவீடும் குடும்பத்து விளக்காய் மாறும்
நசையோடே எதிர்பாரா முத்தம் தன்னில்
நங்கையினைத் தொடும்போதே அழகு சிரிக்கும்
விசையோடே தமிழச்சி கத்தி வீசி
விதிமூடம் சாய்த்தபோதே பெண்மை ஓங்கும்
கசையடியாய் இவர்தந்த பாட்டே பெண்ணைக்
காலாலே மிதிப்போரை வீழ்த்தும் வேட்டு !

**பாவலர் கருமலைத்தமிழாழன்**

1.பயன்படுத்திக் கொள்ளத்
தெரியாத நிமிடங்களை தான்
நேரமே சரி இல்லை என நாம்
சலித்துக் கொள்கிறோம்

2. பூமிக்கு அடியில் இடம்
பிடிக்க பூமிக்கு மேலே
நடக்கும் போராட்டமே
வாழ்க்கை

3. கெட்ட பழக்கத்தை விட
வேண்டும் என்றால்
நல்ல பழக்கத்தை வளர்த்துக்
கொள்ள வேண்டும்

4.கர்வம் தலைக்கேறிய
அறிவாளியாக இருப்பதைவிட
அன்பான முட்டாளாக
இருப்பதே மேல்

5. கடவுளைத் தேடாதே
கிடைக்கவே மாட்டார்
கடவுளை நம்பு உனக்குள்
இருப்பார்

6.வார்த்தை என்பது
ஏணியை போன்றது நீ
பயன்படுத்துவதை பொருத்து
ஏற்றியும் விடும் இறக்கியும்
விடும்

--------------------

1. காலையில் வேகமாக
செல்லும் மனிதர்கள் எல்லாம்
சுறுசுறுப்பானவர்கள் என
நினைக்க வேண்டாம்
நேரத்துக்கு புறப்படாத
சோம்பேறிகளாகவும்
இருக்கலாம்

2. முட்களை புரிந்து கொள்ள
புத்தியே போதுமானது
ஆனால் பூக்களைப் பற்றி
புரிந்து கொள்ள இதயம்
வேண்டும்

3. பணத்தை
உங்களுடைய
வியர்வையில் தேடுங்கள்
மற்றவரின் தண்ணீரில்
தேடாதீர்கள்

4. வக்கீலுக்கு படிக்காமல்
சுப்ரீம் கோர்ட்டில் கூட
வாதாடி விடலாம்ஆனால்
வக்கீலுக்கு படித்தாலும்
பொண்டாட்டியிடம் வாதாடி
ஜெயிக்க முடியாது

5.ஒரு தந்தை எவ்வளவு
காலம் வேலை செய்து
சம்பாதிக்க வேண்டும்
என்பதை தீர்மானிப்பது
அவருடைய வயது அல்ல
அவருடைய பிள்ளைகள் தான்

6. பணம் இருப்பவனை
தூங்க விடாது இல்லாதவனை
வாழ விடாது

--------------------


1. பணம் இருந்தால் எதையும்
செய்வேன் என்பது மனித
வாக்கு நீ எதையாவது
செய்தால்தான் நான் உனக்கு
கிடைப்பேன். என்பது
பணத்தின் வாக்கு

2. மரம் நடுவதற்கு யாரும்
விரும்புவது இல்லை
ஆனால் அதன் நிழலில்
நிற்பதற்கு எல்லோரும்
விரும்புகிறோம்

3. முட்டாள்களின் வெறுப்பு
நீங்கள் அறிவாளி
என்பதற்கான சான்றிதழ்

4. எதையும் உருவாக்குவது
கடினம் அழிப்பது எளிது
என்ற தத்துவம்
தொப்பைக்கு பொருந்தாது

5. தவறுகள் செய்தால்
தண்டிப்பார் கடவுள்
என்ற பயம் யாருக்கும்
இல்லை
காரணம் பரிகாரங்கள்




**நடேஷ் கன்னா**
கல்லிடைக் குறிச்சி



நான் கடவுள்
நீ தேவதை
நம் காதல் கதையை
இந்த அற்ப மனிதர்கள்
புரிந்து கொள்வார்களா
என்ன? புரிந்து கொள்ளாமல்
போனாலும்
புரியாத நம் காதல்
புனிதமானது தான்!

என்னடா யோசிக்கிறாய்
என்கிறாய்?
எண்ணமெல்லாம்
வண்ணக் கிளியே
உன் நினைவு தானடி!
எப்படி சொல்வேன்?
என்றும் தீர்ந்து போகாத படி
உன்னை காதல் செய்ய
வேண்டும்!

கண்ணை பார்த்து
கண்ணை பார்த்து
கவிந்தேன்டி கள்ளு கடை–
அவ கண்ணுக்குள்ள
இருக்குதடி பொல்லாத
பார்வையில கல்லாத
பாவி அவன் செல்லாம
போய்ட்டேன்டி
கிள்ளாத கிளி
அவ கொத்தாம
போனாலும்–
நான்செத்தேன்டி!



**லி.நௌஷாத் கான்**



## வர்ணனை !

முன்பெல்லாம் பெண்டிரை
வர்ணிக்கசெம்பருத்தி பூவை
நிறத்திற்கும், சங்கை
கழுத்திற்கு மெல்லாம்
உவமை படுத்தியது போய்...
இனி கவிஞர்கள்.

சிலிண்டர் போன்ற
சிவப்பழகியே.
ரெகுலேட்டர் போன்ற
கழுத்தழகியே...
30 கே.ஜி எடை கொண்ட
எரிவாயு உருளையே...
உன்னை பதிவு செய்து
காத்திருக்கிறேன் ...
வாரமென காத்திருக்கிறேன்–
வரமென நீ
வருவாய்
என !( மாத்தி
யோசிப்பாங்க!)



**எம்.பி. தினேஷ்.**
கோவை



## நிலமடந்தை..

உளமெனவே பொறுமை
உயிர்சுமக்கும் வலிமை..
வளமளிக்கும் தாய்மை
வாழ்வளிக்கும் அன்பை
நலமளிக்கும் நன்மை
நமக்களிக்கும் நிலமே.!
திலகமென மலைகள்
திசையெங்கும் மரங்கள்
கலம்மிதக்கும் கடலும்..
கனிந்திருக்கும் வனமும்
உளம் உவந்து சுமக்கும்
உயிர் சுரக்கும் நிலமே..!
வளம் கொழித்த கதிரை
வயல்வெளியில் காண
நலம்பெருக உழைக்கும்
நல்லதோர் உழவர்..
களமளித்து மகிழும்
கனிவுமிகு நிலமே.!
இலன்யென்று வருவார்
எழும் பசியை போக்கி..
கலம்நிறைய நீரால்..
கடும் தாகம் தணித்து
பலம் மிகுந்தே
மாந்தர்
படும் துயரம்
மாற்றும்..
நிலமடந்தை
அருளாலே
உலகு



**வே.கல்யாண்குமார்**

## வாழ்க்கை ஒரு நீரோட்டம்

வாழ்க்கை என்பது
நீரோட்டம் போன்றது சில
சமயம் அளவுக்கு அதிகமாக
சீறிப்பாயும் ....."

சில நேரம் அமைதியாய்
சலனம் இல்லாமல்
சீராய் ஓடும் ..."

சில சமயம் நீர் வரத்து
குறைவால் அடக்கமாய்
தலை தூக்காமல் ஓடும் ..."

சில சமயம் நீர் இல்லாமல்
வற்றி காய்ந்து பாலைவனம்
போல் இருக்கும் .... "

ஆனாலும் என்றும் நிலை
மாறாமல் தன் பாங்கில்
இருக்கும் ...."

மனிதனின் வாழ்க்கைப்
பயணமும் நீரோட்டம்
போன்றதே ....."

பல நிலைகள் உருவாகும்
ஆனால் நிதானம்
பக்குவம் அனுபவம்
கொண்டு சமாளித்தால் ....."

கடினம் தெரியாமல்
இயல்பாய் கோபம் சந்தோஷம்
சரி பங்கில்
வாழ்க்கைப்
படகு
தடை
இல்லாமல்
தொடரும்...."




**ஆர். சீதாராமன்**
சீர்காழி



செல்லச் சீண்டல்களில்
கண் கலங்குகிறாய்..
அழாதே.. அடிச்சுரலாம்
என்கிறேன். யாரை..
என்கிறாய் விழி மலர்த்தி
குறும்புடன்.
காலங்காலமாய்த்
தரையை அடித்துத்தானே
சமாதானம் செய்கிறோம்
குழந்தைகளை..
என்கிறேன்..
இன்னொரு
குழந்தையாய்
மலர்ந்த
சிரிப்புடன் நீ.



**ரிஷபன்**



## லவ் - டப்

பேரழகியான நீ ரம்பா
ஊர்வசி மேனகா
திலோத்தமை இவர்களின்
வரிசையில் எப்படி இடம்
பெறாமல் போனாய்?!
ஆனால் அத்தனை பேரின்
அழகையும் நீயே கைப்பற்றி
என்னையும் பற்றிய
மேகலாவானதில் உன்
அன்பு என் கா த லை
என்னமாய் அழகாக்கி
விட்டது!
உனக்குத்தினமும்
மு த் த மி டு வ து என்
அழகான ஆசை!
அடிக்கடி ஆசையுடன்
உன்னை நெருங்கினேன்!
அடிக்கடி என்னைக்காண
நீயும் வருவதாலும்
என்னை எப்பொழுதும்
வரவேற்பதாலும்
ஒவ்வொரு
வினாடியும்
என்
இதயத்தில்
உன்னைப்பற்றிய
'லவ் – டப்
சத்தமே
ஒலித்துக் கொண்டிருக்கிறது!



**முத்து ஆனந்த்** வேலூர்

## ஆணவம் போக்கல் அறிவு!

நேரிசை வெண்பா!

நானெனது என்ற
நலமிலாச்செருக்கின்றி
தேனென வாழ்வில்
தெளிவான...வானுயரப்
பேணின் பெருமையே
கிட்டிடும் நம்மிலே
ஆணவம் போக்கல் அறிவு!

ஆன்மாவைப்பற்றியுள்ள
பீடில் அழுக்கேதான்
நானென்ற ஆணவம்
நாளுமே.. வீணென்றே
காணும் உயிரில் உடலிலே
கண்ணியமாய்
ஆணவம் போக்கல் அறிவு!



## காசநோய் ஒழிப்போம்!

நேரிசை வெண்பா!

தொற்றுநோயாம் காசநோயே
தோன்றாமல் செய்யலாம்

பற்றுடன் முன்வந்து
பண்பாக... அற்றுவிடச்

செய்து குணப்படுத்திச்
சீராகச்செய்யலாம்

பெய்திடலாம்
அன்புமழை பீடு!

கட்டுப்படுத்தலாம்
காசநோயைக்கண்டாலே

பட்டெனப் போகின்ற
பாங்கான சிட்டாய்ப்

பறக்கும் உயிரைப்
பராமரித்துக்
காத்தே

சிறக்கலாம்
முன்னே
செழிப்பு!



**முனைவர் இராம.வேதநாயகம்.**
திருவண்ணாமலை.

## வாங்கும் சக்தி !

மக்களிடையே
வாங்கும் சக்தியை
அதிகப்படுத்தியிருக்கிறார்கள்
காய்கறி விற்பனையாளர்கள்!

முன்னரெல்லாம் 'கிலோ
ஐம்பது ரூபாய்!" என்று
விற்றுக் கொண்டிருந்த
வியாபாரிகள்
இப்போதெல்லாம்
பெரும்பாலும்...

' மூன்று கிலோ நூறு !'
என்று கூவி விற்பனை
செய்வதே அதற்கு
உதாரணம் !

**எம்.பி.தினேஷ்**
கோவை

## வாழ்க்கை ஒரு சிறு பயணம்...

வந்த பாதை மறந்து
போகும்...
போகும் பாதை தெரியாமல்
இருந்தாலும், இன்றைய
நொடி நம் கையில்
இருக்கும்...மரணம் ஒரு
நிச்சயம்...அதை யாரும்
தடுக்க முடியாது...
ஆனால் வாழ்ந்த நாட்கள்
மட்டும் நம் கையில்
எழுதப்படும் கதைகள்...
நேற்றின் நினைவில்
சிக்காதே... நாளையின்
பயத்தில் தளராதே...
இன்றை சிரித்து
அணைத்துக்கொள்...
அதுவே வாழ்க்கையின்
உண்மை அர்த்தம்...
வருபவர் வருவார்கள்...
போகுபவர் போவார்கள்...
ஆனால் நீ விட்டுச் செல்லும்
சுவடு மட்டும் நிலையாக
இங்கே நிற்கும்... ஒவ்வொரு
காலையும் ஒரு பரிசு...
ஒவ்வொரு நொடியும் ஒரு
வாய்ப்பு... அதை உணர்ந்து
வாழ்ந்தால் தான்
வாழ்க்கை உண்மையில்
அழகு...

**Dr. D. Harishkumar**



நீலகண்டனே...
ஆலகாலம் தேக்கிய
உன் தொண்டை;
அது சொல்லுது –
காலகாலமாய்
உயிர்க்குலம் காக்கிற
உன் தொண்டை!



கவிதைமழை தரும்
கார்முகிலோ
உன் கூந்தல்!

கார்முகிலா கவிமுகிலா...
உன் கூந்தல்

ஒரே பிரசவத்தில்
கோடிக் குழந்தைகள் மழை!

அழுகையா? பிரசவமா..?
மழை!

உன் கார்மேகக் கூந்தலால்
ஊரில் பல காளமேகங்கள்!

மென்று விழுங்குவது
நல்லதல்ல என்றும்...
உரக்க முழங்கிடு
உண்மையை!

உணவை மென்று விழுங்கு!
உண்மையை
உரக்க முழங்கு!

அவசரமாய் விழுங்காதே
உணவை..! மென்று
விழுங்காதே உண்மையை!

மென்றே விழுங்கு
உணவை மென்று
விழுங்காதே உண்மையை!

எசசில்
விழுங்குகிறேன்
அச்சத்தில்
அல்ல...
முத்தத்தின்
உச்சத்தில்!



**சு. அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்

நாட்கள் பிறப்பதும்
நாட்கள் நகர்வதும்
தன்னில் நடப்பதே
இயற்கையின் இயல்பில்
நாமும் காண்பதே

நாளில் ஒரு நாள்
நல்ல நாள் என்பதும்
வேண்டாமே இந்நாள்
என்றாவதும்அவரவர்
கையில், மனதில்
தனக்கென ஆனால் ஆஹா
என்பதும் இன்றேல் ஐயோ
என்பதும் வேண்டாமே

இயற்கையின் கணக்கில்
எல்லாம் ஒன்றுதான்
எனக்கென ஒன்றும்
உனக்கென ஒன்றும்
இயற்கை பிரிப்பதில்லை

நல்லன நினைத்து
நல்லன செய்வோர்க்கு
இந்நாள் என்றோ
அன்னாள்
என்றோ
இல்லை
எந்நாளும்
நன் நாளே



**ஓம் குமார்**
**P N**

## வாழ்க்கைக் கோலம்

வாழ்க்கை என்பதோ சிறு
ஓடம் துன்பமெனும்
ஆழ்கடலில் தள்ளாடும்
கொண்டேனே நானும் சோக
வேடம் துன்பத்தை என்
மனமோ சாடும்

சுற்றும் பூமியோ ஒரு
கோளாம் மாறிவருதே அதில்
பருவக் காலம் இன்பமும்
துன்பமும் கடந்தே செல்லும்
இறைவன் வகுத்த நீதியே
வெல்லும்

நானும் பூண்டேனே
பாலர் பருவம் வானிலே
வளர்பிறைக் கோலம்
கள்ளக் கபடு இல்லாத
உள்ளம் கவலையை மறந்து
இன்பத்தில் துள்ளும்

வாலிப வயதிலே
அடைந்தேன் பருவம் ஓங்கி
வளர்ந்தது தென்னை மரம்
காதல் கனியப் படைத்தேன்
காவியம் இளமையில்
அழியாத ஒரு ஓவியம்

அனுபவ அறிவாலே உடலும்
முதிர்ந்ததோ நாற்று வளர்ந்து
கதிர்களைச் சுமந்ததோ
ஒருநாள் உடலைவிட்டு
உயிர் பிரியுமோ
படைத்த
கவிதைகள்
உலகிலே
மலருமோ.



**எஸ். சந்திர சேகரன்**
**அமுதா** செஞ்சிக்கோட்டை.



அவள் பாதம் பட்ட
தினத்திலிருந்து ஒளிர்கிறது
இல்லம்!

வலது இடதென அற்று
எப்பாதம் ஊன்றிய போதும்
சுபமாகவே!

சீர் கெட்டிருந்த
நடை வாசல் திருத்தி
புள்ளிகளூன்றுகிறாள்
கோலமிட்டு!

பிசகியிருந்த புள்ளிகள்
அமர சரியான இடம் தேர்வு
செய்கிறாள்!

சமையலறையில் சகஜத்தை
மாட்டி கைமணம்
செய்விக்கிறாள்!

ஆடைகளை சுத்தம் செய்து
மனங்களுக்கு சுருக்கம்
நீக்குகிறாள்!

பூஜை அறையில்
பெரியவர்களை
வைத்து மானசீகமாய்
வணங்குகிறாள்!

கொல்லையில் பூ
வளர்க்கிறாள். உடனிரண்டு
காய்கறிச்செடிகள்
நடுகிறாள்!

வீடும் வாசலும்
புழக்கடையும் அவளின்
மந்திரச்சொல்லுக்கு
ஆட்பட்டு!

ஆனாலும்
கூட
எப்பொழுதுமான
தன்னியக்கமும்,
புதுப்பித்தலுமாய்
அவள்!



**விமலன்.**

ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US 9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
• PREDICTION & SOLUTIONS
• MONEY • LOVE
• HEALTH • FAMILY
• BUSINESS • CAREER
• MARRIAGE

ARG CONSTRUCTIONS
We Build Your DREAM HOME
Recently We Have Completed Over 50+ Big Projects
SERVICES WE OFFER
● Residential Construction
● Commercial Construction
● Customer Satisfaction
Contact Us 9710348377

VINAYGA ENTERPRISES
WANTED
COMPUTER OPERATOR
(FEMALE)
ONIDA AUTHORISED SERVICE CENTRE
CONTACT: 9962116238
ADDRESS: BHEEMANNA PETTAI, BHEEMANNA 1ST STREET, ALWARPET CHENNAI

PREMIUM LAND SALE
NEAR PARANDUR AIRPORT
YOU ARE LUCKY!
Grab Your Future Investment Today!
Location: Just 6 KM Near Parandur New Airport
Price Details
₹700 to ₹2200 per Sq.Ft
Affordable & High Return Investment
Why Invest Here?
✓ Fast Developing Area
✓ Near Upcoming Airport
✓ Excellent Appreciation Value
✓ Suitable for Residential & Investment
✓ Easy Road Access
PLOTS AVAILABLE NOW!
Contact: CT. Guruji
Phone: 90031 32847
LIMITED PLOTS - BOOK NOW!

FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO BUY OR SELL PROPERTY OR LAND?
+91 9884417843

Get Free Jobs Alert on Your WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

Launch Your Own Secure Crypto MLM Software Today!
@4999/- onwards
CALL: 98537 19337, 74369 14247
www.mlmperfect.com

WANTED
M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift
7540003588

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

S.R Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

செக்யூரிட்டி கார்டுகள் தேவை
கோடம்பாக்கம் சேத்துப்பட்டு புரசைவாக்கம்
கோட்டூர்புரம் பகுதிகளில் வேலை
செய்ய செக்யூரிட்டி கார்டுகள் தேவை
அணுகவும்: 9840861539

WANTED
JAY SECURITY FORCE
பணி வாய்ப்புகள்
• பணிகள்: A.S.D செக்யூரிட்டி கார்டுகள் ஹவுஸ் கீப்பிங்
• இடங்கள்:
• பெருங்குடி, துரைப் பாக்கம்
• காரப்பாக்கம், சோழிங்கநல்லூர்
• விருகம்பாக்கம்
பெண்கள் தேவை
சம்பளம்:- 12500 முதல் 20000 வரை
9791061354 - 8072969599
Head office
NO :1, அம்பாள் அவின்யூ,
வி.பி.ஜி அவின்யூ, விரிவாக்கம்,
மேட்டுக்குப்பம்- சென்னை-97

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081

just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com



































**WANTED**

MARKETING HEAD
REAL ESTATE

Fixed Salary Rs.25000/-
& Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar

**9790021367**

**WANTED**

COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.

**Sal.23,000/-**

161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349



ஜெயஜெய சங்கரா!
ஹர ஹர சங்கர!
ஸதாசிவ ஸமாரம்பாம்!
சங்கராச்சார்ய மத்யமாம்!
அஸ்மதாசார்ய பர்யந்தாம்
வந்தே குருபரம்பராம்!

பச்சையே உன்றன் குறக்குலத் திருவாம் பத்தினி மேனியும் பத்தா
பச்சையே கேகயப் பரியும் பதக்கத்திலணி மரகதமும்
பச்சையே நீ வாழ் குன்றுகள் தோறும் பக்தர்பால் இறங்குமுன் மனமும்
பச்சையே உந்தன் மலையும் பசுமலை வாழும் பரமனே பாவநாசகனே
- அருட்கவி தவத்திரு. சாதுராம் சுவாமிகள்.

பசுமலை கிரிவலம் தருமே பலநலம்!
பசுமலை தரிசனம் பாபவிமோசனம்!
வள்ளி தெய்வானை வளர் இருபுறமும்
மெல்லியவள் பெற்றெடுத்த பாலா !
புள்ளி மயிலேறி வரும் புண்ணியனே
நண்பர்கள் தம் நற்றுயரைபோக்கு
பசுமலை முருகா!

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஒலக்கூர்
பசுமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு விசுவாவசு வருஷத்திய

**பிரமோற்சவப் பத்திரிக்கை**

அன்புடையீர் வணக்கம்.

குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப் பெருமான், மகிமை நிறைந்ததும், சித்தர்களும், ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் ***கோ கிரி*** என்னும் திருக்கோயில் ஆகும்.

எழிலும், அருளும் நிறைந்த பசுமலையில் முருகப்பெருமான் ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி என்னும் திருநாமத்தோடு வீற்றிருந்து பக்தர்களின் இன்னல்களை களைந்து வாழ்வில் அனைத்து செல்வங்களையும் தந்து மேன்மையடையச் செய்கிறார் என்பது பக்தர்கள் வாயிலாகக் கண்ட நிதர்சனமான உண்மை.

இறைவன் திருவருளாலும், பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் குருவருளாலும் நிகழும் மங்கலகரமான கலியுகாதி 5126 விசுவாவசு வருடம் பங்குனி மாதம்–**08** ம் தேதி **22.03.2026 ஞாயிற்றுக்கிழமை**,சதுர்த்தி திதி, பரணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை 10.30 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் **மயூர துவஜாரோகணமும்** அன்று முதல் பதினொன்று நாட்கள் வரையில் சிறப்பான மகோற்சவங்களும் நடக்க இருப்பதால் பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டுஸ்ரீமுருகப்பெருமான் திருவருளுக்கு பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| பங்குனி மாதம்- 07 | 21.03.2026 சனிக்கிழமை | விநாயகர் வழிபாடு,பூர்வாங்க பூஜைகள் |
| பங்குனி மாதம்- 08 | 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை | அஸ்திர தேவர் பூஜை, துவஜாரோகணம்(கொடியேற்றம்) |
| பங்குனி மாதம்- 09 | 23.03.2026 திங்கட்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 10 | 24.03.2026 செவ்வாய்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 11 | 25.03.2026 புதன்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 12 | 26.03.2026 வியாழக்கிழமை | மயில்வாகன கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 13 | 27.03.2026 வெள்ளிக்கிழமை | முத்து பிரபை கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் – 14 | 28.03.2026 சனிக்கிழமை | இந்திர விமான கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் – 15 | 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை | திருக்கல்யாணம் இரவு 9.00 மணிக்கு |
| பங்குனி மாதம் – 16 | 30.03.2026 திங்கட்கிழமை | ரதோற்சவம் [ மாலை 5.00 மணிக்கு திருத்தேரோட்டம்] |
| பங்குனி மாதம் – 17 | 31.03.2026 செவ்வாய்கிழமை | பங்குனி உத்திரம், தீர்த்த வாரி, துவஜ அவரோகணம்(கொடி இறக்கம்) |
| பங்குனி மாதம் – 18 | 01.04.2026 புதன்கிழமை | 11-ம் நாள் விடையாற்றி உற்சவம் |

குறிப்பு
பிரதிமாதம் பௌர்ணமி கிரிவலம்
நடைபெறுகிறது
கிரிவலம் செய்து வளமோடு வாழ்க!

பிளாஸ்டிக் உபயோகிப்பதை
தவிர்ப்போம்.
தாய்மண்ணை காப்போம்.

இங்ஙனம்,
S.V.சுப்ரமண்ய சோமயாஜுலு
V.ராம்குமார் சோமயாஜுலு
ஆதின பரம்பரை அறங்காவலர்கள்,
மேல் ஒலக்கூர் - 604 203.
செல் : 9962344722, 8610716563
9047725285




























விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், மேல்ஒலக்கூர்
பசுமலை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு விசுவாவசு வருஷத்திய
பிரமோற்சவப் பத்திரிக்கை

அன்புடையீர் வணக்கம்.

குன்றுகள் தோறும் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் முருகப் பெருமான், மகிமை நிறைந்ததும், சித்தர்களும், ஞானிகளும் வணங்கும் புண்ணிய திருத்தலம் பசுமலை என்று அழைக்கப்படும் கோ கிரி என்னும் திருக்கோயில் ஆகும்.

எழிலும், அருளும் நிறைந்த பசுமலையில் முருகப்பெருமான் ஸ்ரீ வள்ளி, தேவசேனா சமேத ஸ்ரீ சுப்ரமண்ய சுவாமி என்னும் திருநாமத்தோடு வீற்றிருந்து பக்தர்களின் இன்னல்களை களைந்து வாழ்வில் அனைத்து செல்வங்களையும் தந்து மேன்மையடையச் செய்கிறார் என்பது பக்தர்கள் வாயிலாகக் கண்ட நிதர்சனமான உண்மை.

இறைவன் திருவருளாலும், பூஜ்யஸ்ரீ காஞ்சி காமகோடி ஸ்ரீஸ்ரீஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் குருவருளாலும் நிகழும் மங்கலகரமான கலியுகாதி 5126 விசுவாவசு வருடம் பங்குனி மாதம்-08 ம் தேதி 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை, சதுர்த்தி திதி, பரணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் காலை 10.30 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் மயூர துவஜாரோகணமும் அன்று முதல் பதினொன்று நாட்கள் வரையில் சிறப்பான மகோற்சவங்களும் நடக்க இருப்பதால் பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டுஸ்ரீமுருகப்பெருமான் திருவருளுக்கு பாத்திரமாகும்படி கேட்டுக்கொள்கிறோம்.


| தமிழ் தேதி | ஆங்கில தேதி | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| பங்குனி மாதம்- 07 | 21.03.2026 சனிக்கிழமை | விநாயகர் வழிபாடு,பூர்வாங்க பூஜைகள் |
| பங்குனி மாதம்- 08 | 22.03.2026 ஞாயிற்றுக்கிழமை | அஸ்திர தேவர் பூஜை, துவஜாரோகணம்(கொடியேற்றம்) |
| பங்குனி மாதம்- 09 | 23.03.2026 திங்கட்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 10 | 24.03.2026 செவ்வாய்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 11 | 25.03.2026 புதன்கிழமை | ஆலய பிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 12 | 26.03.2026 வியாழக்கிழமை | மயில்வாகன கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம்- 13 | 27.03.2026 வெள்ளிக்கிழமை | முத்து பிரபை கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 14 | 28.03.2026 சனிக்கிழமை | இந்திர விமான கிரிபிரதட்ஷணம் |
| பங்குனி மாதம் - 15 | 29.03.2026 ஞாயிற்றுக்கிழமை | திருக்கல்யாணம் இரவு 9.00 மணிக்கு |
| பங்குனி மாதம் - 16 | 30.03.2026 திங்கட்கிழமை | ரதோற்சவம் [ மாலை 5.00 மணிக்கு திருத்தேரோட்டம்] |
| பங்குனி மாதம் - 17 | 31.03.2026 செவ்வாய்கிழமை | பங்குனி உத்திரம், தீர்த்த வாரி, துவஜ அவரோகணம்(கொடி இறக்கம்) |
| பங்குனி மாதம் - 18 | 01.04.2026 புதன்கிழமை | 11-ம் நாள் விடையாற்றி உற்சவம் |

குறிப்பு
பிரதிமாதம் பௌர்ணமி கிரிவலம் நடைபெறுகிறது
கிரிவலம் செய்து வளமோடு வாழ்க!

பிளாஸ்டிக் உபயோகிப்பதை தவிர்ப்போம். தாய்மண்ணை காப்போம்.

இங்ஙனம்,
S.V.சுப்ரமண்ய சோமயாஜுலு
V.ராம்குமார் சோமயாஜுலு
ஆதின பரம்பரை அறங்காவலர்கள்,
மேல் ஒலக்கூர் - 604 203.
செல் : 9962344722, 8610716563
9047725285





# பல்சுவை களஞ்சியம்



# மாணவர்களுக்கு பயனுள்ள தேர்வு டிப்ஸ்!!!



- தேர்வு எழுத தொடங்கும் முன் மனதை அமைதியாக வைத்திருக்கவும்.
- கேள்வியை நன்கு படித்து புரிந்து கொண்ட பிறகு பதிலை எழுதவும்.
- வினாவிற்கு நன்கு தெரிந்த விடைகளை எழுதவும்.
- ஒவ்வொரு விடையை எழுதி முடித்த பிறகு கோடு போட்டுவிட்டு மறுவினாவிற்கான விடையை தொடங்கவும்.
- ஒவ்வொரு விடைதாளிலும் 1, 2, 3 என தாளின் எண்ணிக்கையை குறிப்பிடவும்.
- அதிக மதிப்பெண் உள்ள வினாக்களின் விடையை முதலில் எழுத வேண்டும்.
- குறைந்த மதிப்பெண் கொண்ட விடைகளை கடைசியில் விரைவில் எழுத முடியும்.
- ஒவ்வொரு விடையை எழுதும்போதும் கேள்விக்கான பிரிவையும், கேள்வி எண்ணையும் கட்டாயம் குறிப்பிட வேண்டும்.
- இந்த கேள்விப் பிரிவை, இவ்வளவு நேரத்திற்குள் முடித்துவிட வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டு, தேர்வு எழுதும் முன்பாகவே, திட்டமிட்டு அதற்கேற்ப செயல்படவும்.
- கடைசி மணியடிக்கும் வரை, எழுதுவதை தவிர்க்கவும். 10 நிமிடங்களுக்கு முன்பே விடைகளை எழுதி முடித்துவிட்டு, கேள்வி எண்கள் மற்றும் பிரிவுகள், சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை சரி பார்க்கவும்.
- இறுதியில் விடைத்தாளை எண் முறைப்படி சரியாக அடுக்கி வைத்து நூல் கட்டி சமர்ப்பிக்கவும்.

# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| இது ஒரு பூ. முதற்பகுதி ஆதவனின் மறுபெயர்; பிற்பகுதி தேசத் தந்தையை குறிக்கும். அது என்ன? | சூரிய காந்தி |
| பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்தவாய் அவள் யார்? | கிளி |
| இரவு வீட்டிற்கு வருவான், இரவு முழுவதும் இருப்பான் காலையில் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டிருப்பான்? | நிலா |
| அம்மா படுத்திருக்க மகள் ஓடித்திரிவாள் அது என்ன? | அம்மி குளவி |
| ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல்படி. அது என்ன? | மூக்கு |
| ஊரெல்லாமல் ஒரே விளக்கு. அதற்கு ஒரு நாள் ஒய்வு அது? | சந்திரன் |



# வருங்கால மருந்து



"என்னங்க... ராஷ்மி ரொம்ப நாளா வயிற்று வலியால துடிக்கிறா. அவளை டாக்டர்கிட்ட கூட்டிட்டுப்போங்க." என்றாள் சொர்ணம்.

மகளை அழைத்துக்கொண்டு அந்த க்ளினிக்கை அடைந்தார் உபேந்திரன்.

கிளினிக்கின் ரிசப்ஷனில் இருந்த எலெக்ட்ரானிக் மெஷினில் டோக்கனைப் பெற்றுக்கொண்டு காத்திருந்தார்.

ஒளித்திரையில் அவர் டோக்கன் எண் ஒடியதும் எழுந்து மகளுடன் அந்த அறையை நெருங்கினார். கதவு தானாகத் திறந்து வழிவிட்டது.

உள்ளே நுழைந்து டாக்டர் முன் அமர்ந்தனர்.

"யெஸ்?"

விஷயத்தைச் சொன்னார்.

ராஷ்மியைப் பரிசோதித்த டாக்டர், "பயப்படத் தேவையில்லை. போதுமான தண்ணீர் குடிக்காததால் வந்த வலிதான் இது.

நிறைய தண்ணீர் குடிக்கவேண்டும். மருந்து எழுதி தர்றேன்.

வேளா வேளைக்கு ஒழுங்கா சாப்பிட்டா சரியாகி விடும்." என்று காலை இரண்டு, மதியம் இரண்டு, இரவு இரண்டு என ஒரு நாளைக்கு ஆறு கேப்சூல்கள் எழுதித் தந்தார்.

ஃபார்மஸியில் டாக்டர் எழுதித் தந்த 'தண்ணீர் கேப்சூல்'களை வாங்கிக் கொண்டுப் புறப்பட்டார் உபேந்திரன்.



# ஜோக்ஸ்

காதல் One Side -ஆ பண்ணினாலும்
Two Side-ஆ பண்ணினாலும்
கடைசியா Suicide- தான்
பண்ணக்கூடாது

இப்படிக்கு
காதல் பற்றி Four Side-ம்
யோசிப்போர் சங்கம்

——————————————

உன் பெயரைக்கூட நான்
எழுதுவதில்லை..
ஏன் தெரியுமா?
"பேனா" முனை உன்னை
குத்திவிடுமோ என்று..

இப்படிக்கு
Spelling தெரியாமல்
சமாளிப்போர் சங்கம்

——————————————

"டி.வி.பார்க்கறது
பெண்களுக்கு
சகஜம்தானே...

இதையேன் பெரிசா
சொல்றீங்க...?"

"அட! நீங்க ஒன்னு
கரண்ட் இல்லைன்னாலும்
டி.வியைப் பார்த்துக்கிட்டு
உக்கார்ந்திருக்காங்க.!"

——————————————

ஒருவர்: டாக்டர் செலவு
மட்டும் எனக்கு மாசம்
ஐந்நூறு ரூபாய்
ஆகுது.


மற்றொருவர்:
டாக்டரோட செலவைப் போய்
நீங்க ஏன் பண்றீங்க?

——————————————

"சென்னையிலே தண்ணிக்
கஷ்டமாமே?"

ஆமா! குடிகாரங்க பெருத்துப்
போயிட்டாங்க!"

——————————————



Bank லோன் கிண்டல்..!

"ஹலோ! நாங்க
பேங்க்லேர்ந்து பேசறோம்,
உங்க அக்கவுண்டை பேஸ்
பண்ணி உங்களுக்கு 10 லட்ச
ரூபாய் வரைக்கும் லோன்
சாங்ஷன் ஆகியிருக்கு சார்...

அப்படியா! உடனே
அந்தப் பணத்தை
என்னோட சேவிங்ஸ்
அக்கவுண்ட்லயே
போட்டுருங்க!

?!?!?!

——————————————

இஞ்ஜினியரிங் Class Room-ல்..

ஆசிரியர்: என்னடா போயும்
போயும் மெக்கானிக்கல்
இஞ்ஜினியரிங்
கிடைச்சுருக்கே
அப்படீன்னு யாரும்
வருத்தப்படவேண்டாம்,
என்னோட ஃபிரெண்ட்
ஒருத்தன் திருச்சில 5000
ரூபாய் வாங்கிண்டு
இருந்தான், இன்னிக்கு
மும்பைல 1 லட்சம்
வாங்கிட்டுருக்கான்"

மாணவர்: என்ன கடனா?

——————————————

"தேள் கொட்டினால்
பயங்கரமா வலி இருக்கும்னு
சொல்வாங்க...

நீங்க இப்படி
சிரிக்கிறீங்களே...?"

"தேள் கொட்டினது என்னோட
மனைவிக்கு...!"

——————————————

திருடன் 1: டேய் நேத்து
நாம திருடுன பணத்த
எண்ணாமகூட ஒளிச்சி
வச்சிட்டோமே.....

திருடன் 2: அதுனால
என்ன நாளைக்கு
பேப்பர்ல வரும்ல... அப்ப
பார்த்துக்கலாம்.

——————————————

"என் உயிரைக் காப்பற்றிய
நர்சையே நான் கல்யாணம்
பண்ணிக்கிட்டேன்."

"எப்படிக் காப்பாத்தினா?"

"ஆபரேசன் ரூமிலேயிருந்து
பின்வழியா என்னைத்
தப்பிச்சிப் போக வச்சது
அவதான்!"

# வாங்க சம்பாதிக்கலாம்



## கனரக வாகன தொழிற்சாலையில் அப்ரெண்டிஸ் வாய்ப்பு



ஆவடியில் உள்ள மத்திய அரசின் கனரக வாகன தொழிற்சாலையில் (HVF) பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
'அப்ரெண்டிஸ்' பிரிவில் இன்ஜினியரிங் 150, டெக்னீசியன் 50, பட்டப்படிப்பு 250 என மொத்தம் 450 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: டிப்ளமோ / பட்டப்படிப்பு
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு
ஸ்டைபண்டு: மாதம் ரூ. 18 ஆயிரம்
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
கடைசிநாள்: 20.4.2026
விவரங்களுக்கு: nats.education.gov.in

## பட்டப்படிப்பு முடித்தவருக்கு வேலை



ரயில் இந்தியா தொழில்நுட்ப, பொருளாதார சேவை நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
அசிஸ்டென்ட் (எச்.ஆர்.,) பிரிவில் மொத்தம் 15 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பட்டப்படிப்பு
வயது: 18-30 (27.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 300. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 100
கடைசிநாள்: 27.4.2026
விவரங்களுக்கு: rites.com

## மத்திய அரசில் பணி



மத்திய அரசின் உயர் வெடிபொருள் தொழிற்சாலையில் தற்காலிக பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
சூப்பர்வைசரி (கெமிக்கல்) 6, ஸ்கில்டு வொர்க்கர் 85 என மொத்தம் 91 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: ஐ.டி.ஐ., / பி.இ., / பி.டெக்.,
வயது: 18-40 (10.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
The Chief General Manager, High Explosives Factory, Khadki, Pune, Maharashtra - 411 003.
கடைசிநாள்: 10.4.2026
விவரங்களுக்கு: ddpdoo.gov.in

## அழைக்கிறது ஆய்வு மையம்




தேசிய புவி அறிவியல் மையத்தில் (NCESS) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
சயின்டிபிக் அசிஸ்டென்ட் 11, புராஜக்ட் அசோசியேட் 7, டெக்னிக்கல் அசிஸ்டென்ட் 3, பீல்டு அசிஸ்டென்ட் 1, எம்.டி.எஸ்., 1, பிளம்பர் 1 உட்பட மொத்தம் 25 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: ஐ.டி.ஐ., / டிப்ளமோ / பட்டப்படிப்பு
வயது: 18 - 35, 18 - 50 (10.4.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: இல்லை
கடைசிநாள்: 10.4.2026
விவரங்களுக்கு: ncess.gov.in

## அறிவியல் நிறுவனத்தில் சேர விருப்பமா...




இந்திய அறிவியல் வளர்ச்சி கழகத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
அசிஸ்டென்ட் 5, எம்.டி.எஸ்., 5 என மொத்தம் 10 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு, பட்டப்படிப்பு
வயது: 18-30 (15.5.2026ன் படி)
தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு.
விண்ணப்பிக்கும் முறை: இணைய தளத்தில் உள்ள விண்ணப்பத்தை பதிவிறக்கி, பூர்த்தி செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
Registrar, Indian Association for the Cultivation of Science, 2A & B, Raja S. C. Mullick Road, Kolkata - 700 032.
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1000. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.
கடைசிநாள்: 15.5.2026
விவரங்களுக்கு: iacs.res.in

## நிதி நிறுவனத்தில் மேனேஜர் வாய்ப்பு



மத்திய அரசின் இந்திய உள்கட்டமைப்பு நிதி நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
அசிஸ்டென்ட் மேனேஜர் (ஜெனரல்) 31, சுற்றுச்சூழல், சமூக பாதுகாப்பு 31 என மொத்தம் 62 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பி.இ., / பி.டெக்.,/ பி.எல்., / சி.ஏ.,
வயது: 21-30 (28.2.2026ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 600. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 100
கடைசிநாள்: 10.4.2026
விவரங்களுக்கு: iifcl.in

# தொடரும் பங்குச் சந்தை ஏற்றம் சென்செக்ஸ் 1,205, நிஃப்டி 394.05 புள்ளிகள் உயர்வு!

சென்செக்ஸில் அல்ட்ராடெக் சிமெண்ட், பஜாஜ் ஃபைனான்ஸ், லார்சன் & டூப்ரோ, டைட்டன், இன்டர்குளோப் ஏவியேஷன் மற்றும் ட்ரென்ட் உள்ளிட்ட பங்குகள் உயர்ந்தும் மறுபுறம் டெக் மஹிந்திரா, பவர் கிரிட், டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் மற்றும் பாரத் எலக்ட்ரானிக்ஸ் ஆகிய பங்குகள் சரிந்தன.

நிஃப்டி-யில் ஸ்ரீராம் ஃபைனான்ஸ், டைட்டன் மற்றும் கிராசிம் ஆகிய பங்குகள் உயர்ந்தும் மறுபுறம் டெக் மஹிந்திரா, பவர் கிரிட் மற்றும் டிசிஎஸ் உள்ளிட்ட பங்குகள் சரிந்தன.

நிஃப்டி மிட்கேப் குறியீடு 2.3% மற்றும் ஸ்மால்கேப் குறியீடு 2.6% உயர்ந்தன.

ஆசிய சந்தைகளில், தென் கொரியாவின் கோஸ்பி குறியீடு, ஜப்பானின் நிக்கெய் 225 குறியீடு, ஷாங்காயின் எஸ்எஸ்இ காம்போசிட் குறியீடு மற்றும் ஹாங்காங்கின் ஹேங் செங் குறியீடு ஆகியவை உயர்ந்த நிலையில் ஐரோப்பிய சந்தையும் உயர்ந்து வர்த்தகமானது.


தரவுகளின் அடிப்படையில், வெளிநாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) ரூ. 8,009.56 கோடி மதிப்புள்ள பங்குகளை விற்பனை செய்துள்ள நிலையில் உள்நாட்டு நிறுவன முதலீட்டாளர்கள் ரூ.5,867.15 கோடி மதிப்புள்ள பங்குகளை வாங்கியுள்ளனர்.

கலவையான கருத்துகள் இருந்தபோதிலும், அமைதிக்கான நம்பிக்கை வெளிப்படத் தொடங்கியதால், அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையே ஏற்படக்கூடிய முன்னேற்றமானது, கச்சா எண்ணெயின் விலையை 100 அமெரிக்க டாலருக்கும் கீழே சரிய வைத்தது. உலகளாவிய பிரெண்ட் கச்சா எண்ணெய், பீப்பாய்க்கு ஒன்றுக்கு 5.07 சதவீதம் சரிந்து 99.19 அமெரிக்க டாலராகக் உள்ளது.

ஸ்ரீ ராம நவமி விடுமுறையை முன்னிட்டு, மார்ச் 26-ஆம் தேதியன்று (வியாழக்கிழமை) பங்குச் சந்தைக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

## குறைந்த வேகத்தில் விலை உயர்ந்த தங்கம், வெள்ளி





தங்கம் விலை கடந்த 12-ந்தேதியில் அதிரடியாக சரிந்து வருவதை பார்க்க முடிகிறது. இப்படியாக விலை குறைந்து வந்த சூழலில், நேற்று முன்தினம் ஒரே நாளில் காலையில் சவரனுக்கு ரூ.7,600 'மளமள'வென குறைந்து, பின்னர் மாலையில் சவரனுக்கு ரூ.5,360 உயர்ந்தது. நேற்று முன்தினம் ஒரு கிராம் ரூ.13 ஆயிரத்து 340-க்கும். ஒரு சவரன் ரூ.1 லட்சத்து 6 ஆயிரத்து 720-க்கும் விற்பனை ஆனது.

இதன் தொடர்ச்சியாக 2-வது நாளாக நேற்றும் தங்கம் விலையில் ஏற்றம்-இறக்கம் காணப்பட்டது. நேற்றைய காலை நேர நிலவரப்படி, கிராமுக்கு ரூ.340-ம். சவரனுக்கு ரூ.2 ஆயிரத்து 720-ம் குறைந்தது. இதனையடுத்து மாலையில் திடீரென்று கிராமுக்கு ரூ.250-ம், சவரனுக்கு ரூ.2 ஆயிரமும் உயர்ந்தது.

இந்நிலையில் சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.2,800 உயர்ந்து ரூ.1,08,800-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலை கிராமுக்கு ரூ.350 உயர்ந்து ரூ.13,600-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று உயர்ந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.260-க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.




## 1 டாலர் - ரூ. 94.05! 29 காசுகள் சரிந்தது!




அந்நிய நிறுவன முதலீடுகள் தொடர்ந்து வெளியேறி வருவதும் மற்றும் மேற்கு ஆசியாவில் நிலவும் பதற்றமான சூழல் உள்ளிட்டவை, முதலீட்டாளர்களைத் தொடர்ந்து கவலையில் ஆழ்த்திய நிலையில், இன்றைய வர்த்தகத்தில், டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு 29 காசுகள் சரிந்து ரூ. 94.05 என்ற புதிய வரலாற்றுச் சரிவு நிலையில் நிறைவடைந்தன.

வங்கிகளுக்கு இடையிலான அந்நியச் செலாவணிச் சந்தையில், அமெரிக்க டாலருக்கு நிகாரன இந்திய ரூபாய் மதிப்பு ரூ. 93.94 என்ற நிலையில் வர்த்தகத்தைத் தொடங்கியது. பிறகு ரூ. 93.86 முதல் ரூ. 94.08 என்ற நிலையில் வர்த்தகமாகி, இறுதியில் முந்தைய நாள் முடிவிலிருந்து 29 காசுகள் சரிந்து ரூ. 94.05 என்ற புதிய வரலாற்றுச் சரிவில் நிலைபெற்றது.

நேற்று (செவ்வாய்க்கிழமை) அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு 23 காசுகள் சரிந்து ரூ. 93.76 என்ற நிலையில் நிறைவடைந்தன.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## முப்பெரும் விழா




மயிலாடுதுறை கோவிந்தம்மாள் திருமண மண்டபத்தில் அறம் செய் குருதிக்கொடை குரூப்பின் சேவையை பாராட்டி ரோட்டரி கிளப் ஆப் மயிலாடுதுறை கிங்ஸ் சேவை அமைப்பினர் அறம் செய் நிர்வாகிகளான சிவக்குமார் மஹாவீர் சந்த் ஜெயின், சுப்ரமணியன் ஆகியோருக்கு விருது வழங்கினார்கள்.

## தேர்தல் பணிக்கு தேவையான பொருட்கள்



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு தேர்தல் பணிக்கு தேவையான பொருட்கள் மற்றும் படிவங்கள் உரிய சட்டமன்ற தொகுதிக்கு பிரித்து அனுப்பும் பணிகள் நடைபெற்று வருவதை திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் (ம) மாவட்ட ஆட்சித் தலைவர் உயர்திரு. க. தர்ப்பகராஜ் இ. ஆ. ப. அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## சாலை விபத்தில் நடிகை உயிரிப்பு

ராஜஸ்தானை சேர்ந்த நடிகையும் மாடலுமான ஹர்ஷில் காலியா (30) ஜெய்ப்பூரில் நடந்த சாலை விபத்தில் உயிரிழந்தார்.

திங்கட்கிழமை இரவு சுமார் 11:30 மணியளவில், ஹர்ஷில் தனது வேலையை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்.

ஜெய்ப்பூரின் மான்சரோவர் பகுதியில் உள்ள ஷிப்ரா பாத் சாலையில் அவரது கார் சென்றுகொண்டிருந்தபோது ஒரு வளைவில் கார் திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்து சாலைத் தடுப்பில் மோதியது.

மோதிய வேகத்தில் கார் தலைகீழாகக் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. விபத்தின் சத்தம் கேட்டு ஓடிவந்த பொதுமக்கள், காரைத் தூக்கி நிறுத்தி ஹர்ஷிலை மீட்டனர்.

பலத்த தலைக்காயங்களுடன் தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட அவரை பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

## பெட்ரோல், டீசல் விலை உயரும்




5 மாநில சட்டமன்ற தேர்தல் முடிந்தவுடன் பெட்ரோல், டீசல் விலை உயரும் என நடிகரும், முன்னாள் எம்எல்ஏவுமான எஸ்.வி.சேகர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து பேசியுள்ள அவர், தேர்தல் முடிந்தவுடன் பெட்ரோலுக்கு ரூ.10, கேஸ் சிலிண்டருக்கு ரூ.50 விலையை மத்திய அரசு உயர்த்தும். அதிக பாலியல் குற்றங்கள் நடப்பது பாஜக ஆளும் மாநிலங்களில்தான். இப்தார் நோன்பில் பங்கேற்ற விஜய், புதுச்சேரியில் ஒரு இஸ்லாமியருக்கு கூட வாய்ப்பு வழங்கவில்லை என விமர்சித்துள்ளார்.






தமிழகம் மற்றும் புதுவையில் மார்ச் 27 முதல் 29 வரை வெப்பநிலை இயல்பை விட 4 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஏனைய பகுதிகளில் வறண்ட வானிலை நிலவினாலும், மார்ச் 28 முதல் 31 வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மட்டும் லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. சென்னையில் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் நிலையில், அதிகபட்ச வெப்பநிலை 34 டிகிரி செல்சியஸை ஒட்டி இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

## மகப்பேறு கால உதவித் தொகை உயர்த்தி வழங்கப்படும்




தமிழ்நாட்டில் கர்ப்பிணிப் பெண்களுக்கு ஊட்டச்சத்து குறைபாட்டை நீக்கவும், மகப்பேறு கால வருமான இழப்பை ஈடுசெய்யவும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டம் மூலம் மொத்தம் ரூ.18,000 மதிப்புள்ள உதவித்தொகை வழங்கப்படுகிறது. இதில் ரூ.14,000 ரொக்கமாகவும், ரூ.4,000 மதிப்புள்ள ஊட்டச்சத்து பெட்டகம் இரு தவணைகளாகவும், வழங்கப்படுகிறது. இந்த நிலையில், மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வந்தால் இந்த உதவித் தொகை உயர்த்தி வழங்கப்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது.

## உலக அளவில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு



ஈரான், அமெரிக்கா -இஸ்ரேல் போர் 4 ஆவது வாரத்தை எட்டியுள்ளது. இந்த போரினால் ஈரான் ஹோர்முஸ் நீரிணையை முற்றிலும் மூடியுள்ளது. இதனால், உலக அளவில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், பிலிப்பைன்ஸ் அதிபர் பெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர் ஓராண்டு காலத்திற்கு தேசிய எரிசக்தி அவசரநிலையை அறிவித்துள்ளார். இதனால், உலகில் முதன்முதலாக தேசிய எரிசக்தி அவசரநிலையை அறிவித்த நாடாக பிலிப்பைன்ஸ் மாறியுள்ளது.



புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, செங்கோல் நீதி மக்கள் முன்னேற்றக் கழகம் மற்றும் சசிகலாவின் அஇபுதமமுக ஆகியவை நேற்று (மார்ச் 25) கூட்டணி அமைத்துள்ளன. இந்த ஒப்பந்தத்தின்படி, செநீமமுக 10 தொகுதிகளிலும், அஇபுதமமுக 4 தொகுதிகளிலும் போட்டியிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. நெட்டப்பாக்கம், வில்லியனூர், உழவர்கரை, இந்திரா நகர் ஆகிய தொகுதிகளில் அஇபுதமமுக போட்டியிடும். தமிழகத்தில் அஇபுதமமுக, பாமக ராமதாஸ் அணிகள் இணைந்து தேர்தலை சந்திக்கின்றன.



மத்திய அரசின் 2024-25 கல்வி ஆய்வு அறிக்கையின்படி, அரசு பள்ளிகளில் அதிக திறன்மிகு வகுப்பறைகள் கொண்ட மாநிலமாக தமிழ்நாடு முதலிடம் பிடித்துள்ளது. கடந்த 2021-ல் 43.5% இருந்த இந்த வசதி, தற்போது இரண்டு மடங்கு உயர்ந்து 82.5% எட்டி சாதனை படைத்துள்ளது. நவீன கல்வி முறையை அரசு பள்ளிகளில் செயல்படுத்துவதில் இந்தியாவிற்கே முன்மாதிரியாக தமிழகம் திகழ்வதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

## இளைஞர்களுக்கு திறன்சார் பயிற்சி



10 மற்றும் 12ஆம் வகுப்பு மட்டுமே முடித்துவிட்டு சொந்தமாக தொழில் தொடங்க விரும்பும் இளைஞர்களுக்கு திறன்சார் பயிற்சி வழங்கி, எவ்விதப் பிணையும் இன்றி ரூ.25 லட்சம் வரை தொழில் கடன் வழங்கப்படும் என அதிமுக அறிவித்துள்ளது. நேற்று (மார்ச் 24) வெளியான தேர்தல் அறிக்கையில், தமிழ்நாட்டில் இயங்கும் நிறுவனங்களில் 75 சதவிகித வேலைவாய்ப்புகள் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழர்களுக்கே என்ற சட்டம் இயற்றப்படும் என கூறப்பட்டுள்ளது.

## அய்யா பாசறை மக்கள் கட்சி



அய்யா பாசறை மக்கள் கட்சி (அய்யா பாமக) என்ற புதிய கட்சி தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாமகவின் மாம்பழம் சின்னம் தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் புதிய கட்சி தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. பாமக நிறுவனர் ராமதாஸ், அஇபுதமமுக கட்சி பொதுச் செயலாளர் சசிகலா இணைந்து கூட்டணி அமைத்துள்ள நிலையில், புதிய கட்சி பெயரில் ராமதாஸ் தேர்தலை சந்திக்கிறார். ராமதாஸின் பேரன் முகிலனை தலைவராக கொண்டு கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

## இன்று (26ஆம் தேதி) நாடாளுமன்றம் செயல்படாது



வார இறுதி நாட்களில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இயங்காது என நேற்று (மார்ச் 25) மக்களவையில் நாடாளுமன்ற விவகாரங்கள் துறைக்கான அமைச்சர் கிரண் ரிஜிஜு தெரிவித்தார். பண்டிகை விடுமுறையால் கூடாத அவைகள், வருகிற 28, 29 தேதிகளில் செயல்படும் என முதலில் முடிவு செய்யப்பட்டது. ஆனால், அலுவல் ஆலோசனை குழு உறுப்பினர்களின் ஆலோசனையின் பேரில், இன்று (26ஆம் தேதி) நாடாளுமன்றம் செயல்படாது என்றும், மகாவீர் ஜெயந்தியை முன்னிட்டு மார்ச் 31ஆம் தேதி அன்றும் செயல்படாது என்றும் அவர் கூறினார்.

## தானியங்கி தீர்வு முறை




செயல்படாமல் முடங்கி கிடக்கும் PF கணக்குகளில் உள்ள தொகையை, உறுப்பினர்களின் விண்ணப்பம் இன்றியே நேரடியாக வங்கி கணக்கிற்கு மாற்றும் 'தானியங்கி தீர்வு முறையை' EPFO அறிமுகப்படுத்தியுள்ளது. முதற்கட்டமாக, ஆதார் மூலம் சரிபார்க்கப்பட்ட 8.10 லட்சம் கணக்குகளில் உள்ள சுமார் ரூ.5,200 கோடி நிதியை விடுவிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், 3 ஆண்டுகளுக்கு மேலாக பங்களிப்பு ஏதுமின்றி முடங்கியுள்ள மொத்தம் ரூ.10,181 கோடி தொகையை தகுதியான சந்தாதாரர்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## ரூ.178.78 கோடி பணம் மற்றும் பரிசு பொருட்கள் பறிமுதல்

தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் வருகிற ஏப்.23ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதனால், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளது. இந்நிலையில், தமிழகத்தில் தேர்தல் அறிவிக்கப்பட்ட கடந்த 15ஆம் தேதி முதல் நேற்று (மார்ச் 24) வரை மொத்தம் ரூ.178.78 கோடி பணம் மற்றும் பரிசு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தட்டுப்பாடு என்ற வதந்திகளை நம்ப வேண்டாம்




இந்தியாவில் ஆண்டுக்கு 26 கோடி டன் கச்சா எண்ணெய் சுத்திகரிக்கும் திறன் உள்ளது என்றும், பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு இல்லை என்றும் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை செயலாளர் சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார். டெல்லியில் நேற்று (மார்ச் 25) செய்தியாளர்களை சந்தித்த அவர், தட்டுப்பாடு என்ற வதந்திகளை நம்ப வேண்டாம். பெட்ரோல் பம்புகளிலும், விநியோக முனையங்களிலும் போதுமான இருப்பு உள்ளது. விலை உயர்த்தப்படவில்லை என தெரிவித்தார்.

## அக்ராவரம் பாஸ்கர் அதிமுகவில் இணைந்தார்



ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சியின் மாநில பொதுச்செயலாளர் அக்ராவரம் பாஸ்கர், மாவட்டச் செயலாளர் S.M. சுகுமார் முன்னிலையில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து அதிமுகவில் இணைந்தார். திமுக, காங்கிரஸ் கூட்டணி மீதான அதிருப்தி மற்றும் சீட் விவகாரத்தில் அவர் அதிமுகவில் இணைந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பிரதமர் மோடி வரும் 29ஆம் தேதி பாலக்காடு திருச்சூரில் பிரச்சாரம்



கேரளத்தில் ஏப்ரல் 9 அன்று நடைபெறவிருக்கும் 140 சட்டமன்றத் தொகுதிகளுக்கான தேர்தலில், வேட்பு மனுக்கள் பரிசீலனை நேற்று நிறைவடைந்தது. இதில் 1603 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. இன்று வேட்பு மனுக்களை வாபஸ் பெறுவதற்கான கடைசி நாள் என்பதால், மாலைக்குள் இறுதிப் பட்டியல் வெளியாகும். தேர்தலுக்கு இன்னும் 2 வாரங்களே உள்ள நிலையில், பிரதமர் மோடி வரும் 29ஆம் தேதி பாலக்காடு மற்றும் திருச்சூரில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

## மனிதநேய ஜனநாயக கட்சிக்கு 1 தொகுதி ஒதுக்கீடு



திமுக கூட்டணியில் மனிதநேய ஜனநாயக கட்சிக்கு 1 தொகுதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்னை அண்ணா அறிவாலயத்தில் இன்று (மார்ச் 25) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மஜக தலைவர் தமிமுன் அன்சாரி முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. 5 தொகுதிகள் அடங்கிய விருப்பப் பட்டியலை திமுக தலைமையிடம் வழங்கியுள்ளதாகவும், அதில் ஒரு தொகுதியை ஒதுக்குமாறு வலியுறுத்தியதாகவும் தமிமுன் அன்சாரி தெரிவித்தார்.

## அனைத்து அமைப்பு சாரா வாகன ஓட்டுநர்களுக்கும் இலவச விபத்துக் காப்பீடுத் திட்டம்



அனைத்து அமைப்பு சாரா வாகன ஓட்டுநர்களுக்கும் இலவச விபத்துக் காப்பீடுத் திட்டம் தொடங்கப்படும் என அதிமுக தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து அமைப்பு சாரா கூலித் தொழிலாளர்களுக்கும் வட்டியில்லா நுண்கடன் ரூ.10,000 (மைக்ரோ லோன்) வழங்கும் திட்டம் விரிவாக்கம் செய்யப்படும் என கூறப்பட்டுள்ளது. மீனவர்களின் குடும்பங்களுக்கும், விபத்துக் காப்பீடாக ரூ.25 லட்சம் வழங்கப்படும் உள்ளிட்ட பல்வேறு வாக்குறுதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

# சுற்றுலா: கோடையை குளுமையாக்க தமிழ்நாட்டுக்கு அருகே உள்ள காசர்கோடு!

விடுமுறை நாட்கள் வந்துவிட்டாலே நம்மில் பலருக்கும் உடனே நியாபகம் வருவது ஊட்டி அல்லது கொடைக்கானல் தான். ஆனால், அங்கே போனால் இயற்கையை ரசிப்பதை விட, டிராஃபிக் ஜாமில் சிக்கி மூச்சு முட்டுவதுதான் அதிகம் நடக்கும். கொஞ்சம் வித்தியாசமாக, யாருக்கும் அதிகம் தெரியாத ஒரு அமைதியான மலைப்பிரதேசத்துக்கு போக வேண்டும் என நீங்கள் நினைத்தால், உங்களுக்கான ஒரு அட்டகாசமான சாய்ஸ் தான் கேரளாவில் உள்ள ராணிபுரம்.



நமது தமிழ்நாட்டுக்கு மிக அருகிலேயே அமைந்திருக்கும் இந்த இடத்தை பலரும் ஒரு குட்டி சுவிட்சர்லாந்து என்றே அன்பாக அழைக்கிறார்கள். அப்படி இந்த இடத்தில் என்ன ஸ்பெஷல் இருக்கிறது என்பதை பற்றி இப்போது பார்க்கலாம்.

கேரளாவின் காசர்கோடு மாவட்டத்தில் ரொம்பவே அமைதியாக வீற்றிருக்கிறது இந்த ராணிபுரம் மலைத்தொடர். கடல் மட்டத்திலிருந்து சுமார் 1048 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்த இடம், மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பிரம்மாண்டமான பகுதியாகும். இங்குள்ள மலை முகடுகளை தொட்டுச் செல்லும் வெண்மையான மேகங்களும், கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரிந்திருக்கும் பச்சை பசேல் என்ற புல்வெளிகளும் நிஜமாகவே உங்களை ஒரு நிமிடம் சுவிட்சர்லாந்தில் இருப்பதை போன்ற மாயையை ஏற்படுத்தும். இது இன்னும் பலருக்கும் தெரியாத ஒரு ஹிட்டன் ஸ்பாட் என்பதால், எந்த ஒரு வணிகமயமாக்கலும் இல்லாமல் இயற்கை அதன் அசல் அழகோடு இங்கு கொட்டிக்கிடக்கிறது.



பச்சை மலைகளுக்கு நடுவே சும்மா கார் ஓட்டிக்கொண்டு செல்வதை விட, கால்களில் ஷூவை மாட்டிக்கொண்டு அந்த அடர்ந்த காடுகளுக்குள் நடந்து செல்வது ஒரு வேற லெவல் அனுபவமாக இருக்கும். டிரெக்கிங் பிரியர்களுக்கென்றே இங்கு பிரத்யேகமான பல காட்டுப் பாதைகள் உள்ளன. அந்த பாதைகளில் நடந்து செல்லும்போது காதுகளுக்கு இனிமையான பறவைகளின் சத்தங்களையும், பலவிதமான அரிய வகை வனவிலங்குகளையும் மிக அருகில் பார்த்து ரசிக்கலாம்.

புகைப்படம் எடுப்பதில் ஆர்வம் உள்ளவர்களுக்கு இந்த இடம் ஒரு மாபெரும் பொக்கிஷம் என்றே சொல்லலாம். மலை உச்சியில் இருந்து கீழே உள்ள பள்ளத்தாக்குகளை பார்க்கும்போது கிடைக்கும் அந்த ஃபீல் வார்த்தைகளால் சொல்ல முடியாத அளவுக்கு ரொம்பவே ஸ்பெஷலானது.

எப்போது செல்வது சிறந்தது?

பொதுவாக மலைப்பிரதேசங்களுக்கு எப்போது வேண்டுமானாலும் செல்லலாம் என்றாலும், இந்த ராணிபுரத்திற்கு செல்ல அக்டோபர் முதல் மார்ச் வரையிலான மாதங்கள் மிகச் சரியான தேர்வாக இருக்கும். அந்த சமயத்தில் இங்கு இதமான குளிரும், பனிமூட்டமும் ரொம்பவே ரம்மியமாக இருக்கும். மழைக்காலங்களில் இந்த மலை முழுவதும் ஒரு பச்சை கம்பளம் போர்த்தியது போல பிரம்மாண்டமாக காட்சியளிக்கும். ஆனால் அந்த நேரத்தில் டிரெக்கிங் செல்லும் பாதைகள் சற்று வழுக்கும் தன்மையுடன் இருக்கும் என்பதால் கொஞ்சம் உஷாராக நடந்து செல்வது ரொம்பவே முக்கியம்.

சோஷியல் மீடியாக்களின் புண்ணியத்தால் இப்போது மெல்ல மெல்ல இந்த இடத்தின் ரகசியம் பலருக்கும் தெரிய ஆரம்பித்திருக்கிறது.

கூட்ட நெரிசலில் சிக்கித் தவிக்காமல் உங்களின் குடும்பத்தோடு அல்லது நண்பர்களோடு ஒரு நிம்மதியான, மறக்க முடியாத ட்ரிப் செல்ல பிளான் செய்தால், உங்களின் அடுத்த பயணத் திட்டம் நிச்சயமாக இந்த ராணிபுரம் மலையாகத்தான் இருக்க வேண்டும்.

ஒருமுறை இந்த குட்டி சுவிட்சர்லாந்திற்கு விசிட் அடித்து பாருங்கள், இந்த மலையின் பேரழகும் அமைதியும் உங்களை மீண்டும் மீண்டும் அங்கே வரவழைக்கும் என்பது உறுதி.

## வேலைவாய்ப்பு கார்னர்

### கனரக வாகன தொழிற்சாலையில் அப்ரெண்டிஸ் வாய்ப்பு

ஆவடியில் உள்ள மத்திய அரசின் கனரக வாகன தொழிற்சாலையில் (HVF) பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

'அப்ரெண்டிஸ்' பிரிவில் இன்ஜினியரிங் 150, டெக்னீசியன் 50, பட்டப்படிப்பு 250 என மொத்தம் 450 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: டிப்ளமோ / பட்டப்படிப்பு

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு

ஸ்டைபண்டு: மாதம் ரூ. 18 ஆயிரம்

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

கடைசிநாள்: 20.4.2026

விவரங்களுக்கு: nats.education.gov.in

### பட்டப்படிப்பு முடித்தவருக்கு வேலை



ரயில் இந்தியா தொழில்நுட்ப, பொருளாதார சேவை நிறுவனத்தில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அசிஸ்டென்ட் (எச்.ஆர்.,) பிரிவில் மொத்தம் 15 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு வயது: 18-30 (27.4.2026ன் படி)

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 300. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 100 கடைசிநாள்: 27.4.2026

விவரங்களுக்கு: rites.com

# எழும்பூரில் மின்சார ரெயில் நடைமேடை மறுசீரமைப்பு பணி மும்முரம்



**சென்னை, மார்ச் 26:**

சென்னையின் முக்கிய ரெயில் நிலையமாக எழும்பூர் ரெயில் நிலையம் உள்ளது. அதிகரித்து வரும் பயணிகளின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில், ரெயில் நிலையத்தில் ரூ.734.91 கோடி மதிப்பீட்டில் கடந்த 2023-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் மறுசீரமைப்பு பணிகள் தொடங்கி நடந்து வருகிறது.

அதன்படி, ரெயில் நிலைய வளாகத்தில் பன்னடுக்கு வாகன நிறுத்துமிடம் அமைக்கும் பணி, பார்சல் அலுவலகம், நுழைவுவாயில், ரெயில்வே ஊழியர்கள் அறை உள்பட பல்வேறு பணிகள் தொடர்ச்சியாக நடந்து வருகிறது. இதேபோல, எக்ஸ்பிரஸ் ரெயில் நடைமேடை மறுசீரமைப்பு பணிகளும் மேற்கொள்ளப்பட்டது. தற்போது, 50 சதவீதத்திற்கு மேல் பணிகள் நிறைவடைந்துள்ளது.

இதற்கிடையே, எழும்பூர் ரெயில் நிலைய மின்சார ரெயில் நடைமேடை 10, 11-ல் கடந்த மாதம் (பிப்ரவரி) 20-ந் தேதி முதல் மறுசீரமைப்பு பணி தொடங்கி மும்முரமாக நடைபெறுகிறது. வருகிற ஏப்ரல் 5-ந் தேதிக்குள் மின்சார ரெயில் இயக்கும் வகையில் அனைத்து பணிகளை முடித்து ரெயில்களை இயக்க திட்டமிட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அரசு வேலை வாங்கி தருவதாக கூறி ரூ.2.75 லட்சம் மோசடி: கணவன், மனைவிக்கு 2 ஆண்டுகள் சிறை



**தூத்துக்குடி, மார்ச் 26:**

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் பகுதியைச் சேர்ந்த பாலமுருகன் (எ) வானவில் பாலா (வயது 36) மற்றும் அவரது மனைவி ஆகியோர் சேர்ந்து கடந்த 2024-ம் ஆண்டு ஏரல் பகுதியைச் சேர்ந்த 2 பேரிடம் அரசாங்க வேலை வாங்கித் தருவதாக கூறி மொத்தம் ரூ.2.75 லட்சம் பணத்தை மோசடி செய்துள்ளனர். இதுகுறித்து பாதிக்கப்பட்டவர்கள் அளித்த புகாரின் பேரில் மாவட்ட குற்றப்பிரிவு 1-ல் மோசடி வழக்கு பதிவு செய்து, காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தனர்.

இந்த வழக்கின் விசாரணை தூத்துக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-IV ல் நடைபெற்று வந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பாக்கியராஜ் நேற்று, மேற்சொன்ன குற்றவாளிகளான பாலமுருகன் (எ) வானவில் பாலா மற்றும் அவரது மனைவி ஆகிய 2 பேரை குற்றவாளிகள் என உறுதி செய்து, மோசடி குற்றத்திற்காக தலா 2 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.4 ஆயிரம் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்.

இந்த வழக்கின் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி குற்றவாளிக்கு தண்டனை பெற்று தந்த மாவட்ட குற்றப்பிரிவு-I போலீஸ் டி.எஸ்.பி. மயில்சாமி, இந்த வழக்கினை திறம்பட புலனாய்வு செய்த மாவட்ட குற்றப்பிரிவு-I போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜானகி, அப்போதையசப்-இன்ஸ்பெக்டர் அனிதா, நீதிமன்றத்தில் சிறப்பாக வாதிட்ட அரசு தரப்பு வழக்கறிஞர் கண்ணன், வழக்கின் விசாரணைக்கு உதவியாக இருந்த ஏட்டு வைரமணி ஆகியோரை தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. மதன் பாராட்டினார்.

# வெயிலில் பணியாற்றுவோர் தினமும் 4 முதல் 5 லிட்டர் தண்ணீர் குடிப்பது அவசியம்: அரசு மருத்துவர் அறிவுரை

**மதுரை, மார்ச் 26:**

கோடை வெயிலின் தாக்கம் காரணமாக வெயிலில் பணியாற்றுவோர், நீரிழப்பைத் தடுக்க தினமும் 5 லிட்டர் நீர் குடிக்க வேண்டும் என மதுரை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை நிலைய மருத்துவ அலுவலர் முரளிதரன் அறிவுரை வழங்கி உள்ளார்.



தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் வழக்கத்துக்கு மாறாக முன்கூட்டியே அதிகரித்துள்ளது. இதனால் மக்களுக்கு வெப்பச் சோர்வு, தோல் பாதிப்பு, அம்மை, மயக்கம் போன்ற உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்துகிறது. இதனால் காலை 11 மணி முதல் மாலை 5 மணி வரை வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும் எனவும், போதுமான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்றும் மருத்துவர்கள் அறிவுரை வழங்கியுள்ளனர்.

இது குறித்து மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனை நிலைய மருத்துவ அலுவலர் முரளிதரன் கூறியது: "கோடை வெயிலின் தாக்கம் நிகழாண்டு அதிகரித்து காணப்படுகிறது. வெயிலில் பணியாற்றும் தொழிலாளிகள், பைக்கில் செல்வோர் போதிய குடிநீர் அருந்த வேண்டும்.

பருத்தி உடைகளை அணிய வேண்டும். களைப்பு, தலைச் சுற்றல் போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால், உடனடியாக நிழலுக்குச் சென்று தண்ணீர் குடிக்க வேண்டும். குறிப்பாக குழந்தைகள், முதியவர்கள், கர்ப்பிணிகள், ரத்த சோகை பாதிப்பு உள்ள வர்கள், இதய நோயாளிகள் காலை 11 மணி முதல் மாலை 5 மணிவரை வெயிலில் செல்வதை தவிர்க்க வேண்டும்.

நீரிழப்பை பத்தடுக்கதர்ப்பூசணி, இளநீர், மோர், வெள்ளரிக்காய் போன்றவற்றைஉட்கொள்ளலாம். பெரும்பாலும் பொரித்த உணவு, அசைவ உணவு வகைகளை தவிர்க்க வேண்டும். வெயிலின் தாக்கத்தால் ஏற்படும் ஹீட் ஸ்ட்ரோக், மயக்கம் உள்ளிட்ட நோய்களுக்காக 20 படுக்கைகள் கொண்ட அவசர சிகிச்சை வார்டு அரசு மருத்துவமனையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், அம்மை பாதிப்பு ஏற்பாட்டால், மருத்துவரை அணுகி உரிய சிகிச்சை எடுக்க வேண்டும். மொத்தத்தில் வெயிலில் செல்வோர் குளிர்ந்த நீரை பருகாமல் சாதாரண நீரை குடிக்க வேண்டும். குறைந்தது, 4 முதல் 5 லிட்டர் தண்ணீர் பருகினால் வெயில் காலத்தில் ஏற்படும் நீரிழப்பை தடுக்கலாம்" என்று அவர் கூறினார்.

# எக்ஸ்பிரஸ் ரெயிலில் அடிபட்டு இளம்பெண் உயிரிழப்பு

**சென்னை, மார்ச் 26:**

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியை அடுத்த பட்டாபிராம் சத்திரம் பகுதியை சேர்ந்தவர் பிரபு. இவரது மகள் சந்தியா (25 வயது). இவருக்கும், சென்னை முகப்பேர் பாடசாலை தெருவைச் சேர்ந்த கார்த்திக் (28 வயது) என்பவருக்கும் கடந்த பிப்ரவரி மாதம் 22-ந்தேதி இரு வீட்டார் சம்மதத்துடன் திருமணம் நடைபெற்றது.

நேற்று முன்தினம் சந்தியா, கணவருடன் ஏற்பட்ட வாய் தகராறு காரணமாக பட்டாபிராம் சத்திரம் பகுதியில் உள்ள பெற்றோர் வீட்டுக்கு வந்துள்ளார். அதன் பிறகு அவரது தந்தை பிரபு, சந்தியாவை சமாதானம் செய்து கணவர் வீட்டுக்கு செல்லுமாறு அனுப்பி வைத்துள்ளார். இதையடுத்து நேற்று மாலை சந்தியா வீட்டில் இருந்து புறப்பட்டு சென்றதாக தெரிகிறது. பட்டாபிராம் ரெயில் நிலையம் அருகே அவர் தண்டவாளத்தை கடந்து செல்ல முயன்றார்.

அப்போது சென்னையில் இருந்து கோவை நோக்கி சென்ற வந்தேபாரத் எக்ஸ்பிரஸ் ரெயிலில் அடிபட்டு சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். இதுகுறித்து ஆவடி ரெயில்வே போலீசார் வழக்குப்பதிவு செய்து உயிரிழந்த சந்தியா உடலை பிரேத பரிசோதனைக்காக சென்னை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் சந்தியா, ரெயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டாரா? என்ற கோணத்திலும் ரெயில்வே போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# தூத்துக்குடியில் 8 கிலோ கஞ்சா, பைக் பறிமுதல்: 2 வாலிபர்கள் கைது



**தூத்துக்குடி, மார்ச் 26:**

தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை காவல் நிலைய இன்ஸ்பெக்டர் முருகன் தலைமையில் சப்-இன்ஸ்பெக்டர் கணபதி மற்றும் போலீசார் நேற்று புதுக்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அய்யனடைப்பு ரோட்டில் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அங்கு சந்தேகப்படும்படி வந்த இருசக்கர வாகனத்தை நிறுத்தி போலீசார் சோதனை செய்தனர். அதில் அவர்கள் தூத்துக்குடியைச் சேர்ந்தவர்களான மக்சன் சாமுவேல் (வயது 23) மற்றும் இசக்கிசெல்வம் (27) ஆகியோர் என்பதும், அவர்கள் விற்பனைக்காக பைக்கில் 8 கிலோ கஞ்சா வைத்திருந்ததும் தெரியவந்தது. உடனடியாக மேற்சொன்ன போலீசார் அந்த வாலிபர்கள் 2 பேரையும் கைது செய்து அவர்களிடமிருந்து 8 கிலோ கஞ்சா மற்றும் இருசக்கர வாகனத்தை பறிமுதல் செய்தனர். மேலும் இதுகுறித்து புதுக்கோட்டை காவல் நிலைய போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# ஏப்ரல் 1-ந்தேதி தும்புரு தீர்த்த முக்கோட்டி உற்சவம்.. திருமலையில் விரிவான ஏற்பாடுகள்

**திருமலை, மார்ச் 26:**

திருப்பதி ஏழுமலையான் கோவில் அருகே தும்புரு தீர்த்தம் உள்ளது. திருமலை சேஷாசல வனப்பகுதியில் அமைந்துள்ள மிகவும் புனிதமான தீர்த்தங்களில் (நீர்நிலைகள்) தும்புரு தீர்த்தமும் ஒன்று. 'முக்கோட்டி' எனும் மங்கல நாளில் இந்தத் தீர்த்தத்தில் புனித நீராடுவது, பாவங்களைப் போக்கி மோட்சத்தை அருளும் என்பது ஐதீகம்.

அவ்வகையில் தும்புரு தீர்த்தத்தில் வருகிற 31-ந்தேதி மற்றும் ஏப்ரல் 1-ந்தேதி ஆகிய 2 நாட்கள் முக்கோட்டி உற்சவம் நடக்கிறது. பக்தர்கள் அடர்ந்த காட்டுப்பகுதி வழியாக மலையேறிச் சென்று தும்புரு தீர்த்தத்தை அடைந்து, புனித நீராடி வழிபடுவார்கள்.



பக்தர்களுக்கு தேவையான வசதிகள்:முக்கோட்டி உற்சவத்தை முன்னிட்டு பக்தர்களுக்கு முன்கூட்டியே வசதிகளை செய்து கொடுப்பது தொடர்பாக திருமலையில் உள்ள பத்மாவதி விருந்தினர் மாளிகையில் தேவஸ்தான அதிகாரிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் தேவஸ்தான கூடுதல் அதிகாரி வெங்கையா சவுத்ரி பேசியதாவது:-

திருப்பதி ஏழுமலையான் கோவில் அருகில் உள்ள தும்புரு தீர்த்தத்தில் ஏப்ரல் மாதம் 1-ந்தேதி முக்கோட்டி உற்சவம் நடக்கிறது. அதை முன்னிட்டு வருகிற 31-ந்தேதி காலை 6 மணியில் இருந்து ஏப்ரல் 1-ந்தேதி காலை 10 மணி வரை மட்டுமே பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

பாபவிநாசனம் அணை அருகில் பக்தர்களுக்கு காலை உணவாக அன்னப்பிரசாதம், குடிநீர் ஆகியவை 100 ஸ்ரீவாரி சேவா சங்க தொண்டர்கள் மூலம் வழங்கப்படும். தும்புரு தீர்த்தம் பகுதியில் முதலுதவி மையங்கள் அமைக்கப்படும். பக்தர்களுக்கு ஏதேனும் அசம்பாவித சம்பவங்கள் நடந்தாலும், திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டாலும் அவர்களை மீட்டுச் செல்ல ஆம்புலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கும். பக்தர்களுக்கு தேவையான மருந்துகளும் தயார் நிலையில் வைக்கப்படும். பக்தர்களுக்கு சிகிச்சை அளிக்க டாக்டர்களும், நர்சுகளும் தயாராக இருப்பார்கள்.

தும்புரு தீர்த்தத்துக்கு நீண்ட தூர நடைபயணம் மேற்கொள்ள வேண்டியிருப்பதால், அங்குச் செல்ல 60 வயதுக்கு மேற்பட்டோர், இதயம் மற்றும் சுவாச பிரச்சினை உள்ள நோயாளிகள், அதிக உடல் எடை கொண்ட பக்தர்களுக்கு அனுமதி இல்லை. பக்தர்கள் சமையல் பொருட்கள், கற்பூரம், தீப்பெட்டிகள் ஆகியவற்றை கொண்டு வர வேண்டாம்.

காவல், வனம், தேவஸ்தானம் ஆகிய துறைகளை சேர்ந்த அதிகாரிகள் இணைந்து பாபவிநாசனம் முதல் தும்புரு தீர்த்தம் வரை பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்வார்கள். வழி நெடுகிலும் தும்புரு தீர்த்தத்துக்கு செல்ல வழிகாட்டி பலகைகள் அமைக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

## க்ரைம் கார்னர்

### தோழியின் வீட்டில் 20 சவரன் நகை திருடிய பெண் கைது

**நெல்லை, மார்ச் 26:**

திருநெல்வேலி மாவட்டம், வடக்கன்குளத்தைச் சேர்ந்த நாகராஜன் மனைவி ஜெனிட்டா (வயது 58). இவர் சம்பவத்தன்று பகலில் அத்தியாவசிய வேலைக்காக வெளியே சென்று விட்டு பின்னர் தனது வீட்டுக்கு திரும்பி வந்தார். தொடர்ந்து அவர் அணிந்திருந்த 20 சவரன் நகைகளை கழட்டி மேஜையில் வைத்து விட்டு சிறிது நேரம் தூங்கினார்.

அப்போது அவரது வீட்டுக்குள் நைசாக நுழைந்த மர்ம நபர், மேஜையில் இருந்த 20 சவரன் நகைகளை திருடிச் சென்றார். சிறிது நேரத்தில் கண் விழித்த ஜெனிட்டா நகைகள் திருடு போனதை அறிந்து அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்த புகாரின்பேரில், பணகுடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். விசாரணையில் அதே பகுதியைச் சேர்ந்த செலினா(58) என்பவர் ஜெனிட்டாவின் வீட்டுக்குள் புகுந்து நகைகளை திருடியது தெரிய வந்தது. இவர்கள் 2 பேரின் வீடுகளும் அருகருகே உள்ளன. எனவே அவர்கள் நட்புடன் தோழிகளாக பழகி வந்தனர். சம்பவத்தன்று தோழி ஜெனிட்டாவை பார்க்க செலினா சென்றபோது, அவர் நகைகளை கழட்டி மேஜையில் வைத்து விட்டு தூங்கியதும், இதனால் அவர் நகைகளை நைசாக திருடிச் சென்றதும் தெரிய வந்தது. எனவே செலினாவை போலீசார் கைது செய்தனர். அவர் அடமானம் வைத்த நகைகளையும் மீட்க ஏற்பாடு செய்தனர்.

### திருநெல்வேலியில் குடும்ப தகராறில் விவசாயி வெட்டிக்கொலை: வாலிபர் கைது

திருநெல்வேலி மாவட்டம், மூலைக்கரைப்பட்டி அருகே மாயனேரி கிராமத்தைச் சேர்ந்த தங்கவேல் மகன் ஆறுமுகபெருமாள் (வயது 40), விவசாயி. இவருடைய மனைவியின் தம்பி கிட்டு(எ) கிருஷ்ணபெருமாள்(35). இவர்கள் 2 பேருக்கும் இடையே குடும்ப தகராறு ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்தது.

இந்த நிலையில் நேற்று இரவில் ஆறுமுகபெருமாள் மூலைக்கரைப்பட்டி அருகே அம்பலம் ஊரில் உள்ள டாஸ்மாக் கடைக்கு சென்று விட்டு அந்த சாலையில் திரும்பி வந்து கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த கிருஷ்ணபெருமாளுக்கும், ஆறுமுகபெருமாளுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதில் ஆத்திரமடைந்த கிருஷ்ணபெருமாள் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து ஆறுமுகபெருமாளை சரமாரியாக வெட்டினார். இதில் தலை, முகம் உள்ளிட்ட பகுதிகளில் பலத்த வெட்டுக்காயம் அடைந்த அவர் ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார். பின்னர் கிருஷ்ணபெருமாள் அங்கிருந்து தப்பி சென்றார். இதனைப் பார்த்த அப்பகுதியினர் அதிர்ச்சி அடைந்து மூலைக்கரைப்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். உடனே போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று, இறந்த ஆறுமுகபெருமாளின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக பாளையங்கோட்டை ஐகிரவுண்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலும் இதுகுறித்து வழக்குப்பதிவுசெய்துவிசாரணைநடத்தினர். இந்தநிலையில் அந்த பகுதியில் பதுங்கியிருந்த கிருஷ்ணபெருமாளை போலீசார் கைது செய்தனர். மூலைக்கரைப்பட்டி அருகே குடும்ப தகராறில் விவசாயியை மைத்துனரே அரிவாளால் சரமாரியாக வெட்டிக்கொலை செய்த பயங்கர சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

### கொலை முயற்சி, திருட்டு வழக்கில் 2 பேர் தடுப்பு காவல் சட்டத்தில் கைது

திருநெல்வேலி தாலுகா காவல்நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் திருட்டு வழக்கில் ஈடுபட்ட மதுரை மாவட்டம், கடைச்சிநேந்தல் பகுதியை சேர்ந்த முனியாண்டி என்பவரின் மகன் மணிசங்கர் (வயது 20) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இவர் மீது தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க தாலுகா காவல் நிலைய இன்ஸ்பெக்டர் சசிகுமார், மாவட்ட எஸ்.பி.யிடம் வேண்டுகோள் விடுத்தார். அதேபோல் சேரன்மகாதேவி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் கொலை முயற்சி வழக்கில் ஈடுபட்ட தென்காசி மாவட்டம், கடையநல்லூர் பகுதியை சேர்ந்த முத்துப்பாண்டி என்பவரின் மகன் சிவசந்தோஷ்(19) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். 2 பேரும் தமிழ்நாடு தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

## விளையாட்டு செய்திகள்

### தேர்தல் நடைபெற உள்ளதால்.. கிரிக்கெட் போட்டிகளை தள்ளி வைக்கக்கோரி வழக்கு

**சென்னை, மார்ச் 26:**

தமிழக சட்டசபை தேர்தல் நடைபெற உளதால் சென்னையில் நடைபெறும் இரண்டு ஐ.பி.எல் போட்டிகளை வேறு தேதிகளுக்கு மாற்றக் கோரி சென்னை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதுதொடர்பாக சென்னை ஐகோர்ட்டில், டி.பிரபாகரன் என்பவர் தாக்கல் செய்துள்ள பொதுநல மனுவில், "தமிழ்நாடு சட்டசபைக்கு வருகிற ஏப்ரல் 23-ந்தேதி தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தநிலையில், சென்னை சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி கலந்து கொள்ளும் கிரிக்கெட் போட்டி வருகிற ஏப்ரல் 4-ந்தேதி மற்றும் 15-ந்தேதி நடைபெற உள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த கிரிக்கெட் போட்டி நடந்தால், குறிப்பாக போலீசாருக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். ஏற்கனவே, வழக்கமான சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மற்றும் போக்குவரத்து ஒழுங்குப்படுத்துதல் பணிகளுடன், தலைவர்களின் தேர்தல் பிரசார கூட்டங்களுக்கும் போலீசார் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர். இந்த பணியுடன் இந்த கிரிக்கெட் போட்டிக்கும் பாதுகாப்பு வழங்குவது என்பது போலீசாருக்கு மிகப்பெரிய சிரமத்தை ஏற்படுத்தும்.

எனவே, சென்னையில் ஏப்ரல் மாதம் 4 மற்றும் 15-ந்தேதி நடைபெறவுள்ள கிரிக்கெட் போட்டிகளை தேர்தலுக்கு பின்தள்ளி வைக்க வேண்டும். இதுகுறித்து, போட்டி ஏற்பாட்டாளர்களுக்கு அறிவுறுத்த தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும். இரு போட்டிகளையும் திட்டமிடப்பட்ட தேதிகளில் நடத்த அனுமதித்தால், தேர்தல் நடத்தை விதிகளை கடுமையாக அமல்படுத்த வேண்டும். அரசியல் கட்சிகளின் சின்னம், கொடிகளை போட்டி மைதானத்தில் காட்சிப்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்யும்படி கிரிக்கெட் போட்டி ஏற்பாட்டாளர்களுக்கு உத்தரவிட வேண்டும்" என்று கூறியுள்ளார். இந்த வழக்கு சென்னை ஐகோர்ட்டில் விரைவில் விசாரணைக்கு வர உள்ளது.

### 'ஆர்சிபி' அணியை ரூ.16,706 கோடிக்கு வாங்கிய ஆதித்யா பிர்லா குழும கூட்டமைப்பு

பெங்களூரு: நடப்பு ஐபிஎல் கிரிக்கெட் சாம்பியனான ராயல் சாலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை ரூ.16,706 கோடிக்கு ஆதித்யா பிர்லா குழுமம் தலைமையிலான கூட்டமைப்பு வாங்கி உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. 17 சீசன்களாக பட்டம் வெல்ல முடியாமல் இருந்த ஆர்சிபி அணி, கடந்த சீசனில் (18-வது ஐபிஎல் சீசன்) முதல் முறையாக பட்டம் வென்றது குறிப்பிடத்தக்கது. இதை அந்த அணியின் ரசிகர்கள் கொண்டாடி தீர்த்தனர். 10 ஐபிஎல் அணிகளில் அதிக ரசிகர் பட்டாளத்தை கொண்ட அணிகளில் ஒன்றாக ஆர்சிபி அறியப்படுகிறது. இந்நிலையில், அந்த அணியின் உரிமையை கைமாற்றும் திட்டத்தில் அதன் உரிமையாளர் யுனைடெட் ஸ்பிரிட்ஸ் லிமிடெட் (யுஎஸ்எல்) நிறுவனம் இருப்பதாக ஏற்கெனவே தகவல் வெளியாகி இருந்தது. இந்த சூழலில் அந்த அணியை ஆதித்யா பிர்லா குழுமம், டைம்ஸ் ஆப் இந்தியா, பி.எக்ஸ்.பி.இ, போல்ட் வென்ச்சர்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களின் கூட்டமைப்பு ரூ.16,706 கோடிக்கு வாங்கியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

# ரயில் ஓட்டுநர் ஓய்வறைகளில் காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு: சுகாதாரமான உணவு கிடைப்பதில் சிக்கல்

**சென்னை, மார்ச் 26:**

ரயில் ஓட்டுநர் ஓய்வறைகளில் காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஓட்டுநர்களுக்கு சுகாதாரமான உணவு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. எனவே, இங்கு முன்னுரிமை அடிப்படையில், காஸ் சிலிண்டர் வழங்க மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெறும் போரால், இந்தியாவில் காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வீட்டு உபயோக சிலிண்டர்கள் வழங்கப்பட்டாலும், வணிகப் பயன்பாட்டுக்கான காஸ் சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், பல இடங்களில் உணவகங்கள் மூடப்பட்டுள்ளன. இதற்கிடையே, காஸ் சிலிண்டர்கள் தட்டுப்பாடு ரயில் ஓட்டுநர்களின் ஓய்வறைகளில் தற்போது எதிரொலிக்கத் தொடங்கியுள்ளது.

வெளியூர்களுக்கு ரயில்களை இயக்கும் ரயில் ஓட்டுநர்கள், கார்டுகள் பணி முடிந்து ஓய்வெடுக்க வசதியாக, நாடு முழுவதும் 558 ரயில் ஓட்டுநர் ஓய்வறைகள் உள்ளன.

தெற்கு ரயில்வேயில், சென்னை எழும்பூர், சென்ட்ரல், சென்னை கடற்கரை, தாம்பரம், திருவொற்றியூர், ஈரோடு, திருச்சி, விழுப்புரம், மதுரை, காட்பாடி, சேலம், கோவை உள்பட பல்வேறு இடங்களில் ஓட்டுநர் ஓய்வறைகள் உள்ளன.

உயர் தரத்தில் பராமரிக்கப்படும் இந்த அறைகளில் அவர்களுக்கு மானிய விலையில் சுகாதாரமான உணவு வழங்கப்படுகிறது. தற்போது, ரயில் ஓட்டுநர் ஓய்வறைகளில் காஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டால், அவர்களுக்கு உணவு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இது குறித்து, தெற்கு ரயில்வே பொதுமேலாளருக்கு தட்சிண ரயில்வே ஊழியர்கள் சங்க பொதுச்செயலாளர் ஏ.எம். பேபி ஷக்கிலா கடிதம் எழுதியுள்ளார். அதில், ரயில்வே கோட்டங்களில் உள்ள பல்வேறு ஓய்வறைகளில் (RUNNING ROOMS) ஓட்டுநர் மற்றும் இயக்கப் பணியாளர்களுக்கு உணவு கிடைக்காத காரணத்தினால், தற்போது கடுமையான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். ரயில் ஓட்டுநர்கள் தங்கள் பணி மற்றும் ஓய்வு நேரங்களில் குறித்த நேரத்துக்கு சுகாதாரமான உணவு கிடைப்பதற்கு ஓய்வு அறையையே முழுமையாகச் சார்ந்திருக்கின்றனர். தற்போதைய சூழல் பணியாளர்களுக்குப் பெருத்த சிரமத்தையும், மன உளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில், நீண்ட மற்றும் களைப்பூட்டும் பணி நேரங்களுக்குப் பிறகு அவர்களால் முறையான உணவைப் பெற இயலவில்லை. இது அவர்களின் உடல்நலன், பணிச் செயல்பாட்டை பாதிக்கும் எனவே, ஓட்டுநர் ஓய்வறைகளில் காஸ் சிலிண்டர் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். தேவையான உணவு தயாரித்து வழங்குவதை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# தமிழகம், புதுச்சேரியில் 4 டிகிரி வரை வெப்பநிலை அதிகரிக்கும்!

**சென்னை, மார்ச் 26:**

தமிழகம், புதுவையில் 4 டிகிரி செல்சியஸ் வரை வெய்யில் அதிகரிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மார்ச் 25 முதல் 27 வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

மார்ச் 28 முதல் 31 வரை மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

மார்ச் 25, 26 தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றதிற்கான வாய்ப்பு குறைவு.



மார்ச் 27 முதல் 29 வரை தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 2-4 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.

நேற்று (25-03-2026) மற்றும் இன்று (26-03-2026) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 33-34° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 24-25° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.

# ரூ. 50,000 மேல் பணமாக எடுத்துச் செல்லலாமா? தேர்தல் ஆணையம் விளக்கம்!

**சென்னை, மார்ச் 26:**

ரூ. 50,000 -க்கு மேல் பணம் எடுத்துச் செல்வது குறித்து தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் புதன்கிழமை விளக்கம் அளித்துள்ளார்.

சென்னை தலைமைத் தேர்தல் அலுவலகத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் கையேடு 2026-ஐ மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் இன்று வெளியிட்டார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர் பேசியதாவது:



"வணிகச் சங்கங்கள் உள்பட பலர் ரூ. 50,000 என்ற உச்ச வரம்பை உயர்த்த வலியுறுத்தியுள்ளனர். அவர்களின் கோரிக்கையைத் தலைமைத் தேர்தல் ஆணையத்திடம் தெரிவித்துள்ளோம். தற்போதைய சட்ட விதிமுறைகளின்படி, ரூ. 50,000 வரை மட்டுமே பணமாக கொண்டு செல்ல முடியும்.

பொதுமக்களை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று பறக்கும் படைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. பணம் எதற்காக எடுத்துச் செல்கிறார்களோ அதுதொடர்பான ஏதேனும் ஆவணங்கள் இருந்தால் ரூ. 50,000-க்கு மேல் எடுத்துச் செல்லலாம். மருத்துவச் செலவுகளுக்காக அதிக பணம் எடுத்துச் செல்பவர்கள் வாட்ஸ்அப்பில் ஆவணங்களைக் காட்டினால்கூட போதும்.

கிராமப்புறப் பகுதிகளில் தான் ஆவணங்கள் இல்லாமல் அதிக பணம் எடுத்துச் செல்லும் பிரச்னை அதிகமாக இருக்கின்றது. சந்தையில் இருந்து வருபவர்களிடம் ஆவணங்கள் இல்லை போன்ற பிரச்னைகள் உள்ளன. மக்களிடம் போதிய விழிப்புணர்வு செய்யப்பட்டுள்ளது" எனத் தெரிவித்தார்.

## வணிகச் செய்திகள்

### கேரளாவில் உணவகங்கள் மூடல்: சொந்த ஊர் திரும்பிய தொழிலாளர்கள்




**திருவனந்தபுரம், மார்ச் 26:**

கேரளாவில் உள்ள உணவகங்கள் பெரும்பாலும் மேற்கு வங்கம், அசாம் தொழிலாளர்களை சார்ந்துள்ளன.

மேற்கு வங்கம், அசாமில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது, தங்கள் பெயர் நீக்கப்படும் என கருதி பிஹார் மற்றும் அசாம் தொழிலாளர்கள் பலர் சொந்த ஊர் சென்றனர்.

தற்போது சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக கேரளாவில் பல உணவகங்கள் மூடப்பட்டுள்ளதால் வெளி மாநில தொழிலாளர்கள் பலர் வேலை இழந்துள்ளனர். இதனால் அவர்கள் அதிகளவில் சொந்த மாநிலங்களுக்கு திரும்புகின்றனர்.

# 17 மாநில உயர் அதிகாரிகளுடன் தேர்தல் ஆணையம் ஆலோசனை




**புதுடெல்லி, மார்ச் 26:**

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் மாநிலங்கள், யூனியன் பிரதேசம் மற்றும் அவற்றை ஒட்டிய மாநிலங்களின் உயர் அதிகாரிகள் குழுவினருடன் தேர்தல் ஆணையம் ஆலோசனை மேற்கொண்டது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நான்கு மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசம் மற்றும் அதன் எல்லைகளில் அமைந்துள்ள 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செயலாளர்கள், தலைமைத் தேர்தல் அதிகாரிகள், காவல்துறை தலைவர்கள் மற்றும் உயரதிகாரிகளுடன் தேர்தல் ஆணையம் ஆய்வுக்கூட்டம் நடத்தியது. அப்போது, வன்முறையி ல்லாத, மிரட்டல் இல்லாத, தூண்டுதல் இல்லாத தேர்தல்களை உறுதி செய்யுமாறும், ஒருங்கிணைப்பை மேம்படுத்துமாறும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டது.

அசாம், கேரளா, தமிழ்நாடு, மேற்கு வங்கம், புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் ஆணையர்கள் எஸ் எஸ் சாந்து, விவேக் ஜோஷி ஆகியோருடன் இணைந்து தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் வாக்குப்பதிவுக்கான தயார்நிலை, சட்டம், ஒழுங்கு நிலைமை சட்டவிரோத ரொக்கம், மதுபானம், போதைப்பொருள், ஆயுதங்கள் ஆகியவற்றை கைப்பற்றியது குறித்தும் மாநிலங்களுக்கு இடையேயான எல்லைச் சாவடிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

## 'என்னை பாஸ் பண்ணுங்க' : வைரலாகும் மாணவரின் பதில் தாள்




**ஐதராபாத், மார்ச் 26:**

பெற்றோர் தங்கள் குழந்தைகள் நன்றாக படித்து நல்ல நிலைக்கு வர வேண்டும் என்ற ஆசையில் பெரிய கல்லூரிகளில் சேர்த்து, லட்சக்கணக்கில் கட்டணம் செலுத்துகின்றனர். ஆனால், சில மாணவர்கள் படிப்பை புறக்கணித்து மொபைல், ரீல்ஸ், சமூக வலைதளங்களில் நேரத்தை செலவழித்து தங்களது எதிர்காலத்தை கெடுத்துகொள்கிறார்கள்.

தேர்வை சரியாக எழுத முடியாத இத்தகைய மாணவர்கள், பல்வேறு வழிகளில் ஆசிரியர்களிடம் பாஸ் செய்ய வேண்டி முயற்சி செய்வதும் வழக்கமாக உள்ளது. சிலர் பதில் தாளில் பணம் வைப்பது போன்ற சம்பவமும் நடக்கின்றது.

இந்த நிலையில், தெலுங்கானா மாநிலத்தில் சமீபத்தில் முடிந்த இன்டர்மீடியட் தேர்வுகளின் மதிப்பீட்டின்போது அதிர்ச்சி சம்பவம் நிகழ்ந்துள்ளது. மதிப்பீட்டாளர்கள் பதில் தாள்களை திருத்தும் போது, ஒரு மாணவர் எழுதியிருந்த வாசகங்கள் அவர்களை அதிர்ச்சியடைய வைத்திருக்கிறது. அந்த மாணவர், "சார்... எனக்கு அம்மா, அப்பா இல்லை. நீங்கள்தான் எனக்கு எல்லாம். தயவு செய்து என்னை பாஸ் பண்ணுங்கள். நான் படித்தது தேர்வில் வரவில்லை. நீங்கள் தான் என் கடவுள்" என்றும் ஆசிரியரின் காலில் விழுந்து வணங்கும் மாணவர் உருவத்தை வரைந்து, அதற்கு அருகில் 'சார்' மற்றும் 'நான்' என குறிப்பிட்டிம் இருந்தார். இந்த பதில் தாளின் புகைப்படம் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது,

## வீட்டு உபயோக சிலிண்டரின் எடை 10 கிலோவாக குறைப்பு என்பதில் உண்மையில்லை: மத்திய அரசு

**புதுடெல்லி, மார்ச் 26:**

கியாஸ் சிலிண்டர்களை பதுக்கி வைப்பதும், கருப்புச் சந்தையில் விற்பனை செய்வதும் தடுக்கும் நோக்கத்தில் நாடு முழுவதும் அதிரடி சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.இந்த நிலையில், வீட்டு உபயோக சிலிண்டர் எடை 10 கிலோவாக குறைக்கப்படும் என்ற செய்தி தீயாக பரவி வந்தது.இதுகுறித்து இது முற்றிலும் வதந்தி என மத்திய பெட்ரோலிய அமைச்சகம் விளக்கம் அளித்துள்ளது. மத்திய கிழக்கு நாடுகளில் நிலவும் போர் பதற்றம் காரணமாக சமையல் கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்படலாம் என்றும், அதை சமாளிக்க எண்ணெய் நிறுவனங்கள் சிலிண்டரின் எடையை குறைக்க திட்டமிட்டுள்ளதாகவும் வதந்திகள் பரவின. ஏற்கனவே வணிக பயன்பாட்டு சிலிண்டர் விநியோகம் நிறுத்தப்பட்ட நிலையில், வீட்டு உபயோக சிலிண்டரின் எடையும் குறைக்கப்படும் என்ற தகவல் பரவியதால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இந்த நிலையில், மத்திய பெட்ரோலிய அமைச்சகத்தின் இணை செயலாளர் சுஜாதா சர்மா கூறியதாவது:

"வீட்டு உபயோக சிலிண்டர் எடை 14.2 கிலோவிலிருந்து 10 கிலோவாக குறைக்கப்படும் என்ற தகவலில் உண்மையில்லை. இறக்குமதி பாதிப்பால் தட்டுப்பாடு ஏற்பட்டாலும், எடையை குறைக்கும் எந்த திட்டமும் இல்லை. சிலிண்டர் தட்டுப்பாடு மற்றும் எடை குறைப்பு குறித்து பரவும் தகவல்கள் அனைத்தும் வெறும் யூகங்களே. பொதுமக்கள் இத்தகைய ஆதாரமற்ற வதந்திகளை நம்ப வேண்டாம் என்று தெரிவித்தார்.

# உத்தர பிரதேசத்தில் 2 தமிழர்கள் டிஜிபியாக பதவி உயர்வு





**புதுடெல்லி, மார்ச் 26:**

உத்தர பிரதேசத்தில் ஐபிஎஸ் அதிகாரிகளான டி.பிரகாஷ், எல்.வி.ஆண்டனி தேவ் குமார் ஆகிய இரு தமிழர்களுக்கு டிஜிபியாக பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஒருவர் மாநில காவல் துறைக்கு தலைமையேற்கும் வாய்ப்பு உள்ளது.

திருநெல்வேலி பாளையங்கோட்டையைச் சேர்ந்தவர் டி.பிரகாஷ். சென்னை கிறிஸ்தவக் கல்லூரியில் பொது நிர்வாகத்தில் எம்.ஏ., எம்.பில். பட்டமும் பெற்றார். பேராசிரியர் பணிக்கு முயன்ற இவர், மத்திய அரசின் யுபிஎஸ்சி தேர்வை எழுதினார்.

அதில் 1994ல் அவரது முதல் முயற்சியிலேயே ஐபிஎஸ் கிடைத்தது. உ.பி.மாநில பிரிவில் பணி ஒதுக்கப்பட்டது. தற்போது, முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையிலான பாஜக ஆட்சியில் உ.பி. ரயில்வே ஏடிஜிபியாக அவர் சிறப்புடன் பணியாற்றி வந்தார். இந்நிலையில், அவருக்கு டிஜிபி பதவி உயர்வு அளிக்கப்பட்டு உள்ளது. இதுபோல் உ.பி.யில் ஐபிஎஸ் அதிகாரியாகப் பணியாற்றும் மற்றொரு தமிழர் எல்.வி ஆண்டனி தேவ் குமார்.

திருநெல்வேலி, திசையன்விளையை சேர்ந்த இவர், முதுகலையுடன் சட்டமும் பயின்றவர்.

யுபிஎஸ்சி தேர்வில் தீவிரம் காட்டி வந்த இவருக்கு 1994-ல் ஐபிஎஸ் கிடைத்தது. உ.பி. மாநிலப் பிரிவில் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. இவர் பணியில் நேர்மை காரணமாக எவரும் இல்லாத வகையில் அதிக முறை பணியிட மாற்றம் செய்யப்பட்டு வந்தார்.

உளவுத் துறையின் ஆக்ரா மாவட்ட கண்காணிப்பாளர் உள்ளிட்ட பல முக்கியப் பொறுப்புகளை ஆண்டனி வகித்துள்ளார். ராமர் கோயில் பாதுகாப்புக்காக புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள சிறப்பு பாதுகாப்பு படை தலைமை அதிகாரியாகவும் இருந்து அதை அமைத்தார். ஏடிஜிபியான ஆண்டனி தற்போது, மாநில காவல்துறை தலைமையகத்தின் ரூல்ஸ் அண்ட் மேனுவல்ஸ் பிரிவின் தலைமை அதிகாரியாக உள்ளார்.

# கருணைக் கொலை நடவடிக்கைக்கு உள்ளான ஹரிஷ் ராணாவின் உயிர் பிரிந்தது





**லக்னோ, மார்ச் 26:**

உத்தர பிரதேச மாநிலம், காஜியாபாத்தைச் சேர்ந்த பஞ்சாப் பல்கலைக்கழக மாணவரான ஹரிஷ் ராணா கடந்த 2013-ம் ஆண்டில் 4-ஆவதுமாடியில் விளையாடிக் கொண்டிருந்தபோது கீழே தவறி விழுந்தார். இதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து, கடந்த 13 ஆண்டுகளாக அவர் கோமாவில் சிகிச்சை பெற்று வந்தார். அவரது உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையில் ஹரிஷை கருணைக் கொலை செய்ய அனுமதிக்கக் கோரி, சுப்ரீம் கோர்ட்டில் அவரின் பெற்றோர் ரிட் மனு தாக்கல் செய்தனர். மனுவை விசாரித்த சுப்ரீம் கோர்ட்டு அவருக்கு அளிக்கும் சிகிச்சையை நிறுத்த அனுமதியளித்தது. இந்த விவகாரத்தை மனிதாபிமான முறையில் அணுகுவது அவசியம். ஆதலால் சம்பந்தப்பட்ட நபரின் கண்ணியத்துக்கு எந்த பங்கமும் ஏற்படாமல் அவருக்கான சிகிச்சையை நிறுத்துவதுதொடர்பானதிட்டம் செயல்படுத்தப்படுவதை டெல்லி எய்ம்ஸ் உறுதி செய்ய வேண்டும். கருணைக் கொலை தொடர்பான சட்டத்தைக் கொண்டுவருவது குறித்து மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது. நாட்டில், கருணைக் கொலை செய்ய சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்திருப்பதுவரலாற்றில் இதுவே முதல்முறை ஆகும். இந்தநிலையில், மாடியில் இருந்துவிழுந்து 13 ஆண்டுகள் கோமாவில் இருந்த காசியாபாத் இளைஞர் ஹரிஷ் ராணாவின் (31) உயிர் பிரிந்தது. கடந்த 14ம் தேதி டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிர் காக்கும் கருவிகள் நிறுத்தப்பட்ட நிலையில், 10 நாட்களில் உயிரிழந்துள்ளார்.

# மூன்றாம் பாலினத்தவர் சட்டத் திருத்த மசோதா: மக்களவையில் நிறைவேற்றம்




**புதுடெல்லி, மார்ச் 26:**

'மூன்றாம் பாலினத்தவா்' (திருநங்கை-திருநம்பி) என்ற வார்த்தைக்கு துல்லிய வரையறை அளிப்பதுடன், அந்த பாலினத்தவருக்கு இழைக்கப்படும் குற்றங்களின் தீவிரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் தண்டனைகளை அதிகரிக்க செய்யும் நோக்கில் இவாகளுககான 2019-ஆம் ஆண்டு சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளும் நோக்கில் 'மூன்றாம் பாலினத்தவா (உரிமைகள் பாதுகாப்பு) திருத்த மசோதா 2026' என்ற மசோதாவை மத்திய அரசு கொண்டுவந்தது.

'தற்போதுள்ள சட்டத்தின் பலன்கள் மற்றும் பாதுகாப்பு முழுமையாகச் சென்றடைய வேண்டிய மூன்றாம் பாலினத்தவரை முறையாகவும், உறுதியாகவும் அடையாளம் காண்பதற்குத் துல்லியமான வரையறை மிகவும் அவசியம் என்றும் மசோதாவில் வலியுறுத்தப்பட்டது.

இதன் மீது விவாதம் நடத்தி, ஒப்புதல் பொறுவதற்காக அந்த மசோதாவை, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை அமைச்சா வீரேந்திர குமாா மக்களவையில் செவ்வாய்க்கிழமை தாக்கல் செய்தாா். அப்போது பேசிய அவா, 'சட்டத்தின் பலன்கள் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்த 'மூன்றாம் பாலினத்தவா' என்பதற்கான துல்லியமான வரியறை வகுக்கப்படுவது அவசியம். அதற்காகவே இந்த மசோதா அறிமுகம் செய்யப்படுகிறது. இவாகளுக்கென தனி மருத்துவ வாரியம் உருவாக்கப்படுவதையும் இந்த மசோதா வகை செய்கிறது. மாவட்ட ஆட்சியாகள் சாாபில் இவாகளுக்கென அடையாள அட்டைகளும் வழங்கப்படும்' என்றாா.

விவாதத்தில் பங்கேற்ற காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி பேசுகையில், 'மூன்றாம் பாலினத்தவரின் அடையாளத்தை உறுதிப்படுத்த மருத்துவ வாரியம் அமைக்கப்படுவது என்பதும், அவாகளுக்கான துல்லியமான வரையறையை வகுப்பது என்பதும் ஜனநாயக நடைமுறை அல்ல; மாறாக, பிரதமா மோடி அரசின் சாவாதிகார நடவடிக்கையாகும். இதுதொடா்பாக, மூன்றாம் பாலினத்தவரின் விரிவான கருத்துகளைப் பெறும் வகையில், இந்த மசோதா நாடாளுமன்ற நிலைக் குழு ஆய்வுக்கு பரிந்துரைக்கப்பட வேண்டும்' என்றாா.

'பாலின அடையாளத்தை சுய நிா்ணயம் செய்துகொள்ளும் உரிமையில் மத்திய அரசு தலையிடுகிறது' என்று குறிப்பிட்ட திமுக உறுப்பினா தமிழச்சி தங்கபாண்டியன், 'இந்த மசோதா நாடாளுமன்ற நிலைக்குழு ஆய்வுக்கு அனுப்பப்பட வேண்டும்' என்று வலியுறுத்தினாா. விவாதங்களுக்கு பதிலளித்த மத்திய அமைச்சா வீரேந்திர குமாா, 'மூன்றாம் பாலினத்தவா சட்ட அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பைப் பெறுவதை இந்த மசோதா தொடா்ந்து உறுதி செய்யும். என்றாா.

## சவாலான தருணங்களில் ஆதரவு; ஈரான் தூதரை சந்தித்து பாராட்டிய மத்திய அமைச்சர் ஜெய்சங்கர்

**புதுடெல்லி, மார்ச் 26:**

அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் அதன் தளங்கள் அமைந்த பகுதிகள் மீது கடுமையாக தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால், மேற்காசியாவில் தொடர்ந்து பதற்ற நிலை நீடித்து வருகிறது. ஈரானில் வசிக்க கூடிய இந்தியர்கள் பாதுகாப்பாக இந்தியாவுக்கு விமானம் வழியே வருவதற்கும் வழிவகை செய்யப்பட்டு உள்ளது. இந்நிலையில், மத்திய வெளிவிவகார துறைக்கான மந்திரி ஜெய்சங்கர் அவருடைய எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்ட செய்தியில், இந்தியாவுக்கான ஈரான் தூதர் டாக்டர் முகமது பதாலியை நேரில் சந்தித்து பேசினேன். அப்போது, மேற்காசியாவில் காணப்படும் மோதல் தொடர்பான விசயங்களை பற்றி இருவரும் கலந்து ஆலோசித்தோம். இந்த சவாலான தருணங்களில் ஈரானிலுள்ள இந்தியர்களுக்கு ஆதரவு அளித்ததற்காக நான் பாராட்டுகளை தெரிவித்து கொண்டேன் என தெரிவித்து உள்ளார்.

## இந்தியாவுக்கு எதிரான சதிச்செயல்: தடைசெய்யப்பட்ட அமைப்பின் தலைவிக்கு ஆயுள் தண்டனை

**புதுடெல்லி, மார்ச் 26:**

ஜம்மு-காஷ்மீரை சேர்ந்தவர் அசியா அன்ருபி (வயது 62). இவர் 1987ம் ஆண்டு துக்தரன் இ மிலட் என்ற அமைப்பை தொடங்கினார். இந்த அமைப்பின் மூலம் காஷ்மீரில் இந்தியாவுக்கு எதிரான சதிச்செயல்களில் ஈடுபட்டார். மேலும், பயங்கரவாதத்திற்கு ஆதரவான கருத்துகளை தெரிவித்து வந்தார். இந்தியாவுக்கு எதிராக வெறுப்பு பேச்சு, காஷ்மீர் பிரிவினைவாதத்திற்கு ஆதரவு, பயங்கரவாத செயல்களுக்கு ஆதரவு உள்பட பல்வேறு நடவடிக்கைகளை அசியா அன்ருபி தனது கூட்டாளிகளான நஹிதா நஸ்ரின் (வயது 58), சோபி பமிதா (வயது 48) ஆகியோருடன் ஈடுபட்டு வந்தார். இதையடுத்து, தேசத்திற்கு எதிரான சதிச்செயலில் ஈடுபட்ட வழக்கில் துக்தரன் இ மிலட் அமைப்பின் தலைவி அசியா அன்ருபி மற்றும் அவரது கூட்டாளிகள் நஸ்ரின், பமிதா என 3 பேரும் கடந்த 2018ம் ஆண்டு தேசிய பாதுகாப்பு முகமையால் (என்ஐஏ) கைது செய்யப்பட்டனர். அவரது அமைப்பான துக்தரன் இ மிலட்டிற்கு மத்திய அரசு தடை விதித்தது.

இந்நிலையில், சிறையில் அடைக்கப்பட்ட அசியா அன்ருபி உள்பட 3 பேர் மீதும் சதிச்செயல், பயங்கரவாதத்திற்கு ஆதரவு உள்பட பல்வேறு வழக்குகளில் டெல்லியில் உள்ள என்ஐஏ சிறப்பு கோர்ட்டில் விசாரணை நடைபெற்றது.

இந்த விசாரணையில் அசியா அன்ருபி மற்று அவரது கூட்டாளிகள் நஸ்ரின், பமிதா ஆகிய 3 பேரும் குற்றவாளிகள் என கோர்ட்டு தீர்ப்பளித்தது. மேலும், குற்றவாளி அசியா அன்ருபிக்கு ஆயுள் தண்டனையும் அவரது கூட்டாளிகள் நஸ்ரின் , பமிதாவுக்கு தலா 30 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதித்து கோர்ட்டு உத்தரவிட்டது.

## கேரளம்: தேர்தல் ஆணைய கடிதத்தில் பாஜக முத்திரை இருந்ததால் சர்ச்சை

**புதுடெல்லி, மார்ச் 26:**

நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு கடந்த 2019-ஆம் ஆண்டு மார்ச் 19-ஆம் தேதியிட்ட கடிதத்துடன் தேர்தல் ஆணையம் அனுப்பிய எழுத்துபூர்வ சான்றில், அந்த ஆணையத்தின் முத்திரைக்குப் பதிலாக கேரள பாஜகவின் முத்திரை இருந்தது. இந்தச் சான்றை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 'எக்ஸ்' தளத்தில் பகிர்ந்ததை தொடர்ந்து சர்ச்சை ஏற்பட்டது. அந்தச் சான்றில் பாஜக முத்திரை இருந்ததன் மூலம், தேர்தல் ஆணையத்தையும், பாஜகவையும் ஒரே அதிகார மையம் கட்டுப்படுத்துகிறது என்பதில் எந்த ரகசியமும் இல்லை என்றும் அக்கட்சி பதிவிட்டது. இதைத்தொடர்ந்து கேரள தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்ட அறிக்கையில், 'தேர்தல் ஆணையக் கடிதத்தில் பாஜகவின் முத்திரை இருந்தது அந்தக் கடிதத்தை நகல் எடுக்கும்போது ஏற்பட்ட பிழையாகும். அது உடனடியாகக் கண்டறியப்பட்டு திருத்தப்பட்டது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் குற்றப் பின்னணியை வெளியிடுவது தொடர்பாக 2019-ஆம் ஆண்டின் தேர்தல் ஆணைய வழிகாட்டுதல்கள் குறித்து சில விளக்கங்களைக் கோரி, அண்மையில் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தை கேரள பாஜகவினர் அணுகினர். அவர்களின் கோரிக்கை கடிதத்துடன், 2019-ஆம் ஆண்டின் வழிகாட்டுதல் நகலை அக்கட்சி சமர்ப்பித்தது.

அக்கட்சி வழங்கிய நகலில் பாஜகவின் முத்திரை இருப்பதை தேர்தல் ஆணையம் கவனிக்கத் தவறியதுடன், வழிகாட்டுதல்கள் குறித்து தெளிவுபடுத்த அந்த நகலை பிற அரசியல் கட்சிகளுக்கு தவறுதலாக விநியோகித்துவிட்டது. இந்தத் தவறை சரி செய்ய உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நேர்மையாகவும் எந்த அழுத்தத்துக்கு உள்ளாகாமலும் தேர்தல் நடைமுறைகளை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது' என்று தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்த விசாரணை நிறைவடையும் வரை, இந்தப் பிழைக்குக் காரணமான உதவி பிரிவு அலுவலர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தலைமைத் தேர்தல் அதிகாரி 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டார்.

## மகளிருக்கு ஆண்டுக்கு ரூ.40,000 உதவித்தொகை- அகிலேஷ் யாதவ் அறிவிப்பு

**புதுடெல்லி, மார்ச் 26:**

உத்தர பிரதேசத்தில் அடுத்த ஆண்டு நடைபெறும் சட்டப்பேரவைத் தேர்தலை பெண்களின் முன்னேற்றம், அவர்களை பொருளாதாரரீதியாக மேம்படுத்துவது ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்கொள்ள இருக்கிறோம். இதன்மூலம் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியும் உறுதி செய்யப்படும். எனவே, பேரவைத் தேர்தலின்போது பெண்களை மையப்படுத்தி பல திட்டங்கள் அறிவிக்கப்படவுள்ளன. முக்கியமாக விளிம்புநிலையில் உள்ள பெண்களுக்கு ஆண்டுக்கு ரூ.40,000 உதவித்தொகை வழங்கப்படும்.

# கொலம்பியாவில் ராணுவ விமானம் விபத்து- 66 பேர் உயிரிழப்பு



**கொலம்பியா, மார்ச் 26:**

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் ராணுவ போக்குவரத்து விமானம் ஒன்று தரையில் விழுந்து விபத்துக்குள்ளானதில், அதில் பயணம் செய்த ராணுவ வீரர்கள் உள்பட 66 பேர் உயிரிழந்தனர்.

இக்கோர விபத்து அந்நாட்டையே பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அந்நாட்டு அரசு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தது.

கொலம்பியாவின் புட்டுமாயோ மாகாணத்தில் உள்ள பியூர்ட்டோ லெகுய்சாமோ விமான நிலையத்திலிருந்து 128 பேருடன் புறப்பட்ட 'ஹெர்குலிஸ் சி-130' ரக விமானம், வானில் பறக்கத் தொடங்கிய சில நிமிஷங்களிலேயே கட்டுப்பாட்டை இழந்து, அருகில் இருந்த வயல்வெளியில் விழுந்து தீப்பிடித்தது.

இதில் விமானத்தில் பயணித்த 115 ராணுவ வீரர்கள், 11 பணியாளர்கள் மற்றும் 2 காவல்துறையினரில் 66 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 57 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர்.

விமானம் விழுந்து நொறுங்கிய சத்தம் கேட்டு ஓடி வந்த உள்ளூர் பொதுமக்கள், தீயை அணைக்க முயன்றதோடு, காயமடைந்த வீரர்களைத் தங்களின் இருசக்கர வாகனங்களிலேயே மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். தொடர்ந்து, ராணுவத்தினரும் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். மாயமான 4 வீரர்களைத் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

அதிபர் கடும் எச்சரிக்கை: இந்த விபத்துக்கு இரங்கல் தெரிவித்த அதிபர் குஸ்தாவோ பெட்ரோ, ராணுவ விமானங்களை நவீனப்படுத்தும் தனது முயற்சிக்கு முட்டுக்கட்டை போடும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார். நிர்வாகக் குளறுபடிகள் மற்றும் அதிகாரிகளின் மெத்தனப் போக்கே இத்தகைய விபத்துகளுக்குக் காரணம் என அவர் சாடினார்.

# இஸ்ரேலில் ஈரான் குண்டுமழை

ஈரான் தலைநகர் டெஹ்ரான் மீது நடத்திய வான்வழித் தாக்குதலுக்குப் பதிலடியாக, இஸ்ரேலின் டெல் அவிவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களைக் குறிவைத்து நூற்றுக்கணக்கான ஏவுகணைகள், ட்ரோன்கள் மூலம் ஈரான் தாக்கியது.

4-ஆவது வாரத்தில் உள்ள இப்போரை முடிவுக்குக் கொண்டு வர ஈரானுடன் அமெரிக்கா ரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்த நிலையிலும், இருதரப்பிலும் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருகின்றன.

இஸ்ரேல் மீது செவ்வாய்க்கிழமை அதிகாலை முதல் ஈரான் படைகள் இடைவிடாத தாக்குதலைத் தொடங்கின. சுமார் 100 கிலோ வெடிபொருள்களுடன் ஏவுகணை ஒன்று, இஸ்ரேலின் அதிநவீன வான்பாதுகாப்பு அமைப்பை மீறி டெல் அவிவ் நகரின் மையப்பகுதியில் விழுந்து வெடித்தது.

இதில் கட்டடங்கள் பலத்த சேதமடைந்தன; பொதுமக்கள் 4 பேர் காயமடைந்தனர். இதுமட்டுமன்றி, சவூதி அரேபியா, பஹ்ரைன் ஆகிய நாடுகளின் வான் எல்லைகளிலும் ஈரான் ட்ரோன்கள் ஊடுருவின.

அமெரிக்காவின் இரட்டை நிலை: ஹோர்முஸ் நீரிணையைத் திறக்கும் முயற்சியாக ஈரானின் எரிசக்தி கட்டமைப்புகளைத் தாக்குவதற்கான காலக்கெடுவை டிரம்ப் 5 நாள்களுக்கு ஒத்திவைத்தார்.

இதனிடையே, அமெரிக்கா பேச்சுவார்த்தை பற்றி ஒருபுறம் பேசினாலும், மத்திய கிழக்கை நோக்கி அந்நாட்டின் ஆயிரக்கணக்கான கடற்படையினர் விரைந்து கொண்டிருக்கின்றனர். இது ஈரானின் முக்கிய எண்ணெய் முனையமான கார்க் தீவை அமெரிக்கா கைப்பற்றக்கூடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# ட்ரம்பின் போர் நிறுத்த அறிவிப்புக்கு முன் நடந்த மர்ம வர்த்தகத்தில் 20 நிமிடத்தில் ரூ.840 கோடி லாபம்



**நியூயார்க், மார்ச் 26:**

ஈரான் மீதான தாக்குதலை தற்காலிகமாக 5 நாட்களுக்கு நிறுத்தி வைப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தனது 'ட்ரூத் சோஷியல்' தளத்தில் நேற்று முன்தினம் பதிவிட்டார். இந்த அறிவிப்பு வெளியாவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னதாக, சர்வதேச சந்தையில் நடந்த வர்த்தகம் மூலம் மர்ம நபர் ஒருவர் வெறும் 20 நிமிடங்களில் ரூ.840 கோடி லாபம் ஈட்டியுள்ளார்.

இதுகுறித்து சந்தை ஆய்வாளர்கள் கூறியதாவது: திங்கள்கிழமை காலை நியூயார்க் நேரப்படி 6:50 மணிக்கு (இந்திய நேரப்படி மாலை 4:20 மணி) இரண்டு முக்கிய ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி முதலாவதாக, எஸ் அண்ட் பி 500 பியூச்சர் குறியீட்டில் சுமார் ரூ.12,600 கோடி மதிப்பிலான பங்குகள் வாங்கப்பட்டுள்ளன.

அதே நேரத்தில், இரண்டாவதாக கச்சா எண்ணெய் பியூச்சர் சந்தையில் ரூ.1,615 கோடி மதிப்பிலான விற்பனை ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. பொதுவாக, உலகளவில் நிச்சயமற்ற சூழலில் வர்த்தகம் மந்தமாக இருக்கும் அதிகாலை வேளையில், எந்தவித முன்னறிவிப்பும் இன்றி இவ்வளவு பெரிய தொகையை ஒருவர் முதலீடு செய்தது சந்தையை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

ட்ரம்பின் அறிவிப்பு வெளியானவுடன் பங்குச்சந்தை 2.5% உயர்ந்தது. அதேசமயம் கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 109 டாலரிலிருந்து 92 டாலராகச் சரிந்தது. இதன் மூலம், கச்சா எண்ணெய் வர்த்தகத்தில் மட்டும் அந்த மர்ம நபர் வெறும் 20 நிமிடங்களில் ரூ.840 கோடி லாபம் பார்த்துள்ளார். பங்குச்சந்தை உயர்வையும் கணக்கிட்டால் இந்த லாபம் பன்மடங்கு அதிகமாகவே இருக்கும் எனத் தெரிகிறது. இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.

போர் தொடர்பான முக்கிய அறிவிப்பு வெளியாவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பாக இவ்வளவு துல்லியமாக வர்த்தகம் செய்யப்பட்டுள்ளதால், அரசின் ரகசியத் தகவல்கள் முன்கூட்டியே கசிந்ததா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனினும், வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் குஷ் தேசாய் இப்புகார்களை மறுத்துள்ளார்.

"அதிபர் ட்ரம்பின் நிர்வாகம் அமெரிக்க மக்களின் நலனுக்காக மட்டுமே செயல்படுகிறது. ஆதாரமற்ற இத்தகைய குற்றச்சாட்டுகள் பொறுப்பற்றவை" என்று அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்கப் பங்குச் சந்தை கட்டுப்பாட்டு வாரியம் இதுகுறித்து எந்தவித அதிகாரப்பூர்வ கருத்தையும் தெரிவிக்கவில்லை.

# ஈரான் - அமெரிக்க போர் நிறுத்தம் தொடர்பாக பாகிஸ்தான் சமரச முயற்சி? - இஸ்லாமாபாத்தில் பேச்சுவார்த்தை



**இஸ்லாமாபாத், மார்ச் 26:**

மத்திய கிழக்கில் போரில் ஈடுபட்டு வரும் அமெரிக்கா-இஸ்ரேல், ஈரான் இடையே சமரச முயற்சியை ஏற்படுத்த பாகிஸ்தான் முயன்று வருவதாக 'பைனான்சியல் டைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஆசிம் முனீருக்கும் ஈரானுக்கும் இடையில் உள்ள நெருக்கமும், அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புடன் அவர் கொண்டுள்ள சுமுகமான உறவும் இந்தப் பேச்சு வார்த்தை முயற்சிக்கு அடிப்படையாக அமைந்துள்ளதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீதான தாக்குதல்களைக் கண்டிக்கும் அதே வேளையில், பதற்றத்தை தணிக்க ராஜதந்திர ரீதியில் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும் என ஈரானிடம் பாகிஸ்தான் கோரி வந்தது.

இந்நிலையில், ட்ரம்ப் நிர்வாகத்தின் உயர் அதிகாரிகளுக்கும் ஈரானுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையை இந்த வாரத்திலேயே இஸ்லாமாபாத்தில் நடத்த பாகிஸ்தான் முன்வந்துள்ளதாக கூறப்படுகிறது. இதற்காக, பாகிஸ்தான் ராணுவத் தளபதி ஆசிம் முனீர் ஞாயிற்றுக்கிழமை அதிபர் ட்ரம்ப்புடன் பேசியதாகவும்.

மறுபுறம், பிரதமர் ஷபாஸ் ஷெரீப் திங்களன்று ஈரான் அதிபர் மசூத் பெசெஷ்கியானுடன் ஆலோசனை நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போரில் வெற்றி.. அணு ஆயுதம் வைத்துக்கொள்ள மாட்டோம் என ஈரான் உறுதி! - டிரம்ப்



**வாஷிங்டன், மார்ச் 26:**

அடுத்த ஐந்து நாள்கள் ஈரான் மீது தாக்குதல்களை நடத்த வேண்டாமென அமெரிக்க அதிபர் டிரம்ப் தமது நாட்டின் படைகளுக்கு உத்தரவிட்டுள்ளதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், நேற்று வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் அமெரிக்க அதிபர் டிரம்ப் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் பேசுகையில், "நான் இதை முன்கூட்டியே சொல்ல விரும்பவில்லை, ஆனால், அவர்கள் (ஈரான்) ஒருபோதும் அணு ஆயுதத்தை வைத்திருக்க மாட்டார்கள் என்று ஒப்புக்கொண்டுள்ளனர்.

அவர்கள் அமெரிக்காவுக்கு விலைமதிப்புமிக்க பரிசு ஒன்றையும் வழங்கியுள்ளனர். ஈரானுடனான போரில் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம். ஈரானின் ராணுவத்தளவாடங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. ஈரானுக்கு எதிரான அதிரடி நடவடிக்கை இவ்வளவு விரைவாக முடிவடைந்தது குறித்து பாதுகாப்புச் செயலாளர் பீட் ஹெக்ஷேத் ஏமாற்றமடைந்துள்ளார்.

ஈரானுக்கு எதிரான போர் குறித்து சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. அவர்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ள ஆர்வமாக இருக்கிறோம்" என்றார்.

இருப்பினும், அமெரிக்காவுடனோ அல்லது இஸ்ரேலுடனோ எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்தவில்லை என்று ஈரான் மறுத்துள்ளது.

அதேநேரத்தில், துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, மத்திய கிழக்குக்கான சிறப்புத்தூதர் ஸ்டீவ் விட்காஃப் மற்றும் ஜாரெட் குஷ்னர் ஆகியோர் ஈரானுடனான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வந்ததாக டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

# உக்ரைன் மீது ரஷியா மீண்டும் சரமாரி தாக்குதல்: 5 பேர் உயிரிழப்பு; மின் விநியோகம் பாதிப்பு

**வாஷிங்டன், மார்ச் 26:**

உக்ரைன் நாட்டின் பல்வேறு நகரங்களைக் குறிவைத்து ரஷிய படைகள் செவ்வாய்க்கிழமை அதிகாலை நடத்திய ஏவுகணை, ட்ரோன் தாக்குதல்களில் 5 பேர் உயிரிழந்தனர். 20-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

உக்ரைனின் 11 மாகாணங்களில் உள்ள குடியிருப்புகள் மற்றும் மின் கட்டமைப்புகளை இலக்காகக் கொண்டு இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சுமார் 392 ட்ரோன்கள் மற்றும் 34 ஏவுகணைகளை ரஷியா ஏவியதாகவும், அவற்றில் பெரும்பாலானவற்றை உக்ரைன் வான் பாதுகாப்புப் படைகள் சுட்டு வீழ்த்தியதாகவும் அந்நாட்டு ராணுவம் தெரிவித்துள்ளது. இத்தாக்குதலில் ஸபோரிஷியா, பொல்டாவா மாகாணங்கள் கடும் பாதிப்புக்கு உள்ளாகின. ஸபோரிஷியாவில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் மீது விழுந்த ஏவுகணைகளால் ஒருவர் உயிரிழந்தார்.

பொல்டாவாவில் உள்ள ஒரு உணவகம் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதலில் 5 வயது சிறுவன் உள்பட இருவர் உயிரிழந்தனர். கார்கிவ் பகுதியில் ரயில் ஒன்றின் மீது நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் 61 வயது முதியவர் ஒருவர் உயிரிழந்தார். இதேபோல், கெர்சன் நகரிலும் ஒரு உயிரிழப்பு பதிவானது. இத்தாக்குதல் காரணமாக உக்ரைனின் மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கட்டமைப்பு கடுமையாக பாதிக்கப்பட்டது. 6 மாகாணங்களில் மின் விநியோகம் முற்றிலுமாகத் துண்டிக்கப்பட்டது.

மால்டோவாவில் மின்பாதிப்பு: உக்ரைன் வழியாக மால்டோவா நாட்டுக்குச் செல்லும் முக்கிய மின்சாரப் பாதையும் ரஷிய தாக்குதலில் சேதமடைந்ததால், மால்டோவாவில் மின்தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது. ரஷியாவின் இந்தச் செயல் அண்டை நாடுகளின் எரிசக்தி பாதுகாப்பையும் அச்சுறுத்துவதாக மால்டோவா அதிபர் மையா சாண்டு கண்டனம் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலன்ஸ்கி இதுகுறித்து கூறுகையில், 'ரஷியாவின் இந்த மனிதாபிமானமற்ற தாக்குதல் குறித்து உளவுத்துறை ஏற்கெனவே எச்சரித்திருந்தது. உக்ரைனின் வான் பாதுகாப்பை உறுதிப்படுத்த அமெரிக்கா உள்பட மேற்கத்திய நாடுகள் தங்களுக்கு வழங்க ஒப்புக்கொண்ட ஆயுதங்களை உடனடியாக வழங்க வேண்டும்' எனக் கேட்டுக்கொண்டார்.

ஈரான் போரில் அமெரிக்காவின் கவனம் திரும்பியுள்ள நிலையில், உக்ரைனில் ரஷியா தனது தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளதாக சர்வதேச அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். உக்ரைனின் ஸபோரிஷியாவில் ரஷிய தாக்குதலால் அடுக்குமாடி குடியிருப்பில் பற்றி எரியும் தீயை அணைக்கும் பணியில் தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர்.

# மேற்காசிய போர்: இஸ்ரேலில் பலி 16 - ஆக உயர்வு! 4,564 பேர் காயம்!!



போர் தொடங்கியதிலிருந்து இஸ்ரேலில் இதுவரை 16 பேர் பலியானதாகவும் 4,564 பேர் காயமடைந்ததாகவும் அந்நாட்டின் தேசிய அவசர மருத்துவ சேவை தெரிவித்துள்ளது.

இஸ்ரேல், அமெரிக்கா கூட்டாக இணைந்து கடந்த பிப்.28 ஆம் தேதி ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. தாக்குதல் தொடங்கிய முதல் நாளிலேயே ஈரானின் உச்ச தலைவரான அயத்துல்லா அலி கமேனி கொல்லப்பட்டார்.

இதன் விளைவாக ஈரானும், இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது. ஆகையால் இருபக்கமும் தாக்குதல்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் இஸ்ரேலின் தேசிய அவசர மருத்துவ சேவையான மாகன் டேவிட் அடோமின் பேரிடர் மேலாண்மை ஒருங்கிணைப்பாளர் சாய்ம் ரஃபலோவ்ஸ்கி கூறுகையில், "பிப்ரவரி மாத இறுதியில் இருந்து 16 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளது. மேலும், 4564 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுள்ளனர்" எனத் தெரிவித்தார்.

# ஹார்முஸ் ஜலசந்தியில் 2 எரிவாயு கப்பல்களுக்கு இந்திய கடற்படை பாதுகாப்பு









**தெஹ்ரான், மார்ச் 26:**

ஹார்முஸ் ஜலசந்தியை கடந்த 2 எரிவாயு கப்பல்களுக்கு இந்திய கடற்படையின் போர்க் கப்பல் பாதுகாப்பு வழங்கி வருகிறது. அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டுப்படைகள் மற்றும் ஈரான் இடையிலான போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியில் எண்ணெய் கப்பல் போக்குவரத்து முடங்கி உள்ளது.

ஈரான் ராணுவத்தின் சிறப்பு அனுமதியுடன் ஷிவாலிக், நந்தா தேவி ஆகிய எரிவாயு (எல்பிஜி) கப்பல்கள், ஜக் லட்கி என்ற கச்சா எண்ணெய் கப்பல் ஆகியவை இந்தியா வந்தன. இந்த சூழலில் ஜக் வசந்த், பைன் காஸ் ஆகிய 2 எரிவாயு கப்பல்கள் ஈரான் ராணுவ சிறப்பு அனுமதியுடன் நேற்று முன்தினம் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்தன.

இந்த கப்பல்கள் நேற்று சர்வதேச கடல் எல்லை பகுதியை வந்தடைந்தன. அவற்றுக்கு இந்திய கடற்படையைச் சேர்ந்த ஒரு போர்க்கப்பல் பாதுகாப்பு வழங்கி வருகிறது. மார்ச் 26 முதல் 28-ம் தேதிக்குள் இரு எரிவாயு கப்பல்களும் இந்தியா வந்து சேரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து மத்திய கப்பல் போக்குவரத்து துறை சிறப்பு செயலாளர் ராஜேஷ் குமார் சின்ஹா கூறும்போது, "இரு எரிவாயு கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து இந்தியா நோக்கி வந்து கொண்டிருக்கின்றன. இந்த கப்பல்களில் 92,700 மெட்ரிக் டன் எல்பிஜி காஸ் இருக்கிறது" என்றார்.

இதுகுறித்து மத்திய பெட்ரோலிய துறை வட்டாரங்கள் கூறியதாவது: சமையல் காஸ் தட்டுப்பாட்டை சமாளிக்க உள்நாட்டில் எல்பிஜி உற்பத்தி அதிகரிக்கப்பட்டு உள்ளது. இதன்படி நாள்தோறும் உள்நாட்டில் 55,000 டன் எல்பிஜி உற்பத்தி செய்யப்படுகிறது. ஏற்கெனவே வளைகுடா நாடுகளில் இருந்து 2 எரிவாயு கப்பல்கள் இந்தியா வந்துள்ளன. தற்போது மேலும் 2 எரிவாயு கப்பல்கள் விரைவில் இந்தியா வந்து சேர உள்ளன.

இவை தவிர நெதர்லாந்தில் இருந்து ஹெலாஸ் கிளாடியேட்டர், அமெரிக்காவில் இருந்து காஸ் ஜூபிட்டர் ஆகிய 2 கப்பல்கள் தலா 24,000 டன் எல்பிஜி காஸுடன் இந்தியா வருகின்றன. இவை வரும் 30-ம் தேதி விசாகப்பட்டினம் துறைமுகத்தை வந்து சேரும். அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்து அடுத்தடுத்து எல்பிஜி காஸ் கப்பல்கள் இந்தியாவுக்கு வர உள்ளன.

இதேபோல ரஷ்யாவில் இருந்து அதிக அளவில் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படுகிறது. வளைகுடா பகுதியில் முகாமிட்டுள்ள 12-க்கும் மேற்பட்ட போர்க்கப்பல்கள், ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து வரும் இந்திய எண்ணெய் கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கி வருகின்றன. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.



# அதிமுக கூட்டணி கட்சிகள் போட்டியிடும் தொகுதிகள் வெளியீடு

## "திமுக 175 தொகுதிகளில் உதய சூரியன் சின்னத்தில் போட்டி"





## சிகிச்சைக்கு பணம் கொண்டு சென்றால் வாட்ஸ்அப் ஆதாரம் போதும்: அர்ச்சனா பட்நாயக் அறிவிப்பு

## மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சித்திரை திருவிழா ஏப்.19-ம் தேதி தொடக்கம்

## 'வெயிலில் பணியாற்றுவோர் தினமும் 4 முதல் 5 லிட்டர் தண்ணீர் குடிப்பது அவசியம்'

## தமிழகம், புதுச்சேரியில் 4 டிகிரி வரை வெப்பநிலை அதிகரிக்கும்


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை

26.03.2026 வியாழக்கிழமை

இலவச இ–பேப்பர்